# WWW.WINMEEN.COM

வழங்கும்

# ஜூன் மாத நடப்பு நிகழ்வுகள்

## TNPSC Tamil Current Affairs - June 2017

## 2017 June 1

**1. இமாச்சலப்பிரதேச பொது நிதி மேலாண்மைத்திறன் திட்டத்திற்காக உலக வங்கியுடன் எவ்வளவுக்கான கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**



A. $68 மில்லியன் டாலர்
B. $56 மில்லியன் டாலர்
C. $36 மில்லியன் டாலர்
D. $45 மில்லியன் டாலர்

விடை : C. $36 மில்லியன் டாலர்

சமீபத்தில் இந்தியா, இமாச்சலப்பிரதேச பொது நிதி மேலாண்மைத்திறன் திட்டத்திற்காக, உலக வங்கியுடன் $36 மில்லியன் டாலருக்கான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இமாச்சலப்பிரதேசத்தின் பொது செலவின மேலாண்மை மற்றும் வரி நிர்வாகத்திறனை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். திட்டத்தின் மொத்த செலவு $45 மில்லியன் டாலர்களாகும், அதில் $36 மில்லியன் டாலர்கள் வங்கி நிதியாகும், மீதமுள்ள தொகை மாநில வரவு செலவு திட்டத்திலிருந்து பெறப்பட்ட நிதியாகும். இத்திட்டத்தின் காலம் 5 ஆண்டுகளாகும்.

**2. புதிய பொருளாதார விவகாரச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A. Arvind Mayaram
B. Shaktikanta Das
C. Vijay Kelkar
D. Tapan Ray

விடை : D. Tapan Ray

1982-ம் ஆண்டு குஜராத்தில் IAS அதிகாரியாக பணிபுரிந்த மற்றும் தற்போதைய பெருநிறுவன விவகாரச்செயலாளருமான Tapan Ray, புதிய

பொருளாதார விவகாரச்செயலாளராக கூடுதல் பொறுப்பையேற்றுள்ளார். இவருக்குமுன் Shaktikanta Das இப்பதவியிலிருந்தார். இவர் 2017 மே 31 அன்று ஓய்வுபெற்றார்.

**3. எந்த நாடு Asian Infrastructure Investment Bank (AIIB)-ன் 2017-ம் ஆண்டுக்கான ஆளுநர்கள் கூட்டத்தை நடத்துகிறது?**




A. தென்கொரியா
B. சீனா
C. இந்தியா
D. தென்னாப்பிரிக்கா

விடை : A. தென்கொரியா

Asian Infrastructure Investment Bank (AIIB)-ன் 2017-ம் ஆண்டுக்கான 2வது வருடாந்திர ஆளுநர்கள் கூட்டம், தென்கொரியாவின் ஜெஜூவில், 2017 ஜூன் 14-15 வரை நடைபெறும். AIIB-ன் முக்கிய நோக்கம் பிராந்தியத்தின் பொருளாதார மேம்பாட்டை, உள்கட்டமைப்பு திட்டங்களை ஆதரிப்பதன் மூலம் ஊக்குவிப்பதாகும். இந்தியாவிலிருந்து நிதியமைச்சர் அருண் ஜெட்லி இக்கூட்டத்தில் கலந்துகொள்வார். AIIB-ன் தலைவர் Jin Liqun ஆவார், இந்தியாவைச்சேர்ந்த முன்னாள் சீன நிதியமைச்சர் D J Pandian இதன் துணைத்தலைவர் மற்றும் தலைமை முதலீட்டு அதிகாரியாவார்.

**4. National Commission for Scheduled Castes (NCSC)-ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A. Keshav Prasad Maurya
B. Ram Shankar Katheria
C. P M Kamalamma
D. PL Poonia

விடை : B. Ram Shankar Katheria

ஆக்ராவைச்சேர்ந்த பா.ஜ.க MP, Ram Shankar Katheria மூன்றாண்டு

காலத்திற்கு National Commission for Scheduled Castes (NCSC)-ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் முன்னாள் தலைவர் PL Poonia-வின் ஓய்வுக்குப்பின்னர் 2016-லிருந்து இப்பதவி காலியாகவேயிருந்தது. இதோடு, L. Murugan NCSC-ன் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். K. Ramulu, Dr. Yogendra Paswan மற்றும் Dr. Swaraj Vidwan இதன் உறுப்பினர்கள் ஆவார்கள். இது தலித்துகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கான, அரசியலமைப்பை அடிப்படையாக்கொண்டு இயங்கும் ஓர் ஆணையமாகும்.

5. எங்கு இந்தியாவின் முதல் "சரக்குக்கிராமம்" அமைக்கப்படவுள்ளது?

A. புது டெல்லி

B. உதய்பூர்

C. வாரணாசி

D. சென்னை



விடை : C. வாரணாசி

இந்தியாவின் முதல் "சரக்குக்கிராமம்" உத்தரப்பிரதேசத்தின் வாரணாசியிலுள்ள இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (Inland Waterways Authority of India) மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. சரக்கு கிராமம் என்பது, கிடங்கு சேவைகள் தேவைப்படும் நிறுவனங்களை ஈர்க்கும் ஓர் உள்கட்டமைப்பு வசதிகளைக்கொண்ட தளமாகும். இது சில்லறை விற்பனையாளர்கள், கிடங்கு வழங்குநர்களின் FMCG சந்தையை இடமாற்றம் செய்ய அனுமதிக்கிறது. இம்முனையம் கங்கைக்கரையோரத்தில் நகருக்கருகில் முன்மொழியப்பட்டுள்ளது.

6. அறிஞர்களுக்கான Woodrow Wilson சர்வதேச மையத்திற்கு, பொதுக்கொள்கை வகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

A. Gopalaswami Parthasarathy

B. Rakesh Sood

C. Srinivas Kumar Sinha

D. Nirupama Rao



விடை : **D. Nirupama Rao**

அமெரிக்காவின் முன்னாள் இந்திய தூதுவரான Nirupama Rao, அறிஞர்களுக்கான Woodrow Wilson சர்வதேச மையத்திற்கு, பொதுக்கொள்கை வகுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் Sino-India கூட்டணி திட்டத்தில் பணிபுரிவார். இவர் வில்சன் மையத்தின் ஆசிய திட்டத்துடன் இணைக்கப்பட்டு, 2017 ஜூன் முதல் 3 மாத காலத்திற்கு வில்சன் மையத்தில் தங்கி பணிபுரிவார். இது உலகளாவிய பிரச்சினைகளை சமாளிக்கும் ஒரு முக்கிய கொள்கைச்சார்பற்ற மன்றமாகும். WWICS என்பது 1968-ல் காங்கிரசால் உருவாக்கப்பட்ட, வாசிங்டன் DC-ஐ தலைமையிடமாகக்கொண்ட, ஜனாதிபதி வில்சனுக்கான தேசிய நினைவுச்சின்னமாகும். வில்சன் மையம், அறிஞர்கள் கலந்துரையாடும் ஒரு கொள்கைச்சார்பற்ற மன்றமாக திகழ்கிறது.


**7. எந்த நாடு 2017 Shanghai Cooperation Organization (SCO)-வை நடத்துகிறது?**

A. கஜகஸ்தான்

B. உஸ்பெகிஸ்தான்

C. தஜிகிஸ்தான்

D. கிர்கிஸ்தான்



விடை : **A. கஜகஸ்தான்**

2017 ஜூன் 8 மற்றும் 9 அன்று கஜகஸ்தானிலுள்ள அஸ்தானாவில், 2017-ம் ஆண்டுக்கான Shanghai Cooperation Organization (SCO)-ன் மாநாடு நடைபெறுகிறது. இந்த உச்சிமாநாட்டில், இந்தியா மற்றும் பாகிஸ்தான், இவ்வமைப்பின் முழு உறுப்பினர்களாக ஆகிறது. SCO என்பது சீன, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், இரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்களால் 2001-ல் ஷாங்காய் நகரில் நிறுவப்பட்ட ஒரு யுரேசிய அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ அமைப்பாகும். இது முக்கியமாக உறுப்பு நாடுகளிடையே இராணுவ ஒத்துழைப்பை நோக்கமாகக்கொண்டது மற்றும் மத்திய ஆசியாவில் உளவுத்துறை ஈடுபாடும், பயங்கரவாத எதிர்ப்பு

நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

**8. உலக பால் தினம் (World Milk Day) எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?**

A. ஜுன் 3

B. ஜுன் 1

C. ஜுன் 4

D. ஜுன் 5




**விடை : B. ஜுன் 1**

உலகளாவிய உணவான பாலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக உணவு மற்றும் வேளாண் அமைப்பு (Food and Agriculture Organization) ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 1 அன்று உலக பால் தினத்தை அனுசரிக்கிறது. இந்நாள், பால் பண்ணையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறது. இந்தியாவில், வெள்ளைப்புரட்சியின் தந்தை Dr. Verghese Kurien-ன் பிறந்தநாள் விழாவைக்கொண்டாடும் வகையில், தேசிய பால் தினம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 அன்று அனுசரிக்கப்படுகிறது.

**9. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை சீனப்பக்கத்திலிருந்து அடைந்த முதல் இந்தியப்பெண் யார்?**

A. Radhika GR

B. Anshu Jamsenpa

C. Anita Kundu

D. Arunima Sinha



**விடை : C. Anita Kundu**

அரியானா மாநிலத்திலுள்ள இசார்-ன் காவல்துறை துணை ஆய்வாளரான Anita Kundu, மே 2017 -ல் சீனப்பக்கத்திலிருந்து எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதல் இந்தியப்பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார். இதற்குமுன் இவர் மே 2013-ல், நேபாளத்திலிருந்து

எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார்.

**10. எந்த மாநிலத்தில் ஸ்ரீ வெங்கடேசுவரா தேசியப்பூங்கா அமைந்துள்ளது?**

A. கேரளா

B. கர்நாடகா

C. இமாச்சலப்பிரதேசம்

D. ஆந்திரப்பிரதேசம்




விடை : D. ஆந்திரப்பிரதேசம்

ஸ்ரீ வெங்கடேசுவரா தேசியப்பூங்கா ஆந்திரப்பிரதேசத்தின் சித்தூர் மற்றும் கடப்பா மாவட்டங்களில் அமைந்துள்ளது. பூங்காவின் மொத்த பரப்பளவு 353 சதுர கி.மீ., ஆகும். இந்தப்பூங்காவில் Talakona, Gundalakona, Gunjana போன்ற பல அருவிகள் உள்ளன. இது ஓநாய், தங்கக்குள்ள நரி, இந்திய நரி, இந்திய புனுகுப்பூனை, காட்டுப்பூனை போன்றவைகளுக்கு வாழிடமாகவுள்ளது.

---

## 2017 June 2

**1. எந்த இந்திய நிறுவனம் 2017 Asia Pacific Quality Network (APQN)-ன் விருதை வென்றுள்ளது?**

A. Telecom Regulatory Authority of India (TRAI)

B. National Assessment and Accreditation Council (NAAC)

C. Indian Space Research Organisation (ISRO)

D. Defence Research and Development Organisation (DRDO)

விடை : B. National Assessment and Accreditation Council (NAAC)

2017 மே 26 அன்று இரஷ்யாவின் மாஸ்கோவில், சர்வதேச விருதான International Co-operation in Quality Assurance-ன், 2017 APQN தர விருதினை, National Assessment and Accreditation Council (NAAC) வென்றுள்ளது. NAAC என்பது இந்தியாவிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களை மதிப்பிட்டு அவற்றை அங்கீகரிக்கும் ஓர் அமைப்பாகும். இதன் தலைமையகம் கர்நாடகாவின்

பெங்களூருவில் அமைந்துள்ளது.

2. செர்பியாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றவர் யார்?

A. Ivica Dacic

B. Tomislav Nikolic

C. Dragan Sutanovac

D. Aleksandar Vucic



விடை : D. Aleksandar Vucic

செர்பிய முன்னேற்றக்கட்சியின் (Serbian Progressive Party) தலைவரான Aleksandar Vucic, 2017 மே 31 அன்று செர்பியாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார். இவருக்குமுன் Tomislav Nikolic செர்பியாவின் ஜனாதிபதியாக இருந்தார். இவர் 2017 ஏப்ரலில் நடைபெற்ற செர்பிய ஜனாதிபதித்தேர்தலில் 55 சதவிகித வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றார். இதற்குமுன் இவர் செர்பியாவின் பிரதம அமைச்சராக பணியிலிருந்தார்.

3. எந்த மாநில அரசு, அலைபேசி உள்ள மற்றும் அல்லாத மக்களுக்காக, டிஜிட்டல் பணப்பையான "T-Wallet"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது?

A. கர்நாடகா

B. ஒடிசா

C. தெலுங்கானா

D. மணிப்பூர்




விடை : C. தெலுங்கானா

இந்தியாவிலேயே முதன்முறையாக, தெலுங்கானா அரசு அதிகாரப்பூர்வமாக, வாடிக்கையாளர்களிடமிருந்து பணப்பரிவர்த்தனை கட்டணம் எதுவும் வசூலிக்காத ஒரு டிஜிட்டல் பணப்பையான "T-Wallet"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பணப்பையை வலை பதிப்பிலும் பயன்படுத்தலாம். பற்று அட்டை (Debit Card), வரவு அட்டை (Credit Card), இணைய வங்கிச்சேவை (Online Banking) அல்லது Mee Seva மையங்களின்

மூலம் பணப்பையை நிரப்பிக்கொள்ளலாம். இதில் அதிகபட்சமாக e-KYC பயனர்கள் ரூ. 1 இலட்சம் வரையும் e-KYC அல்லாத பயனர்கள் ரூ. 20,000 வரையும் பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளலாம். இந்தப்பணப்பை, பரிவர்த்தனை பகுப்பாய்வாளர்கள் மற்றும் விஜயா வங்கியால் உருவாக்கப்பட்டதாகும். இச்சேவையினை வழங்குவதற்காக, மாநில அரசு விஜயா வங்கியுடன் இணைந்துள்ளது. தற்போது, இந்தப்பணப்பை ஆண்ட்ராய்டு பதிப்பில் ஆங்கிலம், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளுடன் கிடைக்கிறது.

**4. Institute for Economics and Peace (IEP)-ன் படி 2017 Global Peace Index-ல் இந்தியாவின் தரநிலை என்ன?**

**A. 141வது**

**B. 133வது**

**C. 155வது**

**D. 137வது**




<u>விடை</u> : **D. 137வது**

பொருளாதாரம் மற்றும் சமாதான நிறுவனம் **(IEP)** வெளியிட்டுள்ள **2017** உலக அமைதிக்குறியீட்டு எண் **(GPI)** மீது **163** நாடுகளில் இந்தியா **137**வது இடத்திலுள்ளது. இந்த **2017 GPI,** சமாதான நிலையில் ஒரு விரிவான பகுப்பாய்வை வழங்குகிறது. தொடர்ச்சியான சமூக மற்றும் அரசியல் கொந்தளிப்புகளுக்கு மத்தியில், உலகம் வன்முறைகளை உருவாக்குவதில் பெரும் வளங்களை செலவழிக்கிறது, ஆனால் இந்த நிலை சமாதானத்திற்கு மிகக்குறைவாக உள்ளது. இந்தப்பட்டியலில் பின்லாந்து முதலிடத்திலும், அதனைத்தொடர்ந்து நியூசிலாந்து, போர்ச்சுகல், ஆஸ்திரியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடத்திலும் உள்ளன. அதே சமயம் சிரியா, அமைதியில்லாத நாடாகவுள்ளது. ஆப்கானிஸ்தான், ஈராக், தெற்கு சூடான், மற்றும் ஏமன் ஆகிய நாடுகள் சிரியாவுக்குப்பின் உள்ளன.

**5. புதிதாக நியமிக்கப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாக இயக்குநர் யார்?**



A. Chandan Sinha

B. Arvind Mayaram

C. S Ganesh Kumar

D. Rajiv Mehrishi

விடை : C. S Ganesh Kumar

2017 மே 31 அன்று Chandan Sinha-வின் விருப்ப ஓய்வுக்குப்பின், இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய நிர்வாக இயக்குநராக S கணேஷ் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு நிர்வாக இயக்குநராக, தகவல் தொழில்நுட்பம், தீர்வு முறைமைகள், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் செயற்பாடுகளின் துறைகளை இவர் கவனித்துக்கொள்வார். இப்பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர், இவர் தகவல் தொழில்நுட்பத்துறையின் தலைமை பொது மேலாளராக இருந்தார். தற்போது, மத்திய வங்கியில் 11 நிர்வாக இயக்குநர்கள் உள்ளனர்.

6. எந்த மாநில அரசு, போதைப்பொருள் எதிர்ப்பு இயக்கத்தை தீவிரப்படுத்த UNDOC-யுடன் கூட்டுவைத்துள்ளது?




A. பஞ்சாப்

B. அரியானா

C. உத்தரப்பிரதேசம்

D. மத்தியப்பிரதேசம்

விடை : A. பஞ்சாப்

பஞ்சாப் அரசு, போதை மருந்து அச்சுறுத்தலை ஒழிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, United Nations Office on Drugs and Crime (UNODC) உடன் இணைந்து செயல்பட முடிவுசெய்துள்ளது. 2017 ஜுன் மாதம் இரண்டாவது வாரத்தில் சுகாதாரத்துறையின், மருந்துகள் மீதான சிறப்புப்பணிக்குழு மற்றும் UNODC ஆகியவற்றிற்கு இடையேயான ஒப்பந்தம் கையெழுத்திடப்படும். திட்டப்பணிக்கு ஒரு திட்டப்பாதை அமைக்கப்படவேண்டும் என்றும் திட்டக்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தலைவர், முதன்மை

ADGP-யான Harpreet Singh Sidhu ஆவார். இவருடன் UNODC-வின் இரண்டு பிரதிநிதிகளும் இருப்பார்கள்.


**7. எந்த மாநிலத்தில் பேரழிவுகளுக்கான இந்தியாவின் முதல் தானியங்கி கடலோர எச்சரிக்கை மையம் அமைக்கப்படவுள்ளது?**

A. தமிழ்நாடு

B. மகாராஷ்டிரா

C. ஒடிசா

D. ஆந்திரப்பிரதேசம்




விடை : C. ஒடிசா

2017 ஜூலையில் ஒடிசாவில், பேரழிவுகளுக்கான இந்தியாவின் முதல் தானியங்கி கடலோர எச்சரிக்கை மையம் அமைக்கப்படவுள்ளது. இவ்வெச்சரிக்கை முறை மூலம், ஒடிசாவின் கடலோர மக்களுக்கு சூறாவளி, சுனாமி போன்ற இயற்கைப்பேரழிவுகள் பற்றிய எச்சரிக்கைகளை கட்டுப்பாட்டு அறையிலிருந்து நேரடியாக வழங்கமுடியும். சுற்றுலாத்தலம், மீன்பிடித்தளங்கள் மற்றும் கடலோரக்குடியிருப்புகள் போன்ற இடங்களுட்பட 122 இடங்களில் உயரமான கோபுரங்களிலிருந்து ஒரே நேரத்தில் சத்தமாக ஒலியெழுப்பப்படும். இப்புதிய அமைப்பு, பேரழிவின் தீவிரத்தைப்பொறுத்து, மக்களுக்கு விழிப்புணர்வேற்படுத்தும்.

**8. அண்மையில் காலமான Parvathama Rajkumar எந்தத்துறையிலிருந்து பிரபலமடைந்தார்?**

A. சட்டத்துறை

B. அரசியல்

C. பத்திரிகை

D. திரைத்துறை



விடை : D. திரைத்துறை

கன்னடத்திரைப்பட தயாரிப்பாளரும் மற்றும் பிரபல கன்னட திரைப்பட

நடிகரான ராஜ்குமாரின் மனைவியுமான Parvathama Rajkumar (77), 2017 மே 31 அன்று பெங்களூரில் காலமானார். கன்னடத்திரைப்படங்களை மட்டுமே விற்பனை செய்த முதல் கன்னட பெண் தயாரிப்பாளர், விநியோகிப்பாளர் இவராவார். கன்னடத்திரையுலகில் பழமையான மற்றும் மிகவும் வெற்றிகரமான நிறுவனங்களில் ஒன்றான Vajreshwari Combines மற்றும் Poornima Enterprises-ன் கீழ் இவர் 87 திரைப்படங்களை தயாரித்துள்ளார்.

9. அண்மையில் மறைந்த “கவிக்கோ” அப்துல் ரகுமான், எந்த மொழியில் பிரபல கவிஞராவார்?



A. தமிழ்

B. ஒடியா

C. தெலுங்கு

D. கன்னடம்

விடை : A. தமிழ்

“கவிக்கோ” என பிரபலமாக அறியப்படும், தமிழ்க்கவிஞரான அப்துல் ரகுமான் (79), சென்னையில் 2017 ஜுன் 2 அன்று காலமானார். இவர் வானம்பாடி இலக்கிய இயக்கத்தைச்சார்ந்தவராவார். மேலும், நவீன தமிழ் இலக்கியத்தில் மிகவும் பாராட்டப்பட்ட கவிஞர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். இவரது கவிதைத்தொகுப்பான “ஆலாபனை”, 1999-ம் ஆண்டு கௌரவமிக்க சாகித்திய அகாடமி விருதினை வென்றது. இவரது புகழ்பெற்ற படைப்புகள் ஆலாபானை, பால் வீதி, நேயர் விருப்பம், பித்தன் போன்றவையாகும்.

10. ஐ. நா சபையின் பொதுச்சபைக்கான புதிய ஜனாதிபதி Miroslav Lajcak ஆவார். இவர் எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?



A. ஸ்லோவாகியா

B. ஃபிஜி

C. உருகுவே

D. செனகல்


விடை : A. ஸ்லோவாகியா

நியூயார்க்கில் அமைந்துள்ள ஐ.நாவின் தலைமையகத்தில் நடைபெற்ற **72**வது அமர்வில், ஸ்லோவாகியா நாட்டின் வெளியுறவு அமைச்சரான **Miroslav Lajcak,** ஐ. நா சபையின் பொதுச்சபைக்கான புதிய ஜனாதிபதியாக, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். **2017** செப்டம்பர் **12**-ல் **Peter Thomson**-ன் ஓய்வுக்குப்பிறகு இவர் பதவியேற்பார். **United Nations General Assembly (UNGA)** என்பது, **193** உறுப்பு நாடுகளின் கட்டமைப்பைக்கொண்ட, பன்முக சர்வதேச பிரச்சனைகளை விவாதிக்கும் ஒரு மன்றமாகும். இதன் சந்திப்புக் கூட்டங்கள் செப்டம்பர் முதல் டிசம்பர் வரை இருக்கும். **2017** செப்டம்பர் **12** முதல் **UNGA**-ன் **72**வது அமர்வு தொடங்கும்.

---

2017 June 3

1. அயர்லாந்தின் புதிய பிரதமர் யார்?



**A. Leo Varadkar**

**B. Brian Cowen**

**C. Mary McAleese**

**D. Enda Kenny**

விடை : **A. Leo Varadkar**

**Fine Gael Party**-ன் தலைவரான **Leo Varadkar, Simon Coveney**-யை **60%** வாக்குகள் பெற்று தோற்கடித்து அயர்லாந்தின் புதிய பிரதமரானார். இவர் நாட்டின் முதல் ஓரினச்சேர்க்கை பிரதமர் **மற்றும்** நாட்டின் இளம் வயது தலைவரும் ஆவார். இவருக்குமுன் மத்திய வலதுசாரிக்கட்சியின் தலைவரான **Taoiseach Enda Kenny,** இப்பதவியிலிருந்தார்.

2. பிரசார் பாரதியின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?




**A. CK Prasad**

**B. Shashi Shekhar Vempati**

**C. Rajeev Singh**

**D. S C Panda**

விடை : **B. Shashi Shekhar Vempati**

**Infosys Technologies-ன்** முன்னாள் பிரதான வடிவமைப்பாளரான **Shashi Shekhar Vempati,** அடுத்த ஐந்தாண்டுகளுக்கு, பொது ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதியின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக **(CEO)** நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் இவர், பிரசார் பாரதி வாரியத்தின் ஒரு பகுதி நேர உறுப்பினராக உள்ளார். **Jawhar Sircar-ன்** ஓய்வுக்குப்பின் **7** மாதங்களுக்கு இப்பதவி காலியாகவே இருந்தது. இவருக்குமுன் இப்பதவியில், **2017-ல் S C Panda** ஓய்வுக்குப்பிறகு இடைக்கால **CEO-வாக Rajeev Singh** இருந்தார்.

**3. 2017 Global Multi-Dimensional Poverty Index (MPI)-ல்,** இந்தியாவின் தரநிலை என்ன?

**A.** 45வது

**B.** 58வது

**C.** 37வது

**D.** 26வது



விடை : **C. 37வது**

**Oxford Poverty** மற்றும் **Human Development-ன்** அறிக்கையின்படி, **2017 Global Multi-Dimensional Poverty Index (MPI)-ல், 103** நாடுகளில் இந்தியா **37**வது இடத்திலுள்ளது. **OPHI** என்பது பேராசிரியர் **Sabina Alkire-ன்** தலைமையிலான ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்திலுள்ள பொருளாதார ஆராய்ச்சி மையமாகும். **2017** உலகளாவிய **MPI, 103** நாடுகளில் வாழும் உலகின் **76%** மக்களை உள்ளடக்கியது. இக்குறியீடானது வறுமையின் இயல்பு மற்றும் தீவிரத்தை அளவிடுகிறது. இது ஏழைகளின் அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டது. இவை வறுமையை ஒழிப்பதற்கான கொள்கைகளை உருவாக்க உதவுகின்றன.

**4.** எந்தக்குழு, பெருநிறுவன ஆளுமைகளுக்கான, **Securities and Exchange Board of India-வால்** உருவாக்கப்பட்டது?

A. Uday Kotak குழு
B. Naysa Modi குழு
C. Tejas Muthusamy குழு
D. Saketh Sundar குழு



விடை : A. Uday Kotak குழு

பட்டியலிடப்பட்ட பெருநிறுவனங்களின் நிர்வாகத்தரத்தினை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் Securities and Exchange Board, Uday Kotak குழுவை உருவாக்கியுள்ளது. கோட்டக் மகிந்திரா வங்கியின் தலைவரான Uday Kotak தலைமையில், இக்குழு 4 மாதங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும். இக்குழு SEBI-க்கு சம்பந்தப்பட்ட கட்சி பரிவர்த்தனைகளைப் பற்றிய பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமான பரிந்துரைகளைக்கூறும். மேலும், இக்குழு பொது பங்கேற்புகளில் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் வாக்களிக்கும் பிரச்சனையைப்பற்றியும் கலந்தாலோசித்து, பரிந்துரைகளை வழங்கும்.

5. 90வது Scripps National Spelling Bee போட்டியில் வென்ற இந்திய-அமெரிக்க மாணவர் யார்?

A. Sreeniketh Vogoti
B. Ananya Vinay
C. Rohan Sachdev
D. Shourav Dasari



விடை : B. Ananya Vinay

2017 ஜூன் 1 அன்று மேரிலேண்டின் National Harbor-லுள்ள, Gaylord National Resort **மற்றும்** Convention Center-ல் நடைபெற்ற 90வது Scripps National Spelling Bee இறுதிப்போட்டியில் "Marocain" எனும் சொல்லுக்கு சரியான எழுத்தாக்கத்தை சொல்லி, கலிபோர்னியாவைச்சேர்ந்த 6வது படிக்கும் Ananya Vinay (12), இப்போட்டியில் வென்றுள்ளார். இவர் $40000 டாலர் மதிப்புள்ள ரொக்கப்பரிசினை வென்றார். 1999-ல் இந்திய-அமெரிக்கரான

**Nupur Lala**-வின் வெற்றிக்குப்பிறகு தொடர்ந்து **13** வருடங்களாக இந்திய-அமெரிக்கர்களே இப்பரிசினை வென்றுவருகின்றனர்.

**6. 52வது Karlong Vary சர்வதேச திரைப்பட விழாவில், இந்தியாவின் சார்பாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும் படம் எது?**




**A. Khibula**

**B. Cakemaker**

**C. Ralang Road**

**D. Falling**

விடை : **C. Ralang Road**

**2017** ஜூலை **8** முதல் ஜூலை **30** வரை செக் குடியரசில் நடைபெறவுள்ள, **52**வது **Karlong Vary** சர்வதேச திரைப்பட விழாவில், இந்தியாவின் சார்பாக பிரதிநிதித்துவப்படுத்தப்படும் படம் **Ralang Road** ஆகும். பதிமூன்று ஆண்டுகளுக்குப்பிறகு, இந்த சர்வதேச திரைப்பட விழாவில் இந்தியா சர்வதேச திரைப்படங்களுடன் போட்டியிடுகிறது. இமாலய கிராமப்புறத்தில் வாழும் நான்கு நபர்களின் கதைகளை இத்திரைப்படம் விளக்குகிறது. ஒரு சிக்கலான சமூக அமைப்பில் கலாச்சாரக்குடியேற்றம் மற்றும் வாழ்க்கை முறைகளை இப்படம் ஆராய்கிறது. இதனை **Karma Takapa** இயக்க, **HumanTrail Pictures** நிறுவனம் தயாரித்துள்ளது.

**7. 2017 HCL Asian Junior Tennis Championship போட்டியில், ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**



**A. Piyush Salekar**

**B. Vikrat Mehta**

**C. Kaivalya Kalamse**

**D. Nitin Kumar Sinha**

விடை : **D. Nitin Kumar Sinha**

புனேவின் **Balewadi**-ன் **Mahalunge**-லுள்ள **Shri Shiv Chhatrapati Sports Complex**-ல்

நடைபெற்ற **2017 HCL Asian Junior Tennis Championship** இறுதிப்போட்டியில், மலேசிய வீரரான **Christian Didier Chin-ஐ** தோற்கடித்து, இந்திய வீரரான **Nitin Kumar Sinha,** ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார். பெண்கள் ஒற்றையர் இறுதியாட்டத்தில் **Mihika Yadav**, **Mahak Jain-ஐ 6-3, 6-3** என்ற நேரடி செட்களில் தோற்கடித்தார். **Junior Grand Slams** போட்டிக்குப்பிறகு உலகிலேயே மிகவுயரிய போட்டி இதுதான். மேலும் இந்திய வீரர்கள் தங்களின் உலகளாவிய போட்டியாளர்களுக்கு எதிராக போட்டியிடும் வாய்ப்பினையும் இப்போட்டி வழங்குகிறது.

**8. ITTF Umpires and Referees Committee (URC)-ன் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள முதல் இந்தியர் யார்?**

**A. S. Sridhar**

**B. Raksheet Kota**

**C. Ganeshan Neelakantan**


**D. Pankaj Awasthi**



விடை : **C. Ganeshan Neelakantan**

**ITTF Umpires and Referees Committee (URC)-ன்** உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள முதல் இந்தியர் **Ganeshan Neelakantan** ஆவார். இவரது பதவிக்காலம் இரண்டாடுகளாகும். **International Table Tennis Federation (ITTF)-ல்** இருக்கும் ஒரே போட்டியாளரான மேலாளர் இவர்தான். இதுதவிர, ஆசிய கண்டத்திலிருந்து **ITTF-க்கு** தொழில்நுட்ப ஆணையாளராகவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இதன் பதவிக்காலம் நான்காண்டுகளாகும். மேலும், இவர் தெற்காசிய கூட்டமைப்பு தொழில்நுட்பக்குழுவின் தலைவராகவும், **Commonwealth Table Tennis Federation (CTTF)-ன்** உறுப்பினராகவும் உள்ளார்.

**9. எந்த IIT நிறுவன ஆராய்ச்சியாளர்கள், அவசர ஊர்தியிலுள்ள நோயாளிகளை கண்காணிப்பதற்காக, கம்பியில்லா தொழில்நுட்பமான “AmbuSens”-ஐ உருவாக்கியுள்ளனர்?**



**A. IIT** கரக்பூர்

**B. IIT** சென்னை

C. IIT வாரணாசி

D. IIT ரூர்கி

விடை : A. IIT கரக்பூர்

IIT கரக்பூர் ஆராய்ச்சியாளர்கள், அவசர ஊர்தியிலுள்ள நோயாளிகளை Remote முறையில் மருத்துவர்கள் கண்காணிப்பதற்காக, கம்பியில்லா தொழில்நுட்பமான "AmbuSens"-ஐ உருவாக்கியுள்ளனர். இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நோயாளிகளின் ECG, இதயத்துடிப்பு, வெப்பநிலை மற்றும் இரத்த அழுத்தம் போன்றவற்றை அவசர ஊர்தி ஓடிக்கொண்டிருக்கும் வேளையிலேயே கண்காணிக்க இயலும். இதன் மூலம், சூழ்நிலையை சமாளிக்க, நோயாளியுடன் வரும் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்க முடியும். "AmbuSens"-ன் வலை இடைமுகமானது, உண்மையான ECG வரைபடத்தை போன்ற காட்சிப்படுத்தல் கருவிகள் மூலம், ஒரே நேரத்தில் மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான எளிய வரைகலை இடைமுகத்தை அளிக்கிறது. இதனை இணைய வசதிகொண்ட மடிக்கணினிகள், திறன்பேசிகள் ஆகியவற்றிலிருந்து பயன்படுத்தலாம்.

10. Gumti வனவிலங்கு சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. சிக்கிம்

B. திரிபுரா

C. பீகார்

D. உத்தரப்பிரதேசம்



விடை : B. திரிபுரா

Gumti வனவிலங்கு சரணாலயம் 389.54 சதுர கி.மீ., பரப்பளவில், திரிபுராவில் அமைந்துள்ளது. யானை, சாம்பார் மான், எருமை போன்ற விலங்குகள் இங்குள்ளன. திரிபுராவில் புதரமைப்பு நிலப்பகுதிகள்கொண்ட முக்கியமான சரணாலயங்களில் இந்த சரணாலயமும் ஒன்றாகும். இச்சரணாலயம் மாநிலத்தின் பாரம்பரிய மரபுக்கு அடையாளமாகவுள்ளது. மேலும்,

பல்வேறு திரிபுரா மாநிலத்தின் வனவிலங்குகளுக்கு இது வாழ்விடமாக உள்ளது. விலங்கு ஆர்வலர்கள் கண்டுமகிழ இதுவொரு சிறந்த இடமாகும்.

---

2017 June 4 & 5

**1. 2017-ம் ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் நாளின் மையக்கருத்து என்ன?**

A. Green Economy: Does it include you?

B. Raise Your Voice Not the Sea Level

C. Connecting People to Nature

D. Think.Eat.Save




விடை : C. Connecting People to Nature

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் பற்றியும் காடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 5 அன்று உலக சுற்றுச்சூழல் நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2017-ம் ஆண்டுக்கான மையக்கருத்து "Connecting People to Nature" ஆகும். இது இயற்கையின் அழகை பாராட்டுவதாகவும், அதனை பாதுகாப்பதாகவும் பொருள்படுகிறது. 2017-ம் ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் நாளின் கொண்டாட்டங்கள் கனடாவில் நடைபெறும்.

**2. Thailand Grand Prix Gold Badminton போட்டியில், 2017-ம் ஆண்டுக்கான ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?**

A. Akhilesh Das Gupta

B. Sai Praneeth

C. Jonatan Christie

D. Kidambi Srikanth




விடை : B. Sai Praneeth

2017 ஜுன் 4 அன்று பாங்காக்கில் நடைபெற்ற, Thailand Grand Prix Gold Badminton இறுதிப்போட்டியில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தோனேசியாவை சேர்ந்த Jonatan Christie-ஐ தோற்கடித்து, இந்தியாவின் Sai Praneeth, ஆண்கள்

ஒற்றையர் பட்டத்தை வென்றார். இது **Sai Praneeth** பெறும் முதல் **Grand Prix** பட்டமாகும்.

**3. எந்த கால்பந்து அணி, 2017 UEFA Champions League கோப்பையை வென்றுள்ளது?**

**A. Juventus**

**B. Milan**

**C. Barcelona**

**D. Real Madrid**

**விடை : D. Real Madrid**

இறுதிப்போட்டியில், **Juventus** அணியை **4-1** என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, **Real Madrid** அணி, **2017 UEFA Champions League** கோப்பையை வென்றுள்ளது. **UEFA** சாம்பியன்ஸ் லீக் வரலாற்றிலேயே முதன்முறையாக, ஒரே குழு தொடர்ச்சியாக இரு பருவங்களை வென்றது இம்முறைதான். இதன் மூலம் தங்களின் வெற்றியை தக்கவைத்துக்கொண்ட முதல் அணி என்ற பெருமையும் **Real Madrid** அணியை சேருகிறது. **Real Madrid** என்பது ஸ்பெயினின் **Madrid** நகரிலுள்ள ஒரு தொழிற்முறை கால்பந்தணியாகும்.

**4. எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் திறனட்டை சார்ந்த Public Bicycle Sharing (PBS) திட்டமான "Trin Trin", தொடங்கப்பட்டுள்ளது?**

**A.** சென்னை

**B.** புது டெல்லி

**C.** லக்னோ

**D.** மைசூரு



**விடை : D. மைசூரு**

**2017** ஜூன் **4** கர்நாடகாவிலுள்ள மைசூருவில், இந்தியாவின் முதல் திறனட்டை **(Smartcard)** சார்ந்த **Public Bicycle Sharing (PBS)** திட்டமான **"Trin Trin"**, தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கான நிதியின் ஒரு பகுதியை, உலக

வங்கியின் **Global Environmental Facility** அளித்துள்ளது. மிதிவண்டி பராமரிப்பு மற்றும் நிலையங்களுக்காக அடுத்த 6 வருடத்திற்கு ரூ.20.5 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளது. நகர மக்களின் பொது பயன்பாட்டிற்காக சுமார் 450 மிதிவண்டிகள் கிடைக்கும். இச்சேவையினை பயன்படுத்திக்கொள்ள மைசூருவின் குடிமக்கள் (அ) சுற்றுலா பயணிகள் தங்களை இணையத்திலோ (அ) ஆறு மையங்களில் ஏதேனும் ஒரு மையத்தை நேரில் அணுகியோ பதிவு செய்யவேண்டும். இதற்கான கட்டணமாக ரூ.350 (திரும்ப வழங்கப்படும் 250 உட்பட) செலுத்தி திறனட்டையை பெற்றுக்கொள்ளலாம். இந்த மிதிவண்டி பயன்பாடானது முதல் ஒரு மணி நேரத்திற்கு இலவசமாகவும், அடுத்த கூடுதல் 1 மணிநேரத்திற்கு ரூ.5-ம், அதற்கடுத்த கூடுதல் 1 மணிக்கு ரூ.10-ம் கட்டணமாக வசூலிக்கப்படும்.

5. இந்தியாவின் புதிய சட்ட ஆலோசகர் யார்?

**A. Tushar Mehta**

**B. Pinky Anand**

**C. Ranjit Kumar**

**D. P S Narsimha**



விடை : **C. Ranjit Kumar**

இந்தியாவின் தற்போதைய சட்ட ஆலோசகரான **Ranjit Kumar**-ன் பதவிக்காலமும், **Attorney General Mukul Rohatgi** மற்றும் 5 மூத்த வழக்குரைஞர்களின் பதவிக்காலமும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் சட்ட ஆலோசகர்களான **Pinky Anand, Maninder Singh, P S Patwalia, Tushar Mehta** மற்றும் **P S Narsimha** ஆகியோரின் பதவிக்காலம் காலவரையின்றி நீட்டிக்கப்பட்டுள்ளது. **Attorney General**, சட்ட ஆலோசகர் மற்றும் கூடுதல் சட்ட ஆலோசகர் ஆகியோர் அரசின் சார்பாக, சிக்கலான நேரங்களில் சட்ட ஆலோசனைகளை வழங்குவார்கள்.

6. சமீபத்திய, உலக வங்கியின் **Global Economic Prospects (GEP)** அறிக்கையின்படி, 2018-ல் இந்தியாவின் **GDP** வளர்ச்சி விகிதம் என்னவாக இருக்கும்?

A. 7.5%
B. 7.7%
C. 7.2%
D. 7.6%




விடை : A. 7.5%

சமீபத்திய, உலக வங்கியின் Global Economic Prospects (GEP) அறிக்கையின்படி, 2018-ல் இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதம் 7.5% ஆகவும், 2019-ல் 7.7% ஆகவும் இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. 2016-ல் 6.8% இருந்த இந்த வளர்ச்சி 2017-ல் 7.2% ஆக ஆனதையும் இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் பணமதிப்பிழப்பின் தாக்கத்திலிருந்து இந்தியா மீள்வதாகவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. இருப்பினும், 2017 மற்றும் 2018-ம் ஆண்டுகளில் உலகளாவிய வளர்ச்சிக்கான கணிப்பு, முறையே 2.7% **மற்றும்** 2.9% என மாறாமல் உள்ளது. இதில் உற்பத்தி மற்றும் வர்த்தக முறைமைகள் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றன.

7. எந்த நாடு, 2017 A T Kearney உலகளாவிய சில்லறை மேம்பாட்டு குறியீட்டெண்ணில், முதலிடத்தைப்பிடித்துள்ளது?

A. சீனா
B. இந்தியா
C. மலேசியா
D. வியட்நாம்

விடை : B. இந்தியா

2017 A.T. Kearney Global Retail Development Index (GRDI)-ல், சுலபமாக வியாபாரம் செய்யும் 30 நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப்பிடித்துள்ளது. 2017 GRDI-ன் தலைப்பு "The Age of Focus" ஆகும். இதில் சீனா 2வது இடத்தையும், அதைத்தொடர்ந்து, மலேசியா, துருக்கி, UAE மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப்பிடித்துள்ளது. இந்த 16வது GRDI-ல் 30 வளர்ந்துவரும் நாடுகளின் உலகளாவிய சில்லறை

முதலீடுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதுதவிர 25 பெருநிறுவன விற்பனையாளர்களை பகுப்பாய்வு செய்து, அவர்களின் வெற்றிக்கான உத்திகளை கண்டறிந்து, அவற்றை சில்லறை விற்பனையாளர்களுக்கு ஒரு முதலீட்டிற்கான வாய்ப்பாக வழங்கியுள்ளது.

8. GSAT-19 தகவல் தொடர்பு செயற்கைக்கோளை, எந்த விண்வெளிக்கலத்தின் மூலம் ISRO விண்ணில் ஏவியது?

A. GSLV Mark III

B. GSLV Mark IV

C. GSLV Mark II

D. GSLV Mark V



விடை : A. GSLV Mark III

ISRO தனது 3136 Kg எடைகொண்ட GSAT-19 தகவல் தொடர்பு செயற்கைக்கோளை, தனது முற்றிலும் புதிய மற்றும் மிக அதிக எடையுடைய Geosynchronous Satellite Launch Vehicle Mark-III D-1 (GSLV-Mk III D-1) விண்வெளிக்கலத்தின் மூலம் Geosynchronous Transfer Orbit (GTO)-க்கு ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து 2017 ஜுன் 5 அன்று ஏவியது. தொலைத்தொடர்பு மற்றும் ஒளிபரப்புத்துறையை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோளின் வாழ்நாள் பத்தாண்டுகள் ஆகும். GSLV-Mk III பொதுவாக “fat boy” என அழைக்கப்படுகிறது. இது சுமார் ரூ.300 கோடி செலவில் 15 ஆண்டுகளாக உருவாக்கப்பட்டது. இதன் எடை சுமக்கும் திறன் 4000 கிலோ ஆகும். மேலும், பூமியின் சுற்றுவட்டப்பாதைக்குள் இதன் எடை சுமக்கும் திறன் 10000 கிலோவாகும். GSLV-Mk III என்பது ஒரு மூன்று நிலை ஏவுகணையாகும். இதன் முதல் நிலையில் திட எரிபொருளால் நிரப்பப்பட்ட இரண்டு மோட்டார்களும். 2வது நிலையில் திரவ எரிபொருளும் மற்றும் 3வது நிலையில் “CE20” இயந்திரப்பொறியால் இயங்கும் Cryogenic “C25”-ம் இருக்கும். இதில் 20 என்பது, ஏவுகணையின் உந்துசக்தியை குறிக்கிறது.

9. கொடுமைகளுக்காளான அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச நாள்,

எப்போது அனுசரிக்கப்படுகிறது?

A. ஜுன் 3
B. ஜுன் 4
C. ஜுன் 5
D. ஜுன் 6




விடை : B. ஜுன் 4

உடல், மன மற்றும் உணர்ச்சி ரீதியான கொடுமைகளுக்காளான அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச நாள், ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 4 அன்று ஐ. நா சபையால் அனுசரிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கெதிரான அனைத்து விதமான கொடூர செயல்களைப்பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே இருத்தல் வேண்டும். குழந்தைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை மையமாகக்கொண்ட அமைப்புகள் மற்றும் தனிநபர் விழிப்புணர்வு பிரச்சாரங்களில் பொதுமக்கள் பங்கேற்கவேண்டும். மேலும், குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஐ.நாவின் உறுதியான நிலைப்பாட்டை இந்நாள் உறுதிப்படுத்துகிறது.

10. Abohar வனவிலங்கு சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A. தமிழ்நாடு
B. நாகாலாந்து
C. பஞ்சாப்
D. கேரளா



விடை : C. பஞ்சாப்

Abohar வனவிலங்கு சரணாலயம் பஞ்சாபின் Fazilka மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த சரணாலய உருவாக்கத்துக்குப்பின், Bishnoi சமூக மக்கள் ஒன்றிணைந்து தங்களின் புனித விலங்கான "Black Buck"-ஐ பாதுகாக்க செய்த செயல்களின் வெற்றிக்கதை உள்ளது. இது பஞ்சாப்பின் மாநில விலங்காகும். இந்த சரணாலயம் Albizia lebbeck, Acacia nilotica, Azadirachata indica, A. tortilis போன்ற பல்வேறு வகையான தாவர வகைகள்

மற்றும் காட்டுப்பன்றி, நீல எருது, முள்ளம்பன்றி, முயல் மற்றும் குள்ளநரி போன்ற பல்வேறு வகையான விலங்கினங்களுக்கு வாழ்விடமாகவுள்ளது.

---

2017 June 6

**1. எந்த நாட்டில், ஐ. நா-வின் முதல் பெருங்கடல் மாநாடு நடக்கவுள்ளது?**

A. பிரான்ஸ்

B. US

C. ஜெர்மனி

D. UK

விடை : **B. US**

**2017 ஜுன் 5** அன்று, நியூயார்க்கிலுள்ள ஐ. நா தலைமையகத்தில், ஐ. நா-வின் முதல் பெருங்கடல் மாநாடு நடைபெறவுள்ளது. இந்த **5** நாள் மாநாட்டை ஃபிஜி மற்றும் சுவீடன் அரசாங்கம் இணைந்து, **"Our oceans, our future: partnering for the implementation of Sustainable Development Goal 14"** என்ற மையக்கருத்துடன் வழங்குகிறது. பவளப்பாறை வெடிப்பு, நெகிழி மாசு, அதிகமான மீன்பிடித்தல், கடல் மட்ட உயர்வு போன்ற பெருங்கடல்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வை கண்டறிவதே இம்மாநாட்டின் நோக்கமாகும். மேலும், கடல் மற்றும் அதுசார்ந்த சதுப்புநிலக்காடுகள், பவளத்திட்டுகள், கடற்புற்கள் போன்றவற்றை பாதுகாப்பு செய்வது பற்றியும் இதில் விவாதிக்கப்படும். அதேபோல், மீன்வளங்களை தகுந்தவாறு மேம்படுத்துதலும், அதைக்கொண்டு பெருமளவு மகசூல் பெறுதல் பற்றியும் விவாதிக்கப்படும்.

**2. இந்தியாவிலேயே முதன்முதலாக, கிராமப்புற LED தெருவிளக்குத்திட்டம் (Rural LED Street Lighting Project) எந்த மாநிலத்தில் நிறுவப்படவுள்ளது?**

A. ஆந்திரப்பிரதேசம்

B. கேரளா

C. உத்தரப்பிரதேசம்

D. அசாம்



விடை : A. ஆந்திரப்பிரதேசம்

இந்தியாவிலேயே முதன்முதலாக, கிராமப்புற LED தெருவிளக்குத்திட்டம் (Rural LED Street Lighting Project) ஆந்திர மாநிலத்தில் நிறுவப்படவுள்ளது. ஆந்திராவின் 7 மாவட்டங்களிலுள்ள பஞ்சாயத்துக்களில் 10 இலட்சம் சாதாரண, வழக்கமான தெருவிளக்குகளை அகற்றிவிட்டு, அதற்குபதிலாக LED விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இதனை மின்துறையின் கீழ், Energy Efficiency Services Limited (EESL) நடைமுறைப்படுத்தும். இந்திய அரசின், Street Lighting National Project (SLNP)-ன் படி, இத்திட்டம் இங்குதான் முதன்முதலில் நிறுவப்படவுள்ளது. முதல் கட்டமாக, குண்டூர், பிரகாசம், நெல்லூர், கர்னூல், கடப்பா, அனந்தபூர் மற்றும் சித்தூர் ஆகிய மாவட்டங்களின் கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் ஆண்டுக்கு 147 மில்லியன் யூனிட் அளவுக்கான மின்சாரத்தை சேமிக்கமுடியும் மற்றும் 12 கோடி டன் அளவிலான கரியமில வாயு வெளியேற்றத்தினை தடுக்கமுடியும். இத்திட்டத்திற்கான முழு நிதியும், பிரெஞ்சு வளர்ச்சி முகமையான Agence Française de Développement (AFD) வழங்குகிறது.

3. "Assam Citizen Centric Service Delivery" திட்டத்திற்காக இந்திய அரசு, உலக வங்கியுடன் எவ்வளவுக்கான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

A. $39.5 மில்லியன் டாலர்கள்
B. $39.7 மில்லியன் டாலர்கள்
C. $39.2 மில்லியன் டாலர்கள்
D. $39.4 மில்லியன் டாலர்கள்




விடை : C. $39.2 மில்லியன் டாலர்கள்

"Assam Citizen Centric Service Delivery" திட்டத்திற்காக இந்திய அரசு, உலக வங்கியுடன் $39.2 மில்லியன் டாலருக்கான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இத்திட்டத்துக்கான மொத்த செலவு $49 மில்லியன் டாலர்களாகும், இதில் $39.2 மில்லியன் டாலர்கள் உலக வங்கியால் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, மாநில வரவு செலவிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் காலம் 5 ஆண்டுகள். அசாமில்

தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச்சேவைகளை மேம்படுத்தி வழங்குவதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். RTPS சட்டத்தின் மூலம், மக்களுக்கு உரிய நேரத்தில், பொறுப்பாக சேவைகள் கிடைக்க இத்திட்டம் துணைபுரியும்.

**4. எந்த IIT நிறுவனம், 5வது Spic Macay சர்வதேச மாநாட்டை நடத்தவுள்ளது?**




A. IIT கவுகாத்தி

B. IIT சென்னை

C. IIT பம்பாய்

D. IIT டெல்லி

விடை : D. IIT டெல்லி

2017 ஜுன் 5 அன்று, பிரதமர் நரேந்திர மோடி 5வது Spic Macay சர்வதேச மாநாட்டை, காணொளி மூலம் தொடங்கிவைத்தார். இந்த 7 நாள் மாநாட்டோடு, SPIC MACAY-வின் 40 ஆண்டுகால நிறைவுவிழாவும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் மதிப்புமிக்க பன்முகக்கலாச்சாரத்தை உலகிற்கு அறிமுகப்படுத்த, ஒவ்வொரு ஆண்டும் Spic Macay, இந்த சர்வதேச மாநாட்டை நடத்துகிறது. இது இளைஞர்களிடையே இந்தியப்பாரம்பரிய இசை மற்றும் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான சங்கமாகும்.

**5. தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (National Water Development Agency)-ன் புதிய பொது இயக்குநர் யார்?**



A. Sharad Jain

B. S. Masood Husain

C. Usha Gupta

D. Kirti Kumar

விடை : A. Sharad Jain

நீர்வளங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் NWDA-ன், புதிய பொது இயக்குநராக Sharad Jain நியமிக்கப்பட்டுள்ளார். தற்சமயம் இவர், ரூர்க்கியிலுள்ள National Institute of

**Hydrology (NIH)**-ல் விஞ்ஞானியாக பணிபுரிந்து வருகிறார். மத்திய நீர் ஆணையத்திற்கு உறுப்பினராக மாற்றம் பெறும்வரை, **S. Masood Husain** இப்பதவியிலிருந்தார்.

**6. 2017 IMD World Competitiveness Index-ல் இந்தியாவின் தரநிலை என்ன?**

A. 28வது

B. 37வது

C. 41வது

D. 45வது




விடை : **D. 45வது**

**2017 IMD World Competitiveness Index**-ல், 63 நாடுகளில் இந்தியா 45வது இடத்தை பிடித்துள்ளது. இந்தப்பட்டியல் சுவிச்சர்லாந்தை அடிப்படையாக்கொண்ட **International Institute for Management and Development (IMD)**-ன் **World Competitiveness Center (WCC)** மூலம் பட்டியலிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில், ஹாங்காங் முதலிடத்தைப்பிடித்துள்ளது. சுவிச்சர்லாந்து, சிங்கப்பூர், US, நெதர்லாந்து, அயர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. நாடுகள் தங்களின் வளங்களை எப்படி பயன்படுத்துகின்றன என்பதையும், அவற்றின் மதிப்புகளை எப்படி உயர்திகொள்கின்றன என்பதையும் IMD அளவிடுகிறது.

**7. 21வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்ற Sudha Singh, எந்த விளையாட்டுடன் தொடர்புடையவராவார்?**

A. Baseball

B. குண்டெறிதல்

C. ஈட்டியெறிதல்

D. Steeplechase (தடைதாண்டுதல்)



விடை : **D. Steeplechase**

2017 ஜூன் 4 அன்று, பஞ்சாபிலுள்ள பாட்டியாலாவில் நடைபெற்ற 21வது

தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், **3000** மீ **Steeplechase**-ல் உத்தரப்பிரதேசத்தைச்சேர்ந்த **Sudha Singh** தங்கம் வென்றார். ஆண்கள் **3000** மீ **Steeplechase**-ல், அரியானாவைச்சேர்ந்த **Naveen Kumar, 8:50.85** என்ற நேர அளவில் தங்கம் வென்றார்.

**8.** ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தை தொடங்கும், இந்தியாவின் முதல் மாநிலம் எது?

**A.** ஆந்திரப்பிரதேசம்

**B.** தெலுங்கானா

**C.** கேரளா

**D.** கர்நாடகம்




விடை : **B.** தெலுங்கானா

ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தை தொடங்கும், இந்தியாவின் முதல் மாநிலம் தெலுங்கானாவாகும். இத்திட்டத்தின் கீழ், மனிதாபிமான அடிப்படையில் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு ஆதரவற்ற பெண்ணுக்கும் ரூ.**1,000** மாதந்தோறும் வழங்கப்படும். இத்திட்டம் மணமாகாத பெண்களுக்கு, கைவிடப்பட்ட பெண்களுக்கு மற்றும் மணமுறிவு பெற்ற பெண்களுக்கு நன்மை பயக்கும். **31** மாவட்டங்களிலிருந்து **1,08,302** பயனாளிகள் இத்திட்டத்திற்கு தகுதியுடையவர்களாகிறார்கள். உறவினர்கள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விளைவாக, இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**9.** இந்தியாவை பசுமையாக்குவதை ஊக்கப்படுத்த, **TATA Projects** சமீபத்தில் எந்த முயற்சியை தொடங்கியுள்ளது?

**A. Green Thumb**

**B. Green Mountain**

**C. Green India**

**D. Green Earth**

விடை : **A. Green Thumb**

**2017** உலக சுற்றுச்சூழல் நாளில், இந்தியாவை பசுமையாக்குவதை ஊக்கப்படுத்த, **TATA Projects, "Green Thumb"** எனும் திட்டத்தை தொடங்கியுள்ளது. இத்திட்டம், **2016-ம்** ஆண்டுத்திட்டத்தின் தொடர்ச்சியாகும். சென்ற **2016-ல், 100** இடங்களில் **23,000** பேரைக்கொண்டு **42,000** மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. இவ்வாண்டும், விருப்பமுள்ள சமூக ஆர்வலர்களைக்கொண்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும். **Green Thumb Microsite** இணையதளம், ஃபேஸ்புக் பக்கம், **LinkedIn** பக்கம் **/155507/ (அ)** அவர்களின் நிறுவன இணையதளமான **www.tataprojects.com -ல்** பதிவுசெய்து கொள்வதன் மூலம், அவர்கள் இத்திட்டத்தில் பங்குபெறமுடியும்.

**10. 2017 IMD World Digital Competitiveness Index-ல் இந்தியாவின் தரநிலை என்ன?**

**A.** 22வது

**B.** 39வது

**C.** 45வது

**D.** 51வது




விடை : **D. 51வது**

**2017 IMD World Digital Competitiveness** தரவரிசையில் **63** நாடுகளில் இந்தியா **51வது** இடத்திலுள்ளது. இதில் சிங்கப்பூர் முதலிடத்தையும், சுவீடன், அமெரிக்கா, பின்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளன. நாடுகளின் **Digital Competitiveness-**காக, **IMD World Competitiveness** மையம், தனியறிக்கையை சமர்பித்தது இதுவே முதல்முறையாகும். இந்தப்புதிய **Digital Competitiveness Ranking (DCR)** முறை, நாடுகள் எவ்வாறு டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றன என்று அளவிடுகிறது. இத்தரவரிசை **3** காரணிகளை அடிப்படையாகக் கொண்டது, அவை அறிவு, தொழில்நுட்பம் மற்றும் எதிர்கால தயார்நிலை ஆகும்.

---

## 2017 June 7

**1. அண்டை நாட்டு இருப்புப்பாதை (Railway Track) திட்டத்துக்காக, $318 மில்லியன் டாலர்கள் கடன் வழங்க இந்திய அரசு, எந்த நாட்டின்**

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

A. இலங்கை

B. நேபாளம்

C. பூடான்

D. வங்காளதேசம்



விடை : A. இலங்கை

இலங்கை நாட்டின் இருப்புப்பாதை திட்டத்துக்காக, $318 மில்லியன் டாலர்கள் கடனாக வழங்க இந்திய அரசு அந்நாட்டின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தம், 2017 ஜுன் 6 அன்று இலங்கையின் கொழும்புவில் கையெழுத்தானது. இலங்கையின் இருப்புப்பாதையை அபிவிருத்தி செய்வதற்காக, ஏற்கனவே சுமார் $966 மில்லியன் டாலர்கள் கடனை EXIM வங்கி மூலம் இந்தியா வழங்கியுள்ளது. இந்த நிதி இலங்கையின் தெற்கு மற்றும் வடக்கு இருப்புப்பாதைளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும்.

2. நேபாளத்தின் புதிய பிரதமர் யார்?

A. Bam Bahadur Kunwar

B. Sher Bahadur Deuba

C. Tribhuvan Bir Bikram Shah

D. Kirti Nidhi Bista



விடை : B. Sher Bahadur Deuba

1995,2001,2004-ஐ தொடர்ந்து தற்போது 4வது முறையாக நேபாள காங்கிரஸ் தலைவரான Sher Bahadur Deuba, நேபாளத்தின் பிரதமராக பதவியேற்கிறார். பிரதமர் பதவியிலிருந்து CPM (Maoist Centre) தலைவர் Pushpa Kamal Dahal பதவி விலகியதன் காரணமாக 2017-ம் ஆண்டில் புதிய பிரதமருக்கான தேர்தல் நடைபெற்றது. கூட்டணி பங்குதாரரான நேபாள காங்கிரசுடனான அதிகாரப்பகிர்வின் காரணமாக 2017 மே 24 அன்று Dahal பதவி விலகினார்.

**3. சுகாதாரத்துறையில் திறன் மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில், "Skills for life, Save a life", எனும் திட்டத்தை எந்த மத்திய அமைச்சர் தொடங்கிவைத்தார்?**



**A.** மேனகா காந்தி

**B.** நரேந்திர மோடி

**C.** JP நட்டா

**D.** வெங்கையா நாயுடு

**விடை : C. JP நட்டா**

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரான JP நட்டா, சுகாதாரத் துறையில் திறன் மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில், "Skills for life, Save a life", எனும் திட்டத்தை புது டெல்லியில் தொடங்கிவைத்தார். சுகாதார அமைப்பிலுள்ள பயிற்றுவிக்கப்பட்ட வல்லுநர்களின் தரத்தினை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சுகாதார வல்லுநர்களுக்கும் பொது மக்களுக்கும் குறிப்பிட்ட திறன்களில் பல்வேறு பயிற்சிகளளிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

**4. 2017-18-ம் ஆண்டிற்கான 2வது இரு மாதாந்திர நாணயக்கொள்கை மதிப்பீட்டின்படி, இந்திய ரிசர்வ் வங்கியின் நடப்பு Repo விகிதம் என்ன?**

**A. 6.50%**

**B. 6.75%**

**C. 6.55%**

**D. 6.25%**




**விடை : D. 6.25%**

இந்திய ரிசர்வ் வங்கியின், 2017-18-ம் ஆண்டிற்கான 2வது இரு மாதாந்திர நாணயக்கொள்கை மற்றும் கடன் கொள்கை மதிப்பீட்டின்படி, Liquidity Adjustment Facility (LAF)-ன் கீழ் நடப்பு Repo விகிதம் 6.25% என மாறாமல் உள்ளது. அதேசமயம், (LAF)-ன் கீழ் தலைகீழ் நடப்பு Repo விகிதம் 6.0% ஆகவும், Cash Reserve Ratio 4% ஆகவும், Marginal Standing Facility விகிதம்

மற்றும் வங்கி விகிதம் 6.50% ஆகவும் உள்ளது. மத்திய வங்கி Statutory Liquidity Ratio-வை 0.5% குறைத்துள்ளது. இதன் கணிக்கப்பட்ட பணவீக்கத்தின் வீச்சு, 2017-18-ம் ஆண்டின் முதல் பாதியில் 2% முதல் 3.5% ஆகவும், இரண்டாவது பாதியில் 3.5% முதல் 4.5% ஆகவுமிருக்கும். இது நடப்பு நிதியாண்டின் வளர்ச்சியை 7.4%-லிருந்து 7.3%-ஆக குறைத்துள்ளது.

5. பதிப்புரிமை அலுவலகத்தின் புதிய தலைவர் யார்?



A. Hoshiar Singh

B. Pradeep Dubey

C. Nripendra Mishra

D. Omita Paul

விடை : A. Hoshiar Singh

1994-ல் இந்திய தொலைத்தொடர்பு துறையில் அதிகாரியாக பணிபுரிந்த Hoshiar Singh, அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு பதிப்புரிமை அலுவலகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். Department of Industrial Policy and Promotion (DoPT)-ன் கீழ் இயங்கும் பதிப்புரிமை அலுவலகம், இசை மற்றும் திரைப்படத்துறையை பாதுகாக்கும் மற்றும் அது சம்பந்தமான பிரச்சனைகளை தீர்த்துவைக்கும். இவ்வலுவலகம், மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி நடக்கும் பதிப்புரிமை பதிவாளரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது. இதன் தலைமையகம் புது டெல்லியில் அமைந்துள்ளது.

6. UNICEF's 'Super Dads' பிரச்சாரத்தில் இணைந்துள்ள இந்தியர் யார்?




A. அமிதாப்பச்சன்

B. சச்சின் டெண்டுல்கர்

C. சாருக்கான்

D. ராஜ்யவரதன் சிங் ரத்தோர்

விடை : B. சச்சின் டெண்டுல்கர்

குழந்தைகளின் ஆரம்பக்கட்ட வளர்ச்சியில் தந்தையரின் பங்களிப்பை எடுத்துக்காட்டும் UNICEF-ன் 'Super Dads' பிரச்சாரத்தில், சச்சின் டெண்டுல்கர் இணைந்துள்ளார். இந்த பிரச்சாரத்தில் David Beckham, Novak Djokovic, Mahershala Ali, Lewis Hamilton மற்றும் Hugh Jackman போன்ற பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு உலகிலிருக்கும் நட்சத்திரங்கள் கலந்துகொள்கின்றனர். UNICEF-ன் இந்த பிரச்சாரத்தில் தந்தையர் தினத்தை கொண்டாடுவதோடு, இளம் சிறார்களின், மூளையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கான அன்பு, விளையாட்டு, பாதுகாப்பு மற்றும் நல்ல ஊட்டச்சத்து ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் உயர்த்திக்காட்டுகிறது. உலகெங்கிலுமுள்ள நட்சத்திரங்களின் தந்தையரின் நெஞ்சம் நெகிழும் காணொளிகள், புகைப்படத்தொகுப்புகள், சிறுகதைகள் போன்றவை இந்தப்பிரச்சாரத்தில் இடம்பெறும்.

**7. எந்த நாடு, அதிகாரப்பூர்வமாக North Atlantic Treaty Organization (NATO)-வின் புதிய உறுப்பினராக இணைந்துள்ளது?**




A. மொசாம்பிக்

B. கியூபா

C. மொண்டெனேகுரோ (Montenegro)

D. ஆஸ்திரியா

விடை : C. மொண்டெனேகுரோ (Montenegro)

2017 ஜுன் 5 அன்று வாசிங்டனில் நடைபெற்ற விழாவில், Montenegro அதிகாரப்பூர்வமாக, North Atlantic Treaty Organization (NATO)-வின் 29வது உறுப்பினராக இணைந்துள்ளது. உறுப்புநாடுகளின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை, அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக உறுதிப்படுத்துவதே NATO-வின் நோக்கமாகும். இதன் தலைமையகம் பெல்ஜியத்திலுள்ள பிரசல்சில் அமைந்துள்ளது.

**8. எந்த மாநில அரசு, திருமணங்களில் 'Green Protocol'-ஐ நடைமுறைப்படுத்தி உள்ளது?**

A. தமிழ்நாடு




B. திரிபுரா

C. மேற்கு வங்கம்

D. கேரளா

விடை : D. கேரளா

மாநிலத்திலுள்ளவர்கள் இயற்கையோடு இயைந்து திருமணம் செய்துகொள்வதற்காக, கேரள அரசு சமீபத்தில் பசுமை விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. தினசரி வாழ்வில் நெகிழிப்பயன்பாட்டை குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இவ்விதிமுறைகளை செயல்படுத்துவதன் மூலம் நெகிழி, ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கியெறியப்படும் கண்ணாடிப்பொருட்கள் மற்றும் தகடுகள் மற்றும் நெட்டி (Thermocoal) அலங்காரங்கள் போன்றவைகளின் பயன்பாடுகள் திருமணத்தின்போது தவிர்க்கப்படும். இதற்காக திருமண மண்டபங்கள், மாநாடுகள், உணவகங்கள் மற்றும் பிற திருமண நிகழ்ச்சிகளிலும் ஆய்வுகள் நடைபெறும். இந்த விதிமுறைகள் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். இதனை 'Suchitwa Mission' எனும் மாநில சுகாதார அமைப்பு, கண்ணூர், எர்ணாகுளம், கொல்லம் மற்றும் ஆலப்புழா ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் விரைவில் நடைமுறைபடுத்தப்படும்.

**9. 2017-ம் ஆண்டிற்கான பத்திரிகை வாழ்நாள் சாதனைக்கான RedInk விருது யாருக்கு வழங்கப்படவுள்ளது?**

A. Vinod Dua

B. Vinod Rai

C. T N Ninan

D. Kuldip Nayar




விடை : A. Vinod Dua

பல்வேறு வடிவங்களிலும், பாடங்களிலும் Vinod Dua-வின் பரந்த மற்றும் பல்துறை பங்களிப்புகளை அங்கீகரித்து, 2017-ம் ஆண்டிற்கான பத்திரிகை வாழ்நாள் சாதனைக்கான RedInk விருதை, மகாராஷ்டிர முதல்வர்

தேவேந்திர பட்னாவிஸ் 2017 ஜூன் 7 அன்று மும்பையில் வழங்கினார். இந்த விருதுகள் மும்பை பத்திரிகை சங்கத்தால் நிறுவப்பட்ட, தேசிய RedInk விருதின் ஒரு பகுதியாகும். இதற்கு தி இந்துவும், ஃபேஸ்புக்கும் ஊடக பங்குதாரர்களாவார்கள்.

10. எந்த மாநிலத்தில் முக்குறுத்தி தேசியப்பூங்கா அமைந்துள்ளது?

A. தமிழ்நாடு
B. திரிபுரா
C. சிக்கிம்
D. கேரளா



விடை : A. தமிழ்நாடு

தென்னிந்தியாவின் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில், தமிழ்நாட்டின் வடமேற்கு மூலையிலுள்ள உதகமண்டல மலையகத்தின் மேற்கில், நீலகிரி பீடபூமியின் மேற்கு மூலையில், 78.46 சதுர கி.மீ., பரப்பளவில் இந்த தேசியப்பூங்கா அமைந்துள்ளது. இது அழிவின் விளிம்பிலிருக்கும் விலங்குகளான வங்கப்புலி, ஆசிய யானை, Bonhote எலிகள், நீலகிரி லங்கூர்கள், நீலகிரி வரையாடுகள் போன்றவைகளுக்கு வாழிடமாக உள்ளது. இந்தப்பூங்கா நீலகிரி உயிரி சரணாலயத்தின் ஒரு பகுதியாகும். இது இந்தியாவின் முதல் சர்வதேச உயிரி சரணாலயமாகும்.

---

2017 June 8

1. எந்த நகரம், 2017 ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் உச்சிமாநாட்டை நடத்துகிறது?

A. Dushanbe
B. Astana
C. Beijing
D. Tashkent




விடை : B. Astana

2017 ஜூன் 8 அன்று ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் 17வது உச்சிமாநாடு, கசகஸ்தானிலுள்ள Astana-வில் தொடங்கியது. இந்த உச்சிமாநாட்டில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் இவ்வமைப்பின் முழுநேர உறுப்பினர்களாகின்றன. SCO என்பது சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், இரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் தலைவர்களால், 2001-ல் ஷாங்காய் நகரில் நிறுவப்பட்ட ஒரு யுரேசிய அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ அமைப்பாகும். இது உறுப்பு நாடுகளிடையே இராணுவ ஒத்துழைப்பை முக்கிய நோக்கமாகக்கொண்டது மற்றும் மத்திய ஆசியாவில் உளவுத்துறை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கியது. ஆப்கானிஸ்தான், பெலாரஸ், இந்தியா, ஈரான், மங்கோலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விரைவில் இவ்வமைப்பில் இணையும் நிலையிலுள்ளன.

**2. 2017 உலக பெருங்கடல் நாளின் மையக்கருத்து என்ன?**

**A. Protect your Ocean**

**B. Healthy Oceans, Healthy Planet**

**C. Our Oceans, Our Future**

**D. Youth: The Next Wave for Change**




**விடை : C. Our Oceans, Our Future**

பெருங்கடலிலிருந்து பெறப்படும் வளங்கள் பற்றி உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், சர்வதேச அளவில் பெருங்கடல் மூலம் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வது பற்றியும் அறிந்துகொள்ள, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 8 அன்று உலக பெருங்கடல் தினம் கடைபிடிக்கப்படுகிறது. 2017 உலக பெருங்கடல் தினத்துக்கான மையக்கருத்து, பெருங்கடலில் ஏற்படும் நெகிழி மாசுபாடு மற்றும் அவற்றை சுத்தம் செய்வதற்கான விழிப்புணர்வு வாசகமாக "Our Oceans, Our Future" எனவுள்ளது. இவ்வாண்டின் பெருங்கடல் நாளும், ஜூன் 5 முதல் 9 வரை, நியூயார்க்கில் அமைந்துள்ள ஐ.நா-வின் தலைமையகத்தில் நடைபெறும் ஐ. நா-வின் உலக பெருங்கடல் மாநாடும் ஒரே நாளில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டின் நோக்கம் பெருங்கடல்கள் மற்றும்

அவற்றின் வளங்களை பாதுகாத்து அவற்றை நிலையான முறையில் பயன்படுத்துவதாகும்.

**3. எந்த இந்திய வங்கி, நாட்டில் 100 டிஜிட்டல் கிராமங்களை அமைக்கவுள்ளது?**

A. பஞ்சாப் தேசிய வங்கி
B. தேனா வங்கி
C. இந்தியா ஸ்டேட் வங்கி
D. விஜயா வங்கி

விடை : D. விஜயா வங்கி

கிராமப்புற மக்களிடையே டிஜிட்டல் வங்கிச்சேவையை கொண்டுசேர்க்கும் முயற்சியாக, விஜயா வங்கி நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 100 டிஜிட்டல் கிராமங்களை அமைக்கவுள்ளது. கிராமப்புறங்களில் டிஜிட்டல் கிராமங்களை வளர்த்தெடுக்கும் ஒரே பொதுத்துறை நிதி நிறுவனம் இதுதான். இது ஏற்கனவே குண்டூர் மாவட்டத்தில் ஒரு டிஜிட்டல் கிராமம் உட்பட ஐந்து டிஜிட்டல் கிராமங்களை உருவாக்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமங்களில், இணைய வசதி, இலவச Wi-Fi இணைப்பு, அலைபேசிக்கான கட்டணம் செலுத்தும் வசதி, ATM அட்டைகள், இணைய வங்கிச்சேவை மற்றும் வீட்டுக்கு வீடு சென்று இது சம்பந்தமான கிராம மக்களுக்கு பயிற்றுவிப்பது போன்றவை செயல்படுத்தப்படும். மேலும், தகுதி வாய்ந்த கிராம மக்களுக்கு வங்கிக்கணக்குகளை உருவாக்கித்தந்து அவர்களை டிஜிட்டல் முறையில் பணப்பரிமாற்றங்களை செய்ய ஊக்குவிக்கும்.

**4. எந்த மாநிலத்தில், Anshi தேசியப்பூங்கா அமைந்துள்ளது?**

A. ஆந்திரப்பிரதேசம்
B. கேரளா
C. மேற்கு வங்கம்
D. கர்நாடகம்



விடை : D. கர்நாடகம்

Anshi தேசியப்பூங்கா கர்நாடகாவின் உத்தர கன்னடா மாவட்டத்திலுள்ள கர்வார் நகரத்திலிருந்து 60 கி. மீ., தொலைவில் அமைந்துள்ளது. இது மேற்குத்தொடர்ச்சி மலையின் சூழல் மாசுபடாத பகுதியில், கடல் மட்டத்திலிருந்து 200 மீட்டரிலிருந்து 925 மீ. வரையிலான உயரத்தில் அமைந்துள்ளது. இந்த தேசியப்பூங்காவில், சிறுத்தை, புலி மற்றும் யானை போன்ற விலங்கினங்களுக்கும்; இராச நாகம், கண்ணாடி விரியன், மலைப்பாம்பு, சாரைப்பாம்பு போன்ற ஊர்வனங்களுக்கும்; நாரை, கழுகு, மரங்கொத்தி, புல்புல் போன்ற பறவையினங்களுக்கும் இது வாழ்விடமாகவுள்ளது.

5. India Post Payments வங்கியின் புதிய தன்னிச்சையான இயக்குநர்கள் யார்?

A. Girraj Sharma மற்றும் Anupam Seth

B. Vinod Saxena மற்றும் Nitin Khanna

C. K G Karmakar மற்றும் Gauri Shankar

D. Jai Singh Narvaria மற்றும் Trilok Chand Gupta

விடை : C. K G Karmakar மற்றும் Gauri Shankar

K G Karmakar மற்றும் Gauri Shankar ஆகியோர், India Post Payments வங்கியின் புதிய தன்னிச்சையான இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பணி நியமனக்குழு, இவர்களின் பதவிக்காலத்தை 3 ஆண்டுகளுக்கு உறுதிசெய்துள்ளது. IPPB, சேமிப்பு மற்றும் தற்போதைய கணக்குகளில் ரூ.1 இலட்சம் வரை இருப்புத்தொகை வைத்துக்கொள்ளவும், காப்பீடு, பரஸ்பர நிதி, ஓய்வூதியம், சர்வதேச பணப்பரிமாற்றம் போன்ற அனைத்து விதமான சேவைகளையும் வழங்குகிறது.

6. அண்மையில் காலமான, உலகப்புகழ்பெற்ற ஆயுத வியாபாரியான Adnan Khashoggi, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. ஈரான்

B. இஸ்ரேல்



C. இத்தாலி
D. சவுதி அரேபியா

விடை : D. சவுதி அரேபியா

சவுதி அரேபியாவைச்சேர்ந்த பெருங்கோடிசுவரரான உலகப்புகழ்பெற்ற ஆயுத வியாபாரி Adnan Khashoggi, அண்மையில் இலண்டனில் காலமானார். இவர் ஆயுத விற்பனையாளராக அறியப்படுகிறார்.

7. 1200MW திறன்கொண்ட Budhi-Gandaki புனல் மின்சாரத்திட்டத்திற்காக, நேபாள நாடு எந்த நாட்டுடன் கூட்டுசேர்ந்துள்ளது?



A. சீனா
B. இந்தியா
C. இலங்கை
D. US

விடை : A. சீனா

1200MW திறன்கொண்ட Budhi-Gandaki புனல் மின்சாரத்திட்டத்திற்காக, சீனாவின் Gezhouba Group நிறுவனத்தின் நிதியொப்பந்தத்தில் நேபாளம் கையெழுத்திட்டுள்ளது. இந்தத்திட்டத்தின் மதிப்பீடு $2.5 பில்லியன் டாலர்களாகும். இத்திட்டம் கடுமையான மின்சாரப்பற்றாக்குறையை எதிர்கொள்ளும் நேபாளத்திற்கு பெரும் உதவியாக இருக்கும்.

8. 2017 பிரெஞ்சு ஓபன் கலப்பு இரட்டையர் போட்டியில் வென்ற டென்னிஸ் ஜோடி எது?



A. Sania Mirza மற்றும் Ivan Dodig
B. Rohan Bopanna மற்றும் Sania Mirza
C. Anna-Lena Groenefeld மற்றும் Robert Farah
D. Rohan Bopanna மற்றும் Gabriela Dabrowski

விடை : D. Rohan Bopanna மற்றும் Gabriela Dabrowski

2017 பிரெஞ்சு ஓபன் கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டியில், ஜெர்மனியின் Anna-Lena Groenefeld மற்றும் கொலம்பியாவின் Robert Farah டென்னிஸ் ஜோடியை 2-6, 6-2, 12-10 என்ற செட் கணக்கில் தோற்கடித்து, இந்தியாவின் Rohan Bopanna & கனடாவின் Gabriela Dabrowski டென்னிஸ் ஜோடி வென்றது.

**9. 2017 RedInk பத்திரிக்கையாளர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?**

A. Sreenivasan Jain

B. Bachi Karkaria

C. Raj Kamal Jha

D. Paranjoy Guha Thakurta



Raj Kamal Jha

விடை : C. Raj Kamal Jha

கடந்த இரு ஆண்டுகளில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையின் வழக்கமான விசாரணைப்பத்திரிகை முறையை தனது சீரிய மேற்பார்வையினால் மீட்டெடுத்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையின் முதன்மை ஆசிரியர் Raj Kamal Jha-வுக்கு, 2017 RedInk பத்திரிக்கையாளர் விருது வழங்கப்பட்டது. இவ்விருது ஜூன் 7 அன்று மும்பையில் நடைபெற்ற விழாவில் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிசால் வழங்கப்பட்டது. இவ்விருதுகள் மும்பை பத்திரிகை சங்கத்தால் நிறுவப்பட்ட, தேசிய RedInk விருதின் ஒரு பகுதியாகும்.

**10. எந்த நகரம், 2வது 2017 தேசிய யோகா சுகாதார ஆசிரியர் மாநாட்டை நடத்தவுள்ளது?**

A. போபால்

B. புது டெல்லி

C. லக்னோ

D. ஜெய்ப்பூர்



விடை : B. புது டெல்லி

2017 ஜூன் 9 அன்று புது டெல்லியிலுள்ள தேசிய ஊடக மையத்தில், AYUSH

அமைச்சகத்தின் அமைச்சரான, **Shripad Yesso Naik**-கால் 2வது 2017 தேசிய யோகா சுகாதார ஆசிரியர் மாநாடு தொடங்கிவைக்கப்படவுள்ளது. இம்மாநாட்டின் மையக்கருத்து **"Yoga for Health and Harmony"** ஆகும். யோகாவின் விஞ்ஞான அம்சங்கள் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான அதன் நன்மைகள் பற்றி பத்திரிகையாளர்களுக்கு ஒரு தெளிவினை வழங்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும். 150-க்கும் மேற்பட்ட சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய சுகாதார ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. **PIB**-ன் மூத்த அலுவலர்களும், **AYUSH** அமைச்சக அலுவலர்களும் இதில் கலந்துகொள்வார்கள்.

---

## 2017 June 9

**1. மக்கும் உயிரி தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட முன் கட்டணம் செலுத்தப்பட்ட பரிசு அட்டைகளை (Prepaid Gift Cards) வழங்கும் முதல் இந்திய வங்கி எது?**

A. ஆக்சிஸ் வங்கி

B. ICICI வங்கி

C. இந்திய ஸ்டேட் வங்கி

D. HDFC வங்கி




விடை : A. ஆக்சிஸ் வங்கி

சுற்றுச்சூழலுக்கு தோழமையான, ஒரு கட்டணம் செலுத்தும் தீர்வாக மக்கும் உயிரி தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட முன் கட்டணம் செலுத்தப்பட்ட பரிசு அட்டைகளை (Prepaid Gift Cards) வழங்கும் முதல் இந்திய வங்கி ஆக்சிஸ் வங்கியாகும். இந்த நெகிழி அட்டை **Polyethylene Terephthalate Glycol (PETG)**-யாலானது, எனவே இதனை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதும் மண்ணில் மக்கவைப்பதும் சுலபமாகும். இந்த அட்டைகளை உள்ளூர்களிலுள்ள கடைகளிலும் இணைய பணப்பரிமாற்றங்களிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்திய ரிசர்வ் வங்கியால் 2014 ஜூலை 1 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, முன்னதாக வழங்கப்பட்ட பரிசு அட்டைகளின் அதிகபட்ச செல்லுபடி காலம்

3 ஆண்டுகளாகும்.

2. அண்மையில் காலமான Basudev Chatterji, எந்த துறையுடன் தொடர்புடையவராவார்?

A. அரசியல்

B. வரலாறு

C. சட்டத்துறை

D. பத்திரிகைத்துறை



விடை : B. வரலாறு

2017 ஜூன் 8 அன்று அசாமிலுள்ள கவுகாத்தியில், புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான Basudev Chatterji காலமானார். இவர் இந்திய வரலாற்று ஆராய்ச்சிக்குழுவின் (Indian Council for Historical Research) முன்னாள் தலைவராவார். கல்வியாளரான இவர், புது டெல்லியிலுள்ள St Stephen கல்லூரியில் பேராசிரியராகவும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இளங்கலை கற்போருக்கான மேற்பார்வையாளராகவும் பணிபுரிந்துள்ளார். 'Trade, Tariffs and Empire : Lancashire and British Policy in India', மற்றும் 'Dictionary of Martyrs India's Freedom Struggle' ஆகியவை இவரது படைப்புகளாகும்.

3. எந்த ஐ.நா. அமைப்பும் இந்தியாவும் இணைந்து, நிலையான வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் விதமாக கூட்டு நிதி ஒன்றை ஆரம்பித்திருக்கிறது?

A. UNESCO

B. UNIDO

C. UNOSSC

D. UNWTO




விடை : C. UNOSSC

UN Office for South-South Cooperation (UNOSSC)-ம் இந்தியாவும் இணைந்து, உலகெங்கும் நிலையான அபிவிருத்தி திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒரு கூட்டு நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது. 2017 ஜூன் 8 அன்று

ஐ.நா.வின் "Permanent Mission of India"-வில் நடைபெற்ற உலக பெருங்கடல் நாள் சிறப்பு விழாவில், இந்த நிதியம் தொடங்கப்பட்டது. இந்திய-ஐ.நா. அபிவிருத்தி கூட்டுறவு நிதியம், 2030-ம் ஆண்டுக்கான செயற்பட்டியலில் (Agenda) 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு துணைபுரியும். வறுமை மற்றும் பசிக்கொடுமையை நீக்குவதும், சுகாதாரம், கல்வி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவதும், சுத்தமான குடிநீர், ஆற்றல் மற்றும் வாழ்வாதாரங்களுக்கான தேவைகளை எளிதில் கிடைக்கச்செய்யுமாறு அதிகரிப்பதுமே இதன் நோக்கமாகும்.

**4. 2017 NASA Astronaut Candidate Class-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்திய அமெரிக்கர் யார்?**



**A. Kayla Barron**

**B. Jasmin Moghbeli**

**C. Robb Kulin**

**D. Raja Chari**


விடை : **D. Raja Chari**

அமெரிக்க விமானப்படைத்தளபதியான இந்திய-அமெரிக்கர் **Raja Chari, 2017 NASA Astronaut Candidate Class**-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பூமியின் சுற்றுப்பாதை மற்றும் விண்வெளிக்கான பயிற்சிபெறும் 12 புதிய விண்வெளி வீரர்களில் இவரும் ஒருவராவார். கல்பனா சாவ்லா மற்றும் தற்போதைய NASA விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்சுக்குப் பிறகு விண்வெளிக்கு பறக்கும் இந்தியப்பூர்வீகத்தைச்சேர்ந்த மூன்றாம் நபர் இவராவார். தற்சமயம் இவர், 461வது **Flight Test Squadron**-ன் ஆணை பிறப்பிப்பாளரும், கலிபோர்னியாவின் **Edwards** விமானப்படையின் **F-35** ஒருங்கிணைந்த சோதனைப்படையின் இயக்குநருமாவார்.

**5. சமீபத்தில் காலமான புகழ்பெற்ற அரசியல்வாதியான P. Govardhan Reddy, எந்தக்கட்சியை சேர்ந்தவராவார்?**

A. இந்திய தேசிய காங்கிரசு

B. தெலுங்கு தேசம் கட்சி



C. பாரதீய ஜனதா கட்சி
D. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

விடை : A. இந்திய தேசிய காங்கிரசு

2017 ஜூன் 9 அன்று, இமாச்சலத்தின் குலு மணாலியில் பாராளுமன்ற குழு கூட்டத்திற்கு சென்றிருந்தபோது, இந்திய தேசிய காங்கிரசின் புகழ்பெற்ற அரசியல்வாதியான P. Govardhan Reddy காலமானார். தற்சமயம் இவர், தெலுங்கானா மாநிலத்தின் ராஜ்ய சபா பாராளுமன்ற உறுப்பினராகவுள்ளார்.

6. உலகளாவிய புகையிலை தடுப்புக்காக, WHO-வின் பொது இயக்குநரால் வழங்கப்பெறும், சிறப்பு அங்கீகார விருதினைப்பெறும் இந்தியர் யார்?



A. வெங்கையா நாயுடு
B. சுஷ்மா சுவராஜ்
C. JP நட்டா
D. நிதின் கட்காரி

விடை : C. JP நட்டா

இந்தியாவில் புகையிலை கட்டுப்பாட்டுக்கான முயற்சியை துரிதப்படுத்தியதற்காகவும், புகையிலை பயன்பாட்டிற்கு எதிராக, மக்களைக் காப்பாற்ற தைரியமான நடவடிக்கைகளை எடுத்ததற்காகவும், சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் JP நட்டாவுக்கு உலக சுகாதார அமைப்பின் பொது இயக்குநரால் வழங்கப்பெறும், சிறப்பு அங்கீகார விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த உலகளாவிய அங்கீகாரத்தை, தேசிய அளவில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைந்ததற்காக Framework Convention on Tobacco Control (FCTC)-ல், WHO-வின் தென் கிழக்காசிய பிராந்தியத்தின் இயக்குநரான Poonam Khetrapal Sing அவர்களால் வழங்கப்பட்டது.

7. எந்த செய்தி நிறுவனம் BRICS ஊடக ஒத்துழைப்பை அதிகரிக்க, $1 மில்லியன் டாலருக்கான நிதியத்தை அமைக்கவுள்ளது?

A. தென்னாப்பிரிக்காவின் Independent Media

B. சீனாவின் Xinhua
C. பிரேசிலின் CMA Group
D. இந்தியாவின் தி இந்து

விடை : B. சீனாவின் Xinhua

சீன அரசின் செய்தி நிறுவனமான Xinhua, BRICS-ன் உறுப்புநாடுகளின் பத்திரிகையாளர்களுக்கான விருதுகள் உட்பட, BRICS ஊடக ஒத்துழைப்பை அதிகரிக்க, $1 மில்லியன் டாலருக்கான நிதியத்தை அமைக்கவுள்ளது. BRICS ஊடக மன்றத்தின் நோக்கம், "balanced reporting" உட்பட 6 குறிக்கோள்களை மேம்படுத்துவதாகும். மேலும், இது BRICS-ன் ஊடக வளர்ச்சி, மக்கள் தொடர்பு ஆகியவற்றிலும் கவனத்தை செலுத்துகிறது. இந்த BRICS ஊடக மன்றம் என்பது சீனாவின் Xinhua, பிரேசிலின் CMA Group, தென்னாப்பிரிக்காவின் Independent Media, இந்தியாவின் தி இந்து மற்றும் இரஷ்யாவின் Sputnik News Agency and Radio ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் உருவானதாகும்.

8. சமீபத்தில் காலமான புகழ்பெற்ற இசுலாமிய உரிமைகள் ஆர்வலரான Mehrunnisa Dalwai, எந்த நாட்டைச்சேர்ந்தவராவர்?

A. அசாம்
B. உத்தரப்பிரதேசம்
C. மகாராஷ்டிரா
D. ராஜஸ்தான்



விடை : C. மகாராஷ்டிரா

சமூக சீர்த்திருத்த புரட்சி இயக்கமான 'Muslim Satyashodhak Mandal'-லைச் சேர்ந்த Mehrunnisa Dalwai (87), சமீபத்தில் மகாராஷ்டிராவின் புனேவில், 2017 ஜூன் 8 அன்று காலமானார். இசுலாமிய பெண்களுக்கு நீதி மற்றும் சம உரிமைகள் வழங்க இவர் அரும்பாடுபட்டு உழைத்துள்ளார். மேலும், மும்பையில் "முத்தலாக்" முறையை ஒழிப்பதற்காக பெருமளவிலான கூட்டத்தினை தலைமையேற்று ஊர்வலம் நடத்தினார். இவர் இசுலாமிய

ஆராய்ச்சி மையம் மற்றும் **Maharashtra Talaq Mukti Morcha** ஆகியவற்றின் நிறுவனராவார். இவரது சுயசரிதையான **"Mi Bharun Pawle"**, இயக்கத்தின் முன்னேற்றத்திற்கான ஒரு தூண்டுதலாகக்கருதப்படுகிறது. இவர் இசுலாமிய ஆர்வலரான காலஞ்சென்ற **Hamid Dalwai-ன்** மனைவியாவார்.

**9. அண்மையில் எந்த மாநில அரசு, UDAN திட்டத்திற்காக மத்திய விமானப்போக்குவரத்து அமைச்சகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

A. தமிழ்நாடு
B. மத்தியப்பிரதேசம்
C. உத்தரப்பிரதேசம்
D. கேரளா



விடை : A. தமிழ்நாடு

தமிழ்நாடு அரசு சமீபத்தில், மாநிலத்தில் **Udan** திட்டத்தை செயல்படுத்த உள்நாட்டு விமானப்போக்குவரத்து அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. முதல் கட்டமாக பிராந்திய வான்வழிப்போக்குவரத்து திட்டத்தில், ஓசூர், சேலம் மற்றும் நெய்வேலி ஆகிய ஊர்களுக்கு விமான சேவையை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த **Ude Desh KaAam Naagrik (UDAN)** திட்டத்தின் நோக்கம் குறைந்த விலையில் பிராந்திய வான்வழிப்போக்குவரத்து வசதிகளை எளிதாக்குவதன் மூலம், சாதாரண மக்களும் விமானச்சேவையை பயன்படுத்த வழிசெய்கிறது. மேலும் இது, உள்கட்டமைப்பு, வேலைவாய்ப்புகள் மற்றும் வர்த்தக மற்றும் தொழிற்துறை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**10. எந்த மாநிலத்தில் Mahananda வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளது?**

A. மேற்கு வங்கம்
B. உத்தரப்பிரதேசம்
C. பீகார்
D. அசாம்



விடை : A. மேற்கு வங்கம்

மகானந்தா வனவிலங்கு சரணாலயம், இமயமலையின் அடிவாரத்தில் டீஸ்டா மற்றும் மகானந்தா ஆறுகளுக்கிடையே அமைந்துள்ளது. இது மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்திய காட்டெருமை மற்றும் வங்கப்புலி ஆகியவற்றை அழிவிலிருந்து காக்கும் இவ்வனப்பகுதி, சரணாலயம் எனும் தகுதியை 1959-ம் ஆண்டு அடைந்தது. மேலும், அழிவின் விளிம்பிலிருக்கும் Rufous-necked Hornbill, Oriental Pied Hornbill, Great Hornbill ஆகிய பறவையினங்களுக்கும் வாழ்விடமாகவுள்ளது.

---

2017 June 10


1. 2017-ம் ஆண்டில் உலகின் மிக அதிக சம்பளம் பெறும் தடகள வீரர்களுக்கான Forbes பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய வீரர் யார்?

A. விராட் கோலி

B. சானியா மிர்சா

C. MS தோனி

D. லியாண்டர் பயஸ்




விடை : A. விராட் கோலி

2017 Forbes-ன் உலகின் மிக அதிக சம்பளம் பெறும் 100 விளையாட்டு வீரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே இந்திய வீரர் விராட் கோலியாவார். மொத்தம் $22 மில்லியன் டாலர்களுடன், விராட் கோலி 89வது இடத்தைப்பிடித்துள்ளார். இதில் $3 மில்லியன் சம்பளமாகவும், மீதமுள்ள $19 மில்லியன் ஒப்பந்தங்கள் மூலம் பெறப்பட்டதாகும். இந்தப்பட்டியலில் கால்பந்து வீரர் Cristiano Ronaldo முதலிடத்தையும், அவரைத்தொடர்ந்து அமெரிக்கக்கூடைப்பந்து வீரரான LeBron James, அர்ஜென்டினா கால்பந்து வீரரான Lionel Messi **மற்றும்** சுவிசின் டென்னிஸ் வீரரான Roger Federer ஆகியோர் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளனர்.

2. NITI Aayog கூட்டுறவு கூட்டாட்சிக்காக SATH எனும் திட்டத்தை

அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் "SATH" என்பது என்ன?

A. Sustainable Action for Transact Human capital

B. Sustainable Action for Transforming Human capital

C. Sustainable Action for Trance Human capital

D. Sustainable Action for Trace Human capital

விடை : B. Sustainable Action for Transforming Human capital

NITI Aayog மாநில அரசுகளுடன் இணைந்து, கூட்டுறவு கூட்டாட்சிக்காக SATH (Sustainable Action for Transforming Human capital) எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளில் மாற்றத்தை கொண்டுவருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். SATH-ன் நோக்கம் மூன்று எதிர்கால முன்மாதிரி மாநிலங்களை, சுகாதார அமைப்புகளுக்காக கண்டுபிடித்து உருவாக்குவதாகும். மாநில அரசுகளுடன் இணைந்து ஒரு தெளிவான திட்டப்பாதையை உருவாக்கி அவற்றின் துணையால் ஆளுமை கட்டமைப்பை உருவாக்குவது, அவற்றை கண்காணிப்பது, பல்வேறு துறைகளை நிர்வகிப்பது போன்றவையால் NITI Aayog தனது இறுதி இலக்கை அடையும். ஏலத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட McKinsey மற்றும் Company மற்றும் IPE Global consortium ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து NITI Aayog இத்திட்டத்தினை செயல்படுத்தும். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாநிலங்களில், முதல் 3 மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை 6 முறை அடைந்ததற்காக, எந்த இந்திய மலையேற்ற வீரரை நேபாள அரசு கௌரவித்துள்ளது?

A. Premlata Agarwal

B. Arunima Sinha

C. Love Raj Singh Dharmashaktu

D. Anshu Jamsenpa



விடை : C. Love Raj Singh Dharmashaktu

2017 ஜுன் 9 அன்று, நேபாளின் காத்மண்டுவிற்கு அருகிலுள்ள லலித்பூரில் Adventure Sports Tourism Society-யால் Love Raj Singh Dharmashaktu கௌரவிக்கப்பட்டார். இவர் வட இந்தியாவிலிருந்து, நேபாளத்தின் சுற்றுலாத்தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் டேராடூனில், எல்லைப் பாதுகாப்பு படையில் துணை கமாண்டராக பணிபுரிந்து வருகிறார். 1998, 2006, 2009, 2012, 2013 மற்றும் தற்போது 2017 மே 27 என 6 முறை இவர் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்துள்ளார். இவர் உத்தரகாண்ட் மாநிலத்தின் Kumaon பகுதியிலுள்ள Munsiyari-ன் Bona கிராமத்தைச் சேர்ந்தவராவார்.

4. ICC Hall of Frame-ல் நுழைந்த முதல் இலங்கை கிரிக்கெட் வீரர் யார்?

A. Mahela Jayawardene

B. Sanath Jayasuriya

C. Kumar Sangakkara

D. Muttiah Muralidaran



விடை : D. Muttiah Muralidaran

தொடர்போட்டிகளிலும், ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிகரமான பந்துவீச்சாளராக அறியப்படும் Muttiah Muralidaran, 2017 ஜுன் 8 அன்று இலண்டனில் ICC Hall of Frame-ல் அமர்த்தப்பட்டார். இலண்டனின் தி ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இந்திய இலங்கை ICC சாம்பியன்ஷிப் கோப்பை போட்டியின் இடைவேளையின்போது இவர் கௌரவிக்கப்பட்டார். இதன் மூலம் இலங்கை கிரிக்கெட்டணியிலிருந்து இதில் நுழைந்த முதல் வீரரும், மொத்தமாக 83வது ஆளுமாக இவருள்ளார். ICC-யின் முதன்மை நிர்வாக இயக்குநரான Dave Richardson, ICC Hall of Frame-ன் நினைவு தொப்பியை வழங்கி இதில் இணைத்துக்கொண்டார்.

5. முதன்முதலாக இந்திய இரயில்வே மனிதவள வட்டமேசை மாநாடு எந்த நகரத்தில் தொடங்கியுள்ளது?

A. புது டெல்லி

B. சென்னை

C. புனே

D. கொச்சி




விடை : A. புது டெல்லி

மத்திய இரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபாகர் பிரபு 2017 ஜுன் 10 அன்று புது டெல்லியில், முதல் இந்திய இரயில்வே மனிதவள வட்டமேசை மாநாட்டை தொடங்கிவைத்தார். மனித வளங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம், பல்வேறு பங்குதாரர்களுடனும், HR பயிற்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களுடனும் யோசனைகளை பரிமாறிக்கொள்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும். இம்மாநாடு "Stakeholders Expectations from HR", "The Future of Work - HR Role" மற்றும் "Creativity Within Constraints" என 3 மையக்கருத்துகளைக்கொண்டு நடைபெற்றது.

6. 2016-ம் ஆண்டிற்கான முதல் AIFF பெண் விளையாட்டு வீரர் யார்?

A. Ngangom Bala

B. Aditi Chauhan

C. Oinam Bembem Devi

D. Sasmita Malik



விடை : D. Sasmita Malik

Jeje Lalpekhlua மற்றும் Sasmita Malik ஆகியோருக்கு முறையே 2016-ம் ஆண்டுக்கான "AIFF Player of the Year" மற்றும் "AIFF Women's Player of the Year" விருது மும்பையிலுள்ள All India Football Federation (AIFF)-னால் வழங்கப்பட்டது. இந்திய பெண்கள் கால்பந்தணியின் வெற்றி மற்றும் வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியதால் Sasmita Malik-குக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. 2016-17-ல் இந்தியாவுக்காக விளையாடி, 9 போட்டிகளில் 7 கோல்கள் பெற்றமைக்காக Jeje Lalpekhlua-க்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

7. தேசிய பங்குச்சந்தையின் (NSE) புதிய மேலாண்மை இயக்குநராக மற்றும்

தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளவர் யார்?

A. Jainam Modi

B. Prabhat Jain

C. Vikram Limaye

D. Chitra Ramkrishna



விடை : C. Vikram Limaye

BCCI கிரிக்கெட் அமைப்பிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு, தேசிய பங்குச்சந்தையின் (NSE) புதிய மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக Vikram Limaye நியமிக்கப்படவுள்ளார். இவர் உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட BCCI குழுவின் உறுப்பினராவார். தற்போது, விடுப்புக்குப்பின் ஜூலை மாதம் திறக்கவுள்ள உச்சநீதிமன்றத்தினை அணுகி, BCCI நிர்வாகக்குழுவின் பொறுப்பிலிருந்து விலகவுள்ளார். உச்சநீதிமன்றம் பொறுப்பிலிருந்து விடுவித்த பிறகு, இவர் NSE-ல் சேருவார்.

8. பெண்களின் விழிப்புணர்வு மற்றும் பாலின தேர்வு பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 'Selfie with Daughter' எனும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ள இந்தியர் யார்?

A. நரேந்திர மோடி

B. சுஷ்மா சுவராஜ்

C. மேனகா காந்தி

D. பிரணாப் முகர்ஜி




விடை : D. பிரணாப் முகர்ஜி

2017 ஜுன் 9 அன்று புது டெல்லியிலுள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில், பெண்களின் விழிப்புணர்வு மற்றும் பாலின தேர்வு பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 'Selfie with Daughter' எனும் அலைபேசி செயலியை குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி அறிமுகப்படுத்தினார். இப்பிரச்சாரத்தை ஒரு பெரிய வெற்றியாக மாற்றுவதற்கு ,மக்களை தங்கள்

மகள்களுடன் தன்படம் **(Selfie)** எடுத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். **2015** சூனில் அரியானாவிலுள்ள **Bibipur** கிராமத்தில், **Sunil Jaglan** என்பவர் இந்தப்பிரச்சாரத்தை தொடங்கினார். குழந்தைப்பாலின விகிதத்தை மேம்படுத்தும் விதமாக, ஒரு பெண் குழந்தையின் பெற்றோராக இருப்பதை பெருமையாக எண்ணுவதே இப்பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

**9. எந்த இந்திய நகரத்தில், 2017 ஐரோப்பிய ஒன்றிய திரைப்பட விழா தொடங்கப்பட்டுள்ளது?**




**A.** புனே

**B.** கோயம்புத்தூர்


**C.** கொல்கத்தா

**D.** புது டெல்லி

விடை : **D. புது டெல்லி**

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதற்காக **22**வது **2017** ஐரோப்பிய ஒன்றிய திரைப்பட விழா புது டெல்லியிலுள்ள **Siri Fort** அரங்கத்தில் நடைபெற்றது. இத்திரைப்பட விழா எஸ்தேனியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், ஹங்கேரி, கிரீசு ஆகிய நாடுகளிலிலிருந்து வெளிவந்த படங்களை திரையிடுவது மட்டுமல்லாமல் சினிமாவின் பல்வேறு கலாச்சாரங்களின் வடிவங்களை ஆராயும். இவ்விழா, திரைப்பட விழா இயக்குநரகத்தின் துணையோடு நடைபெற்றது. மேலும் இவ்விழா, **2017** ஆகஸ்ட் **3** வரை புனே, மும்பை, கோவா, கொல்கத்தா, ராஞ்சி, கோயம்புத்தூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களில் நடைபெறும். இவ்விழாவில் ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த **22** திரைப்படங்கள் திரையிடப்படும்.

**10. எந்த மாநிலத்தில் Van Vihar தேசியப்பூங்கா அமைந்துள்ளது?**



**A.** உத்தரப்பிரதேசம்

**B.** ராஜஸ்தான்

**C.** மத்தியப்பிரதேசம்

**D.** குஜராத்

விடை : C. மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேச தலைநகரான போபாலில் 4.45 சதுர கி.மீ., பரப்பளவில் Van Vihar தேசியப்பூங்கா அமைந்துள்ளது. இங்கு ஆசிய சிங்கம், வங்கப்புலி, காட்டுப்பூனை, இந்திய ஓநாய், சிவப்பு நரி, இந்திய குள்ளநரி, காட்டு நாய், தேவாங்கு, வரிக்கழுதைப்புலி, Mugger முதலைகள், Gharial, பாம்புகள், மலைப்பாம்பு, தேனுண்ணும் கரடி ஆகியவை உள்ளன.

---

2017 June 11 & 12

1. 2017 பிரெஞ்சு ஓபன் ஆண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் வென்றவர் யார்?



A. Roger Federer

B. Novak Djokovic

C. Stanislas Wawrinka

D. Rafael Nadal

விடை : D. Rafael Nadal

பிரான்சில் நடைபெற்ற 2017 பிரெஞ்சு ஓபன் ஆண்கள் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில், ஸ்பெயினைச்சேர்ந்த Rafael Nadal சுவிச்சர்லாந்தின் Stanislas Wawrinka-வை 6-2, 6-3, 6-1 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார். இதன் மூலம், ஒரே வகையான 10 "Grand Slam" பட்டத்தை பெற்ற முதல் டென்னிஸ் வீரர் இவராவார். உலக தரவரிசையில் 4வது இடத்திலுள்ள இவரிடம் 15 "Grand Slam" பட்டங்கள் உள்ளன. இவரது பட்டங்கள் Roger Federer பெற்ற பட்டங்களைவிட மூன்று குறைவாகும்.

2. எந்த இந்தியர், பிரான்சின் மிகவுயர்ந்த குடிமகன் விருதான "Legion of Honor"-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?



A. அமிதாப்பச்சன்

B. சாருக்கான்

C. சவுமித்ரா சட்டர்ஜி

D. கமலஹாசன்

விடை : C. சவுமித்ரா சட்டர்ஜி

திரைத்துறை மற்றும் திரையரங்கத்திற்கான சிறந்த பங்களிப்பிற்காக வங்காளத்தின் சிறந்த நடிகரான சவுமித்ரா சட்டர்ஜிக்கு பிரான்சின் மிகவுயர்ந்த குடிமகனுகன் விருதான "Legion of Honor"-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதன் மூலம், இவ்விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட முதல் வங்காள நடிகர் இவராவார். 1987-ல் இயக்குநர் சத்யஜித் ராய்க்கு பிறகு, முப்பதாண்டுகளுக்குப்பின் இவ்விருது இத்துறைக்கு வழங்கப்படுகிறது. சத்யஜித் ராயின் 'Apur Sansar', 'Debi',' Aranyer Din Ratri', 'Ghare Bairey' மற்றும் 'Ganashatru' ஆகிய படங்களில் சட்டர்ஜி நடித்துள்ளார். அமிதாப்பச்சன், சாருக்கான், கமலஹாசன் மற்றும் சித்தார் கலைஞர் பண்டிட் இரவி சங்கர் ஆகியோருக்கு இவ்விருது ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. 2012-ல் சட்டர்ஜி, தாதா பால்சாகிப் விருது பெற்றுள்ளார்.

3. கிராமப்புற மக்களுக்காக மத்திய அரசு, எந்த காணொளி வழி சட்டசேவையை அறிமுகப்படுத்தியுள்ளது?

A. Tele Legal Aid

B. Tele Law

C. Tele Law Center

D. Tele Lawyer




விடை : B. Tele Law

கிராமப்புற மக்களுக்காக மத்திய அரசு, Tele Law எனும் காணொளி வழி சட்டசேவையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், ஏழைகளுக்கான சட்ட உதவி, நீதிக்கான அணுகல் மற்றும் ஏழைகளுக்கான அதிகாரத்தை அரசாங்கம் எளிதில் நிறைவேற்றும். இத்திட்டத்தின் கீழ், இந்த சேவை அனைத்து பொது சேவை மையங்களிலும் கிடைக்கும். இச்சேவை, சட்டக்கல்லூரி, மாவட்ட சட்ட சேவை அதிகாரிகள், தன்னார்வ சேவை வழங்குநர்கள் ஆகியோரை பொது சேவை மையத்தின் மூலம் இணைத்து அதன் மூலம் சேவையை வழங்கும். 1000-க்கும் அதிகமான பொது சேவை

மையங்களின் மூலம், மாநில தலைநகரங்களைச்சேர்ந்த **National Legal Services Authority** குழுவின் வழக்குரைஞர்கள், தங்களின் மேலான ஆலோசனைகளை காணொளி வழி வழங்குவார்கள். முதல் கட்டமாக, பீகாரிலும், உத்தரப்பிரதேசத்திலும் **500** பொது சேவை மையத்தினை கொண்டு, இத்திட்டம் சோதிக்கப்படும்.

**4. கனரா வங்கி அதன் கிளைகளின் மூலம் காப்பீடுகளை விற்க, எந்த பொதுக்காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்துள்ளது?**

**A. New India Assurance Company Limited**

**B. National Insurance Company Limited**

**C. United India Insurance Company**

**D. Oriental Insurance Company Limited**

**விடை : A. New India Assurance Company Limited**

கனரா வங்கி அதன் கிளைகளின் மூலம் காப்பீடுகளை விற்க, அரசுக்கு சொந்தமான பொதுக்காப்பீடு நிறுவனமான **New India Assurance Company Limited** உடன் இணைந்துள்ளது. கனரா வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த விகிதத்தில் மிகச்சிறந்த காப்பீடுகளை வழங்குவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்வொப்பந்தத்தின் கீழ், **New India Assurance** நிறுவனம், கனரா வங்கி கிளைகள் மூலம் வாகன, வீடு, உடல்நலம், பயணம், தீ, கடல் மற்றும் பொறியியல் ஆகியவற்றிற்கான காப்பீட்டுத்திட்டங்களை வழங்கும்.

**5. அண்மையில் காலமான, “Batman” தொலைக்காட்சித்தொடரில் நடித்து புகழ்பெற்ற Adam West, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

**A.** ஜெர்மனி

**B. US**

**C.** இரஷ்யா


**D.** ஜப்பான்



**விடை : B. US**

1960-களில் "Batman" தொலைக்காட்சித்தொடரில் நடித்து புகழ்பெற்ற Adam West (88), அண்மையில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காலமானார்.

6. அண்மையில் காலமான Dr C நாராயண ரெட்டி, எந்த துறையைச் சேர்ந்தவராவார்?



A. அரசியல்
B. பத்திரிகை
C. இலக்கியம்
D. சட்டத்துறை

விடை : C. இலக்கியம்

புகழ்பெற்ற கவிஞர் மற்றும் ஞானபீட விருதாளரான Dr C நாராயண ரெட்டி (86), 2017 ஜுன் 12 அன்று ஐதராபாத்தில் காலமானார். 'CiNaRe' என்று பிரபலமாக அறியப்படும் இவர், தனது படைப்புகளுக்காக பத்ம ஸ்ரீ மற்றும் பத்ம பூசன் விருதுகளை பெற்றுள்ளார். தெலுங்கு, உருது போன்ற ஏனைய மொழிகளில் புலமைபெற்ற இவர், நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட தெலுங்கு திரைப்படங்களுக்கு இவர் பாடல்களையும் எழுதியுள்ளார்.

7. 2017-ம் ஆண்டின் மும்பை மேயர் கோப்பைக்கான சர்வதேச ஓபன் சதுரங்கப்போட்டியில் வெற்றியடைந்த Nguyen Duc Hoa, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?



A. பிரான்ஸ்
B. இரஷ்யா
C. சீனா
D. வியட்நாம்

விடை : D. வியட்நாம்

2017 ஜுன் 11 அன்று நடைபெற்ற 2017-ம் ஆண்டின் மும்பை மேயர் கோப்பைக்கான சர்வதேச ஓபன் சதுரங்கப்போட்டியில், இந்திய சதுரங்க

விளையாட்டு வீரரான **GM Neelotpal Das**-சை வியட்நாமின் கிராண்ட் மாஸ்டர் **Nguyen Duc Hoa, 8.5** புள்ளிகளுடன் தோற்கடித்தார்.

**8. 2017 Kalinga இலக்கிய விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**




**A. Haraprasad Das**

**B. Paramita Satpathy**


**C. Anand Neelakantan**

**D. Dinanath Pathy**

விடை : **A. Haraprasad Das**

**2017** ஜூன் **11** அன்று நடைபெற்ற **4**வது **Kalinga** இலக்கிய விருது வழங்கும் விழாவில், புகழ்பெற்ற கவிஞரும், கட்டுரையாளருமான கவிஞர் **Haraprasad Das**-க்கு, இலக்கியத்துக்கான அவரின் பங்களிப்பிற்காக **2017 Kalinga** இலக்கிய விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு **Kalinga Literary Festival (KLF)** இரண்டு புதிய விருதுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. **2017 Kalinga** சர்வதேச இலக்கிய விருதை ஆனந்த நீலகண்டன், தனது இலக்கிய பங்களிப்பிற்காக வென்றுள்ளார். **2017 Kalinga Karubaki** விருதை **Paramita Satpathy**, தனது ஒடிய மொழி கவிதைப்பங்களிப்பிற்காக வென்றுள்ளார். இவ்வாண்டுக்கான மையக்கருத்து **"Literature for Peace and Harmony"** ஆகும்.

**9. எந்தத்தேதியில், உலக குழந்தைத்தொழிலாளர் ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது?**




**A. ஜூன் 10**

**B. ஜூன் 11**

**C. ஜூன் 12**

**D. ஜூன் 13**

விடை : **C. ஜூன் 12**

உலகளாவிய குழந்தைத்தொழிலாளர் முறையை தடுக்க தேவையான நடவடிக்கைகள், முயற்சிகள் பற்றிய விழிப்புணர்வாக, உலக

குழந்தைத்தொழிலாளர் முறைக்கு எதிரான நாள், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 12 அன்று அனுசரிக்கப்படுகிறது. 2017-ம் ஆண்டுக்கான மையக்கருத்து "In conflicts and disasters, protect children from child labour" ஆகும். இது குழந்தைத்தொழிலாளர் மீதான மோதல்கள் மற்றும் தாக்கத்தை மையமாகக் கொண்டுள்ளது. இந்நாள் அரசாங்கங்கள், முதலாளி மற்றும் தொழிலாளர் அமைப்புகள், மக்கள் என அனைவருக்கும் குழந்தைத்தொழிலாளர்களின் கொடுமைகளை எடுத்துரைக்கிறது மற்றும் அவர்களால் முடிந்த உதவியை செய்ய வழிசெய்கிறது.

**10. Nawabganj பறவைகள் சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**

A. மத்தியப்பிரதேசம்

B. உத்தரப்பிரதேசம்

C. ராஜஸ்தான்

D. குஜராத்



விடை : B. உத்தரப்பிரதேசம்

Nawabganj பறவைகள் சரணாலயம் உத்தரப்பிரதேசத்திலுள்ள கான்பூர்-லக்னோ நெடுஞ்சாலையிலுள்ள உன்னோ மாவட்டத்தில் அமைந்துள்ளது. 2015-ம் ஆண்டில் இச்சரணாலயம் Shahid Chandra Shekhar Azad பறவைகள் சரணாலயம் என பெயர் மாற்றப்பட்டது. இங்கு நாரை, கொக்கு, வெண்கழுத்து நாரை, வண்ண நாரை, பெண்மயில், நீர்ப்பறவைகள், விசிலடிக்கும் சிட்டு போன்ற பறவையினங்களும் இராசநாகம், மலைப்பாம்பு, நீர்ப்பாம்புகள், கண்ணாடி விரியன், கட்டுவிரியன் போன்ற ஊர்வனங்களும் உள்ளன. மேலும் இங்கு, மான் பூங்கா, காட்சி கோபுரங்கள், படகு இல்லம் போன்றவையும் உள்ளன.

---

## 2017 June 13

**1. சர்வதேச வெண்தோல் நோய் ஒழிப்பு நாள் (International Albinism Awareness Day), எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது?**

A. ஜூன் 11

B. ஜூன் 12



C. ஜூன் 13

D. ஜூன் 14

விடை : C. ஜூன் 13

வெண்தோல் நோயுடையவர்களுக்கு எதிரான தாக்குதல் மற்றும் பாகுபாடுகளை தடுக்கவும், இந்நோய்பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 13 அன்று சர்வதேச வெண்தோல் நோய் ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. இதுவொரு மரபணுக்கோளாறு நோயாகும். இதன் விளைவாக தோல், முடி மற்றும் கண்களில் சிறு இடங்களில் அல்லது முழுவதுமாக மெலனின் நிறமிகளற்று காணப்படும். இந்நிறமி இல்லாத காரணத்தினால் வேனல்கட்டிகள், தோல்புற்றுநோய் போன்றவையால் பாதிக்கப்படும் வாய்ப்பு இவர்களுக்கு அதிகமாகும். இவர்கள் கண்பார்வை கோளாறுகளான ஒளியைக்கண்டு பயப்படல் (Photophobia), Amblyopia (சோம்பேறிக்கண்), Nystagmus போன்ற நோய்களாலும் பாதிக்கப்படுகிறார்கள்.

2. 2017-ம் ஆண்டு சர்வதேச துப்பாக்கிச்சுடும் போட்டியின் Gabala உலகக்கோப்பை போட்டியில் கலப்பு அணியில், 10 மீ., புனல் துப்பாக்கிச்சூட்டு (Air-pistol shoot) நிகழ்வில் தங்கம் வென்ற இந்திய ஜோடி எது?

A. Sanjeev Rajput மற்றும் Anjali Bhagwat

B. Apurvi Chandela மற்றும் Jitu Rai

C. Anjali Bhagwat மற்றும் Omkar Singh

D. Jitu Rai மற்றும் Heena Sidhu



விடை : D. Jitu Rai மற்றும் Heena Sidhu

Azerbaijan-லிலுள்ள Gabalaவில் நடைபெற்ற 2017-ம் ஆண்டு சர்வதேச துப்பாக்கிச்சுடும் போட்டியின் Gabala உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் கலப்பு அணியில், 10 மீ., புனல் துப்பாக்கிச்சூட்டு நிகழ்வில் இரஷ்ய ஜோடியை தோற்கடித்து, இந்திய துப்பாக்கிச்சுடும் வீரர்கள் Jitu Rai மற்றும்

Heena Sidhu தங்கம் வென்றனர். இறுதிப்போட்டியில் இரஷ்ய ஜோடியை 7-6 என்ற கணக்கில் தோற்கடித்தனர். 2017 பிப்ரவரியில் புது டெல்லியிலுள்ள ISSF உலகக்கோப்பை போட்டியில் வெற்றி பெற்றதைத்தொடர்ந்து இந்த ஜோடி பெறும் இரண்டாவது உலகக்கோப்பைக்கான தங்கம் இதுவாகும். 45 நாடுகளிலிருந்து 430 வீரர்கள் Gabala உலகக்கோப்பை போட்டியில் போட்டியிடுகின்றனர். இது ISSF உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் பங்கேற்க ஒரு கடைசிவாய்ப்பாகும். உலகச்சாம்பியன், ஒலிம்பிக் வீரர்களென இறுதியாக உலகின் மிகச்சிறந்த 8 துப்பாக்கிச்சுடும் வீரர்கள் மட்டுமே உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். இந்த கலப்பு அணி துப்பாக்கிச்சுடும் போட்டி, வரும் 2020-ல் டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

**3. 2017 Formula 1 Canadian Grand Prix போட்டியை வென்றவர் யார்?**

A. Lewis Hamilton

B. Valtteri Bottas

C. Daniel Ricciardo

D. Sebastian Vette



விடை : A. Lewis Hamilton

கனடாவின் Montreal-லிலுள்ள Circuit Gilles Villeneuve-ல் நடைபெற்ற 2017 Formula 1 Canadian Grand Prix போட்டியை Lewis Hamilton வென்றுள்ளார். Canadian Grand Prix போட்டியில் இது இவரின் 6வது வெற்றியாகும் மற்றும் இவரது பந்தய வாழ்வில் இது 56வது வெற்றியாகும்.

**4. எந்த மாநில அரசு தனது மாநில மக்களுக்காக, “இலவச அமரர் ஊர்தி” சேவையினை தொடங்கவுள்ளது?**

A. இமாச்சலப்பிரதேசம்

B. பஞ்சாப்

C. உத்தரப்பிரதேசம்

D. மத்தியப்பிரதேசம்



விடை : B. பஞ்சாப்

பஞ்சாப் மாநில அரசு தனது மாநில மக்களுக்காக, "இலவச அமரர் ஊர்தி" சேவையினை தொடங்கவுள்ளது. அனைத்து அரசு மருத்துவ மனைகளும், இச்சேவையினை இலவசமாக வழங்க பணிக்கப்பட்டுள்ளன. இறந்தவரின் குடும்பத்தைச்சேர்ந்தவர்கள், சடலத்தை எடுத்துச்செல்ல சரியான வசதியை கொண்டுள்ளனரா என்பதை ஆவணப்பதிவுசெய்துகொள்ள மருத்துவமனை உதவியாளர்கள் இதற்கு அவசியமாகும். தற்சமயம் வரை, இவ்வசதியை செயல்படுத்த இம்மாநிலத்தின் அரசு மருத்துவமனைகளில் எந்தவித முன்னேற்பாடும் செய்யப்படவில்லை.

5. எந்த நீர் சேமிப்பு மாதிரி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின் சிறந்த தேசிய விருதுக்கு தேர்வாகியுள்ளது?

A. Jal Sanchay திட்டம்

B. Jal திட்டம்

C. Jal Jyoti திட்டம்

D. Jal Marg திட்டம்



விடை : A. Jal Sanchay திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்தின் சிறந்த தேசிய விருதுக்கு, Jal Sanchay திட்டம் எனும் நீர் சேமிப்பு மாதிரி தேர்வாகியுள்ளது. 2017 ஜூன் 19 அன்று புது டெல்லியிலுள்ள விக்யான் பவனில் நடைபெறும் விழாவில் இவ்விருது வழங்கப்படும். தெற்கு மத்திய பீகாரிலுள்ள நாளந்தா மாவட்டத்தின் அலுவலர்கள் இந்த நீர் சேமிப்பு மாதிரியை வெற்றிகரமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், கண்காணிப்பு அணைகள் கட்டப்பட்டு, பாரம்பரிய நீர்ப்பாசன முறையான Aahar-Pyne முறை செயல்படுத்தப்படும். பாரம்பரிய நீர்த்தேக்கங்கள் தூர்வாரப்பட்டு புதுப்பிக்கப்படும். இவை மழைநீர் சேமிப்பு பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும். நீர் மேலாண்மைக்காக பாரம்பரிய நீர் சேமிப்பு முறைகள் பயன்படுத்தப்படும். விவாசாயிகள் மற்றும் உள்ளூர் மக்களின் ஆதரவு மற்றும் பிரச்சாரத்தால், நீர் கிடைக்கும் அளவு

மேம்படுவதோடு, அவற்றை பண்ணை உற்பத்திக்கு பயன்படுத்தவும் முடியும்.

**6. எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் நீருக்கடியில் மெட்ரோ இரயில் சுரங்கப்பாதை அமையவுள்ளது?**




A. மும்பை

B. கொச்சி

C. கொல்கத்தா

D. புனே

விடை : C. கொல்கத்தா

இந்தியாவின் முதல் நீருக்கடியில் மெட்ரோ இரயில் சுரங்கப்பாதை, மேற்குவங்காள மாநிலத்திலுள்ள கொல்கத்தா நகரில் பாயும் ஹூக்ளி நதியில் அமையவுள்ளது. இந்த சுரங்கப்பாதை ஆற்றுக்கடியில் 30 மீ., ஆழத்தில் அமையவுள்ளது. புகழ்பெற்ற ஒளரா பாலத்திற்கு சில மீட்டர் தூரத்திலேயே இது அமையவுள்ளது. தினமும் 10-12 இலட்சம் பயணிகளை கொண்ட இந்த மெட்ரோ இரயில், Howrah மற்றும் Sealdah எனும் இரண்டு முதன்மை இரயில் முனையங்களை இணைக்கும். ரூ 60 கோடி செலவில், இந்தத்திட்டம் 2019 டிசம்பரில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**7. 2017 பிரெஞ்சு ஓபன் மகளிர் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் வென்றவர் யார்?**



A. Kristina Mladenovic

B. Garbine Muguruza

C. Jelena Ostapenko

D. Simona Halep

விடை : C. Jelena Ostapenko

2017 பிரெஞ்சு ஓபன் மகளிர் ஒற்றையர் டென்னிஸ் இறுதிப்போட்டியில், ருமேனியாவின் Simona Halep-ஐ 4-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில்,

லத்வியாவின் தொழில்முறை டென்னிஸ் விளையாட்டு வீரரான **Jelena Ostapenko** தோற்கடித்தார். இதன் மூலம் **Grand Slam** ஒற்றையர் போட்டியை வென்ற முதல் லத்விய டென்னிஸ் விளையாட்டு வீரர் இவராகிறார். மேலும், 1933-க்குப்பிறகு தரவரிசையில் முதல் 16 இடங்களுக்குள் இல்லாத ஒரு பெண் டென்னிஸ் விளையாட்டு வீரர், பிரெஞ்சு ஓபனை வெல்வதும் இதுவே முதல்முறையாகும். இவர், தனது ஆக்ரோஷமான விளையாட்டு பாணியினால் பிரபலமாக அறியப்படுகிறார்.

8. பாராளுமன்ற ஒத்துழைப்புக்காக எந்த நாட்டின் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?



A. வியட்நாம்

B. ஜப்பான்

C. மாலத்தீவு

D. மொரிசியஸ்

விடை : D. மொரிசியஸ்

இரு நாடுகளின் பாராளுமன்றங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்த மொரிசியசு நாட்டுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. **Port Louis-ல்** நடைபெற்ற சந்திப்பிற்கு பிறகு, மக்களவை சபாநாயகரான சுமித்ரா மாகாஜனும், மொரிசியசு தேசிய சபையின் சபாநாயகரான **Santi Bai Hanoomanjee-யும்** இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த உறவு, நட்பு மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றின் நீடித்த வளர்ச்சிக்கான ஒரு தளத்தை வழங்குகிறது.

9. எத்தனை இந்திய மாநிலங்கள் தங்கள் எல்லைகளை, மியான்மருடன் பகிர்ந்துகொண்டுள்ளன?




A. 2

B. 3

C. 4

D. 5

விடை : C. 4

வடகிழக்கு இந்திய மாநிலங்களான அருணாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மிசோரம் மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்கள், மியான்மருடன் 1,643 கி.மீக்கு தங்கள் எல்லைகளை பகிர்ந்துகொண்டுள்ளன. இரு நாட்டு எல்லைக்குள் 16 கி.மீ., தொலைவு வரை இந்திய மற்றும் மியான்மர் குடிமக்கள் சுதந்திரமாக சென்றுவர அனுமதிக்கும் விதிகளை ஆராய இந்திய அரசு ஒரு நிபுணர் குழுவை அமைத்தது. இதில் அவ்விதிகள் ஆயுதக்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கள்ளநோட்டு கும்பல்களால் மீறப்பட்டு வருவதை, உள்துறை அமைச்சகத்தின் சிறப்பு செயலாளர் (உள்நாட்டு பாதுகாப்பு) தலைமையில் செயல்படும் குழு கண்டறிந்தது. இக்குழு சீர்திருத்தம் செய்யப்பட்ட வழிமுறைகளை அடுத்த 3 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கும். இக்குழு நான்கு மாநிலங்களுக்கும் பொதுவான செயல்பாட்டு நடைமுறைகளை தயாரிப்பதனால், போராளிகள் மற்றும் குற்றவாளிகளை எல்லைக்கு வெளியேயே இனங்கண்டுவிடும். இதனால் பொதுமக்களுக்கு எவ்வித இன்னல்களும் ஏற்படாது.

**10. "Indira Gandhi - A life in nature" நூலின் ஆசிரியர் யார்?**

A. Jairam Ramesh

B. Chandi Prasad Bhatt

C. Anadish Kumar Pal

D. Sunderlal Bahuguna



விடை : A. Jairam Ramesh

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியை இயற்கை ஆர்வலராகவும், இந்தியாவின் பாதுகாப்புக்கொள்கையை அவர் எப்படி முன்னெடுத்தார் என்பதையும் ஆராயும் இந்நூலை, மூத்த காங்கிரசு தலைவரும் முன்னாள் சுற்றுச்சூழல் அமைச்சருமான Jairam Ramesh எழுதியுள்ளார். அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், மொத்த வடகிழக்குப்பகுதி மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலையிலுள்ள மழைக்காடுகள் போன்றவற்றை அழிவுகளிலிருந்து காப்பாற்றுவதற்காக திருமதி இந்திரா காந்தி தனது

அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளார் என இவர் தனது இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்புத்தகம், இயற்கை ஆர்வலர்களான **Salim Ali, Billy Arjan Singh, Sunderlal Bahuguna** மற்றும் **Anne Wright** ஆகியோரிடம் இந்திரா கொண்டிருந்த நட்பினையும் விளக்குகிறது.

---

2017 June 14

1. கூட்டுக்கல்வி முறைக்காக நாளந்தா பல்கலைக்கழகம் எந்த நாட்டின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?



A. தென்கொரியா
B. ஜப்பான்
C. வியட்நாம்
D. மலேசியா

விடை : A. தென்கொரியா

கூட்டுக்கல்வி முறைக்காக நாளந்தா பல்கலைக்கழகம், தென்கொரியாவின் **Academy of Korean Studies** உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பீகாரின் பாட்னாவில் கையெழுத்திட்டது. இவ்வொப்பந்தத்தின் படி, இரு பல்கலைக்கழகங்களும் தங்களின் கூட்டு ஆராய்ச்சித்திட்டங்கள், ஆசிரிய மற்றும் மாணவர் பரிவர்த்தனை, தரவு பகிர்வு, கல்வி ஆராய்ச்சி, கூட்டுப்பயிற்சி போன்றவைகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளும். இந்த ஒப்பந்தத்தின் செல்லுபடிகாலம் **5** ஆண்டுகளாகும்.

2. மியான்மர் எல்லையில் சுதந்திரமான போக்குவரவினை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழு எது?



A. **V. Shashank Shekhar** குழு
B. **S. Jayaraman** குழு
C. **Rina Mitra** குழு
D. **Satyendra Garg** குழு

விடை : C. **Rina Mitra** குழு

மியான்மர் எல்லையில் சுதந்திரமான போக்குவரவின் தவறான பயன்பாட்டை ஆராய, மத்திய உள்துறை அமைச்சகம் ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது. உள்துறை அமைச்சகத்தின் சிறப்பு செயலரான Rina Mitra-வின் தலைமையில் இக்குழு செயல்படும். இக்குழு சீர்திருத்தம் செய்யப்பட்ட வழிமுறைகளை அடுத்த 3 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கும். வடகிழக்கு இந்திய மாநிலங்களான அருணாச்சலப்பிரதேசம், நாகாலாந்து, மிசோரம் மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்கள், மியான்மருடன் 1,643 கி.மீக்கு தங்கள் எல்லைகளை பகிர்ந்துகொண்டுள்ளன. இரு நாட்டு எல்லைகளையும்தாண்டி 16 கி.மீ., தொலைவு வரை சுதந்திரமாக சென்றுவர இந்திய மற்றும் மியான்மர் குடிமக்களுக்கு அனுமதியுண்டு. எல்லை அதிகாரிகளால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஆவணத்தைக்கொண்டு, அவர்கள் 72 மணிநேரம் வரை தங்கவும் அனுமதியுண்டு. இது ஆயுதக்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் கள்ளநோட்டு கும்பல்களால் தவறாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3. 2017 உலக குருதிக்கொடை நாளுக்கான (World Blood Donor Day) மையக்கருத்து என்ன?**

A. Thank you for saving my life

B. Blood connects us all

C. Every blood donor is a hero

D. Give Blood. Give Now. Give Often




விடை : D. Give Blood. Give Now. Give Often (குருதி தாருங்கள். இப்போதும். எப்போதும்)

பாதுகாப்பான குருதி மற்றும் குருதிசார்ந்த பொருட்களின் தேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, உயிர்காக்கும் குருதியை தானமாக வழங்கும் குருதிக்கொடையாளர்களுக்கு நன்றிகூறும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 14 அன்று உலக குருதிக்கொடை நாள் கடைபிடிக்கப்படுகிறது. ஓர் அலகு குருதி 3 உயிர்களைக்காக்கும். ஒருவர் தனது 18 வயது தொடங்கி 60 வயது வரை ஒவ்வொரு 90 நாட்களுக்கும் ஒருமுறை தனது குருதியை தானமாக தருகிறாறெனில், அவர் தன்

வாழ்நாளில் 90 காலன் அளவுள்ள குருதியை தானமாக தருகிறாறென்றும் 500-க்கும் மேற்பட்ட உயிர்களைக்காப்பாற்றுகிறாறென்றும் அர்த்தமாகும். 2017 உலக குருதிக்கொடை நாளுக்கான (World Blood Donor Day) மையக்கருத்து "Give Blood. Give Now. Give Often" ஆகும்.

**4. 2017 இளைய உலக அழகிக்கான இணைய போட்டியில் வென்ற Padmalaya Nanda, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. அசாம்

B. ஒடிசா

C. மேற்கு வங்கம்

D. ஜார்கண்ட்



விடை : B. ஒடிசா

US-ன் ஜார்ஜியாவிலுள்ள துறைமுக நகரமான Batumi-ல் நடைபெற்ற "2017 Little Miss Universe" அழகிப்போட்டியில், ஒடிசாவைச்சேர்ந்த Padmalaya Nanda (12), "Little Miss Universe Internet 2017", "Little Miss Universe Grand Prix" மற்றும் "Little Miss Actress" என்ற 3 விருதுகளையும் ஒருசேர வென்று வரலாற்று சாதனை நிகழ்த்தியுள்ளார். இவ்விருதுகளைப்பெறும் முதல் இந்தியப்பெண் இவராவார். செப்டம்பர் 25 முதல் அக்டோபர் 1 வரை கிரீசில் நடைபெறும் "Little Miss World 2017" போட்டியில் இவர் பங்கேற்கவுள்ளார்.

**5. 2017 Nanniyode Rajan நினைவு விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

A. Prayar கோபாலகிருட்டிணன்

B. E ஸ்ரீதரன்

C. Vakkom B புருசோத்தமன்

D. K C சோசப்



விடை : B. E ஸ்ரீதரன்

டெல்லி மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை ஆலோசகரான E ஸ்ரீதரனுக்கு 2017-ம் ஆண்டுக்கான Nanniyode Rajan நினைவு விருது, நாட்டின்

வளர்ச்சிக்கான இவரின் பங்களிப்பிற்காக வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது ரூ. 25,000 ரொக்கப்பணம் மற்றும் ஒரு கோப்பையை உள்ளடக்கியது. இது Milma திருவனந்தபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரின் நினைவாக வழங்கப்படுகிறது.

**6. எந்தத்துறைமுக நகரத்தில் இந்திய-ஆஸ்திரேலிய கடற்படைப் பயிற்சியான "AUSINDEX 17" தொடங்கியுள்ளது?**

A. Fremantle

B. கொச்சின்

C. Geraldton

D. விசாகப்பட்டினம்




விடை : A. Fremantle

இரு கடற்படைகளுக்கிடையேயான ஒத்துழைப்பு மற்றும் இயங்குதன்மையை அதிகரிப்பதற்காக ஜுன் 13 அன்று ஆஸ்திரேலியாவின் Fremantle-ல், இந்திய கடற்படை மற்றும் ராயல் ஆஸ்திரேலிய கடற்படைகளுக்கு இடையே, கடல்சார் பயிற்சியான "AUSINDEX-17" தொடங்கியுள்ளது. இதில் Rear Admiral Biswajit Dasgupta-வின் தலைமையின் கீழ், இந்தியக்கடற்படையின் கிழக்குக் கடற்படை பங்கேற்கும். இந்த 5 நாள் பயிற்சியில் INS Shivalik (பன்முகத்திறன்கொண்ட பீரங்கிக்கப்பல்), INS Kamorta (நீர்மூழ்கி போர்க்கப்பல்) மற்றும் INS Jyoti (எரிபொருள் நிரப்பும் கப்பல்) ஆகிய இந்திய போர்க்கப்பல்கள் அணிவகுக்கும்.

**7. எந்த நாடு, உலகின் மிகச்சிறிய மற்றும் மலிவான தனியார் ஜெட் விமானமான "Vision Jet"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது?**

A. UK

B. ஜப்பான்

C. US

D. சீனா



விடை : C. US

அமெரிக்க விமான நிறுவனமான "Cirrus Aircraft", ரூ.12.6 கோடிக்கு, உலகின் மிகச்சிறிய மற்றும் விலைமலிவான தனியார் ஜெட் விமானமான "Vision Jet"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஜெட் விமானம் 5 பேரை சுமந்துகொண்டு, 1500 மைல் தூரம்வரை பறந்துசெல்லும் திறன் படைத்தது. இது 28000 அடி உயரம் வரை பறக்கும். ஒரு தனி விமானிமூலம் சுலபமாக இயக்கக்கூடிய, ஓர் இயங்குபொறி (எஞ்சின்) கொண்ட, முதல் தனியார் ஜெட் விமானம் இதுவாகும். இதனால் உற்பத்திச்செலவும், பயனாளர்களுக்கு பராமரிப்பு செலவும் குறைவாக இருக்கும். இதன்மூலம் மணிக்கு 345 மைல் வேகத்தில் பயணிக்க முடியும்.

**8. எந்த நாடு, உலகின் மிகப்பெரிய உணவுத்திருவிழாவான "ANUGA 2017"-ல் இணை பங்குதாரராக ஆகவுள்ளது?**

A. இந்தோனேசியா

B. சீனா

C. இந்தியா

D. சுவிச்சர்லாந்து




விடை : C. இந்தியா

உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் குளிர்பானங்கள் வர்த்தகத்தின் முக்கிய உணவுத்திருவிழாவான "ANUGA 2017", 2017 அக்டோபர் 7 அன்று ஜெர்மனியின் Cologne-ல் நடைபெறவுள்ளது. ANUGA-வின் விரிவாக்கம் Allgemeine Nahrungs- und Genussmittel-Ausstellung (பொது உணவு மற்றும் அத்தியாவசியமல்லாத உணவுகளுக்கான கண்காட்சி) ஆகும். இந்த ANUGA 2017-ல் இந்தியா இணை பங்குதாரராக ஆகவுள்ளது. இந்நிகழ்வில், 200-க்கும் மேற்பட்ட இந்திய உணவு நிறுவனங்கள் பங்கேற்குமெனஎதிர்பார்க்கப்படுகிறது. இதில் விரிவுரைகள், சிறப்பு கண்காட்சி மற்றும் கவர்ச்சிகரமான தொழிற்துறை நிகழ்வுகளை ANUGA வழங்கவுள்ளது.

**9. சமீபத்திய 2017 Child Rights and You (CRY)-ன் அறிக்கையின்படி, அதிக குழந்தைத்தொழிலாளர்களை கொண்டுள்ள இந்திய மாநிலம் எது?**

A. மேற்கு வங்கம்

B. உத்தரப்பிரதேசம்
C. மகாராஷ்டிரா
D. பீகார்

விடை : B. உத்தரப்பிரதேசம்

சமீபத்திய 2017 Child Rights and You (CRY)-ன் அறிக்கையின்படி, இந்தியாவில் 5-6 வயதுள்ள 8 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள், குழந்தைத்தொழிலாளர்களாக உள்ளனர். இதில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிக்குச்செல்வதில்லை. இந்தக்குழந்தைகளில் பெரும்பான்மையானவர்கள் தங்களின் குடும்பத்தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். உத்தரப்பிரதேசத்தில் 2,50,672 குழந்தைகளும், பீகாரில் 1,28,087 குழந்தைகளும், மகாராஷ்டிராவில் 82,847 குழந்தைகளும் குழந்தைத்தொழிலாளர்களாக உள்ளனர். ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத்திட்டம் (Integrated Child Development Scheme) பல வரம்புகளைக் கொண்டிருப்பதாகவும், குழந்தைத்தொழிலாளர்களில் 50 சதவிகிதத்தினரை மட்டுமே இது உள்ளடக்கியுள்ளதாகவும் இவ்வறிக்கை தெரிவிக்கிறது. இதனால் இவ்வயதுடைய குழந்தைகள், தங்களின் பெற்றோருடன் அவர்கள் வேலைசெய்யும் இடங்களில், பராமரிப்பில்லாத சூழலில் வளர்கிறார்கள்.

10. எந்த மாநிலத்தில் வான்மீகி தேசியப்பூங்கா அமைந்துள்ளது?



A. பீகார்
B. ஜார்கண்ட்
C. உத்தரப்பிரதேசம்
D. குஜராத்

விடை : A. பீகார்

வான்மீகி தேசியப்பூங்கா பீகாரிலுள்ள மேற்கு சாம்ப்ரான் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு புலி, காண்டாமிருகம், கருப்புக்கரடி, சிறுத்தைப்புலி, காட்டு நாய், காட்டெருமை, காட்டுப்பன்றி போன்ற விலங்குகளுள்ளன. தற்போது, 241 பறவையினங்கள் இவ்வனத்தில் உள்ளன. அதில் நேபாள

மயில், மூவிரல் காடை, பூச்சியுண்ணும் பறவை, வளைந்த அலகுடைய சாம்பல்நிற பறவை, பாடும்பறவை, நெட்டைக்காலி போன்ற பறவைகள் அடங்கும்.

---

2017 June 15

**1. வயிற்றுப்போக்குக்காரணமாக குழந்தை இறப்பை குறைக்க மத்திய அரசு IDCF திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் "IDCF" என்பது என்ன?**

**A. Intensified Diarrhea Control Fortnight**

**B. Intensive Diarrhea Control Fortnight**

**C. Intensify Diarrhea Control Fortnight**

**D. Intense Diarrhea Control Fortnight**

IDCF

INTENSIFIED DIARRHOEA CONTROL FORTNIGHT

விடை : **A. Intensified Diarrhea Control Fortnight**

வயிற்றுப்போக்குக்காரணமாக குழந்தை இறப்பை குறைக்க மத்திய சுகாதார அமைச்சகம், நாடு முழுவதும் Intensified Diarrhea Control Fortnight-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம், சுகாதாரப்பணியாளர்கள், மாநில அரசுகள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒன்றிணைத்து இந்நோயைக்கட்டுப்படுத்த மத்திய அமைச்சகம் முடிவுசெய்துள்ளது. இந்நோய் குழந்தைப்பருவத்தில் ஏற்படக்கூடிய ஒரு பொதுவான நோயாகும். இத்திட்டத்தின் போது, ORS மற்றும் துத்தநாக சிகிச்சையின் சுகாதாரம் மற்றும் ஊக்குவிப்புப்பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மாநில, மாவட்ட மற்றும் கிராமங்களில் நடத்தப்படும். இதில் 12 கோடிக்கும் அதிகமான 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் கலந்துகொள்வார்கள். மதிப்பீட்டின்படி, இந்தியாவில் ஒவ்வோராண்டும் 1.1 மில்லியன் குழந்தைகள் இறக்கிறார்கள், அதில் 1 இலட்சம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டு இறக்கின்றனர். இந்நோயை பாதுகாப்பான குடிநீர், சுகாதாரம் பேணுவது, தாய்ப்பால் கொடுப்பது மற்றும் சரியான ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்பதன் மூலம் தடுக்கலாம்.

**2. International Tribunal for the Law of the Sea (ITLOS)-ன் நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் இந்தியப்பெண் யார்?**

A. Nirmila Randhawat

B. Aniruddha Rajput

C. Neeru Chadha

D. Nidhi Bhandari



விடை : C. Neeru Chadha

2017-2026 வரையுள்ள 9 ஆண்டு காலத்திற்கு International Tribunal for the Law of the Sea-ன் நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் இந்தியப்பெண் Dr. Neeru Chadha ஆவார். ஆசிய பசிபிக்குழுவில், இவர் பெரும்பான்மையான வாக்குகளை பெற்றுள்ளார். இத்தேர்தலின் மூலம், ஐ.நா. பொதுச்சபையின் முன்னாள் தலைவரான விஜயலட்சுமி பண்டிட்டிற்குப்பிறகு, ஐ.நா.வில் ஓர் உயர் பதவியை வகிக்கும் முதல் இந்தியப்பெண் இவராவார். ஹம்பர்க்கைச் சேர்ந்த ITLOS என்பது, 1996-ல் உருவாக்கப்பட்ட ஒரு UN Convention on the Law of the Sea (UNCLOS)-ன் கீழ் இயங்கும் ஒரு சர்ச்சை தீர்வு அமைப்பாகும்.

**3. எந்த நகரத்தில், 16வது North East Region Commonwealth Parliamentary Association (NERCPA)-ன் மாநாடு தொடங்கப்பட்டுள்ளது?**

A. கவுகாத்தி

B. இம்பால்

C. அகர்தலா

D. சில்லாங்




விடை : B. இம்பால்

2017 ஜுன் 15 அன்று, மணிப்பூரிலுள்ள இம்பாலில், 16வது North East Region Commonwealth Parliamentary Association (NERCPA)-ன் மாநாட்டை மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் தொடங்கிவைத்தார். இம்மாநாட்டின் மையக்கருத்து "North East and Look East Policy" ஆகும். இது, வடகிழக்கு மாநிலங்களில் இருப்புப்பாதை, வான்வழிப்போக்குவரத்து, உள்நாட்டு நீர்வழித்தடங்கள், சாலைவசதிகள் போன்றவற்றை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புத்திட்டமாகும். இம்மாநாட்டில், மணிப்பூர்

ஆளுநர் Dr. Najma Heptulla, மேகலாயா மாநில சட்டசபையின் சபாநாயகரும், NERCPA-வின் தலைவருமான Abu Taher Mondal, மணிப்பூர் மாநில துணை முதல்வர் Yumnam Joykumar Singh, வடகிழக்கு மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

**4. ஐ. நா-வின் சமீபத்திய "One Family at a Time" அறிக்கையின்படி, எந்த நாடு 2016-க்கான உலகப்பணம் பெறும் பட்டியலில் முதலிடத்திலுள்ளது?**

A. சீனா

B. பிலிப்பைன்சு

C. மலேசியா

D. இந்தியா

One Family At A Time

விடை : இந்தியா

ஐ. நா-வின் சமீபத்திய "One Family at a Time" அறிக்கையின்படி, 2016-க்கான உலகப்பணம் பெறும் பட்டியலில் இந்தியா முதலிடத்திலுள்ளது. இவ்வறிக்கையின்படி, உலகெங்கும் பணிபுரியும் இந்தியர்கள் $62.7 பில்லியனும், அதைத்தொடர்ந்து சீனர்கள் $61 பில்லியனும், பிலிப்பைன்சு மக்கள் $30 பில்லியனும், பாகிஸ்தானிகள் $20 பில்லியனும் தங்களின் வீடுகளுக்கு அனுப்புகிறார்கள். ஐ. நா-வின் சர்வதேச விவசாய வளர்ச்சி நிதியத்தால் நடத்தப்பட்ட ஆய்வில், உலக நாடுகளில் குடியேறிய 200 மில்லியன் மக்கள், 2016-ல் மட்டும் $445 பில்லியன் டாலர்களை உலகளவில் அனுப்பியுள்ளனர். கடந்த 10 வருடங்களில் இதன் வளர்ச்சி 2007-ல் $296 பில்லியனாக இருந்து, 2017-ல் $445 பில்லியனாக உயர்ந்துள்ளது. இவ்வறிக்கை பொது கொள்கைகளை மேம்படுத்துவதற்கான பல பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

**5. எந்த மாநில அரசு, தரமான கல்விக்காக பிரிட்டிஷ் கவுன்சிலுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

A. சிக்கிம்

B. இமாச்சலப்பிரதேசம்

C. மணிப்பூர்



D. கேரளா

விடை : A. சிக்கிம்

சிக்கிம் மாநில அரசு, மாநிலத்தின் கல்வித்தரத்தை உயர்த்த பிரிட்டிஷ் கவுன்சிலுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. ஆசிரியர்கள் மற்றும் பிற நிபுணர்களின் திறனை வலுப்படுத்தி, ஆங்கிலம், கல்வி மற்றும் திறன் திட்டங்களின் மூலம் சிக்கிம் இளைஞர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக UK பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த பேராசிரியர்களைக்கொண்டு, சிக்கிமின் இளநிலை கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலுள்ள சமூக அறிவியல், பொறியியல், அறிவியல் துறை ஆசிரியர்களுக்கு சிறப்புப்பயிற்சிகள் வழங்கப்படும்.

**6. எந்த நகரில், 2017 G7 சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது?**

A. Bologna
B. பாரிசு
C. புது டெல்லி
D. நியூயார்க்




விடை : A. Bologna

2017 G7 சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் ஜுன் 11 மற்றும் 12 அன்று இத்தாலியின் Bolognaவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் US, UK, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கனடா மற்றும் ஜப்பானைச்சேர்ந்த சுற்றுச்சூழல் அமைச்சர்கள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையர்கள் கலந்துகொண்டனர். காலநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி மற்றும் கடற்குப்பை போன்ற பல்வேறு பிரச்சனைகள் இதில் கலந்துரையாடப்பட்டன. நாட்டு மக்களின் ஈடுபாடு, உணவுக்கழிவுகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் வளங்களை திறம்பட பயன்படுத்துவதற்கான பொருளாதார பகுப்பாய்வு போன்ற முக்கிய பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதற்காக, '5 year Bologna Roadmap' எனும்

திட்டப்பாதை உருவாக்கப்பட்டுள்ளது.

7. எந்த மாநிலத்தில், இந்தியாவின் முதல் கால்வாய் மேல் சூரிய ஒளி PV அமைப்பு அமைக்கப்படவுள்ளது?

A. தமிழ்நாடு
B. கேரளா
C. மகாராஷ்டிரா
D. உத்தரப்பிரதேசம்



விடை : C. மகாராஷ்டிரா

மகாராஷ்டிராவின் நாக்பூருக்கருகிலுள்ள 2320 MW Mouda அனல் மின் திட்டத்தில், இந்தியாவின் முதல் கால்வாய் மேல் 150KW திறன்கொண்ட சூரிய ஒளி PV அமைப்பை ஏற்படுத்த NTPC குழு முடிவுசெய்துள்ளது. Cooling Water (CW) அமைப்புகளின் இருபுறத்திலும் இதற்கான தகடுகள் பொருத்தப்படும். இதன் மூலம் நீர், நில பாதுகாப்பு, நீர் ஆவியாவது தடுக்கப்படுவது போன்ற தனித்தன்மையான நன்மைகளும் உண்டு. மேலும், நீர் மாசுபடுவது பெருமளவில் குறைக்கப்படும்.

8. "Yug Purush, Bharat Ratna, Atal Ji" நூலின் ஆசிரியர் யார்?

A. Ramesh Pokhriyal
B. Praveen Kumar Pandey
C. Ramesh Datt Dikisht
D. Nerraj Srivastava



விடை : A. Ramesh Pokhriyal

முன்னாள் இந்தியப்பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ள "Yug Purush, Bharat Ratna, Atal Ji" எனும் இந்த நூலை, உத்தரகாண்ட் மாநிலத்தின் முன்னாள் முதல்வரும் தற்போதைய BJP MP-யுமான Ramesh Pokhriyal எழுதியுள்ளார். 450 பக்கங்கள்கொண்ட இந்நூலின் முதல் பிரதியை,

அதிகாரப்பூர்வமாக இந்தியக்குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் ஒப்படைத்தார். விரைவில் இந்நூல் சந்தையில், அனைவரின் பயன்பாட்டுக்காக விற்பனைக்கு வரும்.

**9. எந்த மாநில அரசு, இணைய வழி கால்நடை விற்பனைக்காக "Pashu Bazar" எனும் இணையதள சேவையினை தொடங்கியுள்ளது?**

A. ஆந்திரப்பிரதேசம்
B. கோவா
C. மிசோரம்
D. தெலுங்கானா



விடை : D. தெலுங்கானா

தெலுங்கானா மாநில அரசு, இணைய வழி கால்நடை விற்பனைக்காக "Pashu Bazar" எனும் இணையதள சேவையினை தொடங்கியுள்ளது. pashubazar.telangana.gov.in என்ற இணையதளத்தை பயன்படுத்துவதன் மூலம், விவாசாயிகள் தங்களின் கால்நடைகளை சந்தைக்கு கொண்டுவராமலேயே விற்கமுடியும். இதனால் அவர்களின் போக்குவரத்து செலவு மிச்சமாகும். அதிகபட்சமாக ஒரு விவாசாயியால் 5 பதிவுகளை செய்யமுடியும்.

**10. எந்த மாநிலத்தில், உலகின் மிகப்பெரிய சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் வளாகம் நிறுவப்படவுள்ளது?**

A. உத்தரப்பிரதேசம்
B. மகாராஷ்டிரா
C. பீகார்
D. ஜார்கண்ட்



விடை : B. மகாராஷ்டிரா

மகாராஷ்டிராவின் ரத்னகிரியில் $40 பில்லியன் டாலர்கள் செலவில் உலகின் மிகப்பெரிய சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோகெமிக்கல் வளாகத்தை கூட்டாக அமைக்கும் ஒப்பந்தத்தில் Indian Oil Corporation (IOC), Hindustan

Petroleum Corp Ltd (HPCL) மற்றும் Bharat Petroleum Corp Ltd (BPCL) ஆகியவை கையெழுத்திட்டுள்ளன. இதில் IOC-ன் பங்கு 50%-மும் HPCL மற்றும் BPCL தலா 25% பங்கினையும் கொண்டுள்ளன. இந்த நிலையத்தில் பெட்ரோல், டீசல், LPG மற்றும் பெட்ரோகெமிக்கலின் மூலப்பொருள்கள் உற்பத்தி செய்யப்படும். இது 2022-ம் ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

2017 June 16

1. எந்த நகரம், 2017-ம் ஆண்டுக்கான தகவல் சமூக மன்றத்தின் உலக மாநாட்டை நடத்தவுள்ளது?




A. பாரிசு
B. நியூயார்க்
C. ஜெனிவா
D. பெர்லின்

விடை : C. ஜெனிவா

தகவல் தொழில்நுட்பத்துறையைச்சேர்ந்தவர்கள் ஒன்றிணையும் மாபெரும் ஆண்டுக்கூட்டமான தகவல் சமூக மன்றத்தின் உலக உச்சி மாநாடு (World Summit on Information Society (WSIS) Forum-2017), ஜூன் 12-16 வரை சுவிச்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. WSIS 2017-ன் மையக்கருத்து "Information and Knowledge Societies for SDGs" ஆகும். இது தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின் விவாதங்களுக்கான ஒரு தளமாக உள்ளது. இது நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்த உதவுகிறது. இம்மாநாட்டில் இந்தியாவின் சார்பாக, தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோஜ் சின்கா, இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைபற்றி விவாதிப்பார்.

2. United Nations Economic and Social Council (ECOSOC)-ன் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?


A. பாரிசு
B. ஜெனிவா

C. பெர்லின்
D. நியூயார்க்

விடை : D. நியூயார்க்

United Nations Economic and Social Council (ECOSOC) என்பது பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை ஒன்றிணைப்பதற்கான ஐக்கிய நாடுகளின் 6 முக்கிய உறுப்புகளில் ஒன்றாகும். இந்தியா மற்றுமொரு 3 ஆண்டு காலத்திற்கு ECOSOC-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வெற்றிபெற்ற 18 நாடுகளில் இந்தியாவும் ஒரு நாடாகும். ஆசிய பசிபிக் பிரிவில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. பெலாரஸ், ஈக்வடார், எல் சால்வடேர், பிரான்ஸ், ஜெர்மனி, கானா, இந்தியா, அயர்லாந்து, ஜப்பான், மாலவி, மெக்சிகோ, மொராக்கோ, பிலிப்பைன்ஸ், ஸ்பெயின், சூடான், டோகோ, துருக்கி மற்றும் உருகுவே ஆகிய நாடுகள் அடுத்த 3 ஆண்டு காலத்திற்கு ECOSOC-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ECOSOC-ன் தலைமையகம் US-ன் நியூயார்க்கில் அமைந்துள்ளது.

3. அண்மையில் காலமான PN. பகவதி, எந்த துறையைச்சேர்ந்தவராவார்?
A. சட்டத்துறை
B. அரசியல்
C. பத்திரிகைத்துறை
D. திரைத்துறை



விடை : A. சட்டத்துறை

முன்னாள் தலைமை நீதிபதியான Prafullachandra Natwarlal பகவதி (95), 2017 ஜூன் 15 அன்று புது டெல்லியில் காலமானார். இந்தியாவின் சட்டப்பூர்வ நிலப்பரப்பை மாற்றியமைக்கும் பொது நலன் வழக்கை நடத்தியதன் மூலம் இவர் பிரபலமாக அறியப்படுகிறார்.

4. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தூதர்

யார்?

A. Reenat Sandhu

B. Gaitri Issar Kumar

C. Ajit Vinayak Gupte

D. Rajeev Shahare



விடை : B. Gaitri Issar Kumar

ஜனாதிபதி செயலகத்தின் இணைச்செயலரும், 1986-ம் ஆண்டின் IFS அலுவலருமான Gaitri Issar Kumar, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பெல்ஜியத்திற்கு புதிய இந்திய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்சில் அமைந்துள்ளது. இது தவிர, இத்தாலி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான இந்தியாவின் புதிய தூதராக முறையே Reenat Sandhu மற்றும் Ajit Vinayak Gupte ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. 2017 ASEAN டெங்கு தினத்தின் மையக்கருத்து என்ன?

A. One vision for dengue-free society

B. ASEAN unity for a dengue-free community

C. Dengue: Fight is necessary

D. United fight against dengue




விடை : D. United fight against dengue

டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தனியார், பொதுத்துறை பங்குதாரர்களின் நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான வளங்களை ஒருங்கிணைப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 15 அன்று ASEAN டெங்கு தினம் அனுசரிக்கப்படுகிறது. சமூகத்திலுள்ள அனைத்து துறைகளும் டெங்குவுக்கு எதிராக ஒன்றிணைவதற்கும், டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள புதுமையான மற்றும் பயனுள்ள உத்திகளை அடிக்கோடிட்டு காட்டுவதற்குமான ஒரு கூட்டு வாதிடும் நிகழ்வாக இந்நாள் காணப்படுகிறது. 2017-ம் ஆண்டுக்கான மையக்கருத்து “United fight

against dengue" ஆகும்.

**6. 2017 Bhupen Hazarika தேசிய விருது யாருக்கு வழங்கப்படவுள்ளது?**

A. Samudra Gupta Kashyap

B. Lou Majaw

C. Yeshe Dorjee Thongchi

D. Jahnu Barua



விடை : C. Yeshe Dorjee Thongchi

2017 செப்டம்பரில் ஜம்மு மற்றும் காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகரில் நடைபெறவுள்ள விருதுகள் வழங்கும் விழாவில், அருணாச்சலப்பிரதேசத்தின் புகழ்பெற்ற இலக்கியவாதியான Yeshe Dorjee Thongchi-க்கு 2017-ம் ஆண்டுக்கான Bhupen Hazarika தேசிய விருது வழங்கப்படவுள்ளது. இவ்விருது புனேவிலுள்ள சமூக அமைப்பான Sarhad-ஆல் 2012-ல் நிறுவப்பட்டது. தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறப்பான சேவைகளை செய்வோருக்கு, ஒவ்வோர் ஆண்டும் இவ்விருது வழங்கப்படுகிறது. இது ரூ. 51000 பணப்பரிசு, ஒரு நினைவுச்சின்னம் மற்றும் ஒரு சான்றிதழை உள்ளடக்கியது.


**7. 2017 Man Booker சர்வதேசப்பரிசினை வென்றவர் யார்?**

A. Ian Samsom

B. David Grossman

C. Roy Jacobsen

D. Amos Oz



விடை : B. David Grossman

"A Horse Walks Into a Bar" என்ற தனது நாவலுக்காக, 2017 Man Booker சர்வதேசப்பரிசினை வென்ற முதல் இசுரேலிய எழுத்தாளர் David Grossman ஆவார். இந்நாவலானது Jessica Cohen என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் Jonathan Cape என்பவரால் பிரிட்டனில்

வெளியிடப்பட்டுள்ளது. எந்தவொரு உணர்ச்சிக்குறியீடுகளும் இல்லாமல், துயரத்தின் தாக்கத்தை வெளிச்சம் போட்டு காட்டியிருப்பதே இந்நாவலின் சிறப்பம்சமாகும். 2016லிருந்து, Man Booker சர்வதேசப்பரிசானது நூலாசிரியருக்கும், மொழிபெயர்ப்பாளர் இருவருக்கும் தலா £25,000 பவுண்டுகள் என அளிக்கப்பட்டு வருகிறது. இப்பரிசுக்கு தகுதிபெற, நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, 2016 மே 1 - 2017 ஏப்ரல் 30-க்குள் பிரிட்டனில் பிரசுரிக்கப்பட்டிருக்கப்படவேண்டும்.

**8. எந்த IIT நிறுவனம், PT உசாவிற்கு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கவுள்ளது?**



A. IIT சென்னை

B. IIT கான்பூர்

C. IIT இண்டூர்

D. IIT பாம்பே

விடை : **B. IIT கான்பூர்**

இந்திய விளையாட்டுக்காக PT உசாவின் பங்களிப்பை போற்றும் விதமாக, 2017 ஜுன் 16 அன்று நடைபெறும், IIT கான்பூரின் 50வது பட்டமளிப்பு விழாவில் "Doctor of Science (D.Sc)" பட்டத்திற்கான கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கவுள்ளனர். இந்த D.Sc பட்டமென்பது IIT கான்பூரின் மிகவுயரிய கல்விக்கான பட்டமாகும். 2000-ம் ஆண்டில் கண்ணூர் பல்கலைக்கழகம் இவருக்கு Doctor of Letters (D. Litt) பட்டத்தை வழங்கி சிறப்பித்துள்ளது.


**9. எந்த நாளில், 2017 உலக மூத்தோர் அவமதிப்பு விழிப்புணர்வு நாள் (World Elder Abuse Awareness Day) அனுசரிக்கப்படுகிறது?**

A. ஜுன் 14

B. ஜுன் 15

C. ஜுன் 16

D. ஜுன் 17



விடை : B. ஜுன் 15

மூத்த தலைமுறையின் மௌனமான துன்பங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 15 அன்று உலக மூத்தோர் அவமதிப்பு விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிறது. இது பாதுகாப்பற்ற மற்றும் வயதான மக்களுக்கு கொடுக்கப்பட்ட அவமதிப்பு மற்றும் துன்பங்களுக்கு எதிரான எதிர்ப்பை உலகம் முழுதும் வெளிப்படுத்தும் ஒரு நாளாகும். 2017-க்கான மையக்கருத்து "Understand and End Financial Abuse of Older People: A Human Rights Issue" ஆகும். இது முதியோர்களுக்கான மனித உரிமைகளில் நடைபெறும் நிதிச்சுரண்டல் முறைகேடுகளை எடுத்துக்காட்டுகிறது.

**10. 2017 உலகளாவிய கண்டுபிடிப்பு அட்டவணையில் (Global Innovation Index) இந்தியாவின் தரநிலை என்ன?**

A. 36வது
B. 54வது
C. 60வது
D. 75வது




விடை : C. 60வது

2017 உலகளாவிய கண்டுபிடிப்பு அட்டவணையில் 130 நாடுகளில் இந்தியா 60வது இடத்திலுள்ளது. இந்த 2017 அட்டவணையானது இந்தியாவின் முதலீடு, கல்வி, வெளியீடுகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் தரம், தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் கண்டுபிடிப்புகளில் இந்தியாவின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடிக்கோடிட்டு காட்டியுள்ளது. இந்தியாவின் அண்டை நாடுகளில் இலங்கை 90வது இடத்தையும், நேபாளம் 109வது இடத்தையும், பாகிஸ்தான் 113வது இடத்தையும் மற்றும் வங்கதேசம் 114வது இடத்தையும் பெற்றுள்ளது. இந்தப்பட்டியலில் சுவிச்சர்லாந்து முதலிடத்திலும், அதைத்தொடர்ந்து சுவீடன் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலுமுள்ளன. 2017-க்கான மையக்கருத்து "Innovation Feeding the World" ஆகும். இது விவசாயம் மற்றும்

உணவு முறைகளில் புதுமையான முறைகளை மையமாகக் கொண்டுள்ளது. இந்த அட்டவணை, **Cornell** பல்கலைக்கழகம், **INSEAD மற்றும் World Intellectual Property Organization (WIPO)** ஆகியவையால் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

---

2017 June 17

**1. இங்கிலாந்திலுள்ள பணச்சந்தையின் சமீபத்திய ஆய்வின்படி, சுற்றுச்சூழல் பாதிப்புக்கான கணக்கெடுப்பில் இந்தியாவின் தரநிலை என்ன?**

**A. 36வது**

**B. 54வது**

**C. 60வது**

**D. 75வது**

விடை : **D. 75வது**

இங்கிலாந்திலுள்ள நிதி சேவைகள் வழங்கும் வலைத்தளமான **“Money Super Market”-ன்** சமீபத்திய ஆய்வில், சுற்றுச்சூழலுக்கெதிரான தனிமனித தாக்குதலின் அடிப்படையில் **102** நாடுகளில் இந்தியா **75வது** இடத்திலுள்ளது. இந்தப்பட்டியலில், **100%** இயற்கை ஆற்றலை பயன்படுத்தி, மொசாம்பிக் முதலிடம் வகிக்கிறது. இதைத்தொடர்ந்து எதியோப்பியா, சாம்பியா, லத்வியா மற்றும் கென்யா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலுள்ளன. கரியமிலவாயு உமிழ்வு, நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் எரிசக்தி நுகர்வு போன்றவைகள் இவ்வாய்வில் முக்கிய காரணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. **Trinidad** மற்றும் **Tobago** ஆகிய நாடுகள் எந்தவொரு இயற்கை ஆற்றலையும் பயன்படுத்தாமல் கடைசி இடத்தைப்பிடித்துள்ளன. மேலும், இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும் **37.1** டன் அளவுள்ள கரியமிலவாயு உமிழ்வை மேற்கொள்கின்றனர்.

**2. ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank), இந்திய உள்கட்டமைப்பு நிதியத்திற்கு (India Infrastructure Fund) எவ்வளவு பங்கு முதலீட்டுக்கடனை வழங்கியுள்ளது?**

A. $250 மில்லியன் டாலர்கள்
B. $150 மில்லியன் டாலர்கள்
C. $350 மில்லியன் டாலர்கள்
D. $501 மில்லியன் டாலர்கள்



விடை : B. $150 மில்லியன் டாலர்கள்

ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, இந்தியாவின் உள்கட்டமைப்பு நிதியத்திற்கு $150 மில்லியன் டாலர்கள் பங்கு முதலீட்டுக்கடனை வழங்க அங்கீகரித்துள்ளது. இது தனியார் திட்டங்களுக்காக AIIB வழங்கும் முதல் கடனாகும். இந்நிதியின் நோக்கம் இந்தியாவிலுள்ள உள்கட்டுமான நிறுவனங்களில் முதலீடு செய்வது மற்றும் தனியார் துறை வங்கியின் பங்கு மற்றும் கடன் பரிவர்த்தனை ஆகியவைகளை இந்த நிதியின் பங்கு மூலம் விரிவுபடுத்துவதாகும். உலக முதலீட்டாளர்கள், பொது ஓய்வூதிய நிதிகள், ஆதாயங்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் போன்ற தனியார் மூலதன ஊக்குவிப்பை அதிகரிப்பதன் மூலம் உள்ளூர் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு இது உதவும்.

3. 2017 உலக பாலைவனமயமாக்கல் மற்றும் வறட்சி எதிர்ப்பு நாளுக்கான மையக்கருத்து என்ன?

A. Women and Desertification
B. Beauty of Deserts - The Challenge of Desertification
C. Link between land degradation and migration
D. Protect Earth. Restore Land




விடை : C. Link between land degradation and migration

பாலைவனமயமாக்கலுக்கு எதிரான விழிப்புணர்வாக, ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 17 அன்று உலக பாலைவனமயமாக்கல் மற்றும் வறட்சி எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது. 2017 உலக பாலைவனமயமாக்கல் மற்றும் வறட்சி எதிர்ப்பு நாளுக்கான மையக்கருத்து “Link between land degradation and migration” ஆகும். வலுவான சமுதாய ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பு மூலம் நிலச்

சீரழிவை தடுக்கமுடியும் என்பதை அனைவருக்கும் நினைவூட்டுவதற்கான ஒரு தனிப்பட்ட தருணமாக இந்நாள் உள்ளது.

**4. அண்மையில் காலமான Helmut Kohl, எந்த நாட்டின் முன்னாள் தலைவர் ஆவார்?**



A. பிரான்ஸ்

B. இத்தாலி

C. இரஷ்யா

D. ஜெர்மனி

விடை : D. ஜெர்மனி

ஜெர்மனியின் முன்னாள் அதிபரான Helmut Kohl (87), 2017 ஜுன் 16 அன்று ஜெர்மனியிலுள்ள Oggersheim நகரில் காலமானார். இவர் மத்திய வலதுசாரி கிறித்துவ சனநாயகவாதத்தை தலைமை தாங்கி வழிநடத்திய ஜெர்மன் அதிபராவார். 16 ஆண்டுகளாக ஜெர்மனியின் அதிபராக இருந்த இவர், நாட்டை மீண்டும் இணைத்ததற்காகவும், ஐரோப்பிய ஒருங்கிணைப்புக்கான தனது அரசியல் மற்றும் பொருளாதார பங்களிப்பிற்காகவும் நினைவுகூறப்படுகிறார். பெர்லின் சுவர் வீழ்ச்சிக்குப் பின்னர், கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனியை ஒன்றிணைத்ததிலும் இவரின் பிரெஞ்சு நண்பரான ஜனாதிபதி Francois Mitterrand-டுடன் இணைந்து யூரோவை அறிமுகப்படுத்தியதிலும் இவரின் பங்கு போற்றத்தக்கதாகும்.

**5. எந்த நாடு, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் 2018-ம் ஆண்டுக்கான ஆண்டுச்சந்திப்பை நடத்தவுள்ளது?**




A. இந்தியா

B. சீனா

C. தென்கொரியா

D. ஜப்பான்

விடை : A. இந்தியா

AIIB ஆளுநர்களின் மூன்றாவது ஆண்டுச்சந்திப்புக்கூட்டம் ஜுன் 2018-ல் மும்பையில் நடைபெறவுள்ளது. இந்தியா, AIIB-ன் 2வது மிகப்பெரிய பங்குதாரராகும். AIIB என்பது ஒரு புதிய பன்முக அபிவிருத்தி வங்கியாகும், இது ஆசிய நாடுகளில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்கிறது. இதன் தலைமையகம் பீஜிங்கில் அமைந்துள்ளது. இதன் நோக்கம் ஆசியாவின் பொருளாதாரம் மற்றும் சமூகத்தை உயர்தரமான, நிதி ரீதியான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் மேம்படுத்துவதாகும். 2017-ல் கொரிய குடியரசிலுள்ள Jejuவில் ஆளுநர் குழுவின் 2வது ஆண்டுக்கூட்டம் நடைபெற்றது.

6. 2017-ம் ஆண்டுக்கான குசுமகாராஜா ராஷ்ட்ரிய புரஸ்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?



A. Mrunal Bhradwaj

B. H S Shivaprakash

C. Jaydeo Dole

D. Menka Dhumale

விடை : B. H S Shivaprakash

புகழ்பெற்ற கன்னட கவிஞரும் நாடக ஆசிரியருமான H S Shivaprakash, சமூக மற்றும் கல்வித்துறையில் அவரது சிறந்த பங்களிப்பிற்காக, 2017-ம் ஆண்டுக்கான குசுமகாராஜா ராஷ்ட்ரிய புரஸ்கர் விருது வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது நாசிக்கை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் யஷ்வந்த் ராவ் சாவன் மகாராஷ்டிரா திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் தலைவரான Kusumagaraja Adhyasan-னால் நிறுவப்பட்டது. இவ்விருது ரூ. 1 இலட்சம் பணப்பரிசு, நினைவுச்சின்னம் மற்றும் ஒரு சான்றிதழை உள்ளடக்கியது. இதுதவிர YCMOU-ன் 2016 Baburao Bagul கதாசிரியர் விருது Menka Dhumale-க்கு, அவரின் "Korda Paus" நூலுக்காக வழங்கப்பட்டது.

7. கேரளாவின் முதல் திருநங்கைகளுக்கான அழகிப்போட்டியில் வென்றவர்

யார்?

A. Jaz D'souza
B. Syama Sanju
C. Harini Chandana
D. Remya Nambeeshan



விடை : B. Syama Sanju

கேரளாவின் நெடும்பஞ்சேரியிலுள்ள சியாம் மாநாட்டு மையத்தில் நடத்தப்பட்ட **"Queen of Dhwayah-2017"** எனும் கேரளாவின் முதல் திருநங்கைகளுக்கான அழகிப்போட்டியில் **Syama Sanju** வெற்றிபெற்றார். **Jaz D'souza** 2வது இடத்தையும், **Harini Chandana** 3வது இடத்தையும் பெற்றனர். சமூகத்தில் 3-ம் பாலினத்தவர் மீதான கவன ஈர்ப்புக்காக **Dhwayah** கலை மற்றும் கலாச்சார அமைப்பு, இந்நிகழ்வை நடத்தியுள்ளது.

8. செர்பியாவின் முதல் பெண் பிரதமர் யார்?

A. Marija Vucic
B. Aagdalena Dacic
C. Ana Brnabic
D. Aleks Brnabic



விடை : C. Ana Brnabic

இங்கிலாந்தில் ஹல் **(Hull)** பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் செர்பிய நாட்டின் முதல் பெண் மற்றும் முதல் ஓரினச்சேர்க்கை சமூகத்தைச்சேர்ந்த பிரதமராவார். நாட்டின் ஜனாதிபதியான **Aleksandar Vucic**-ன் பரிந்துரையின் பேரில் இவர் பிரதமராக பதவியேற்றுள்ளார். **Ana Brnabic**-க்கு முன் இப்பதவியில் **Ivica Dacic** பிரதமராக இருந்தார். செர்பியாவின் பிரதமராக இவரின் பங்கு அரசை வழிநடத்துவதும் மற்றும் அமைச்சர்கள் பட்டியலை தேசிய சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பதுமாகும். பிரதமரின் இராஜினாமா, அரசைக்கவிழ்க்கும்.

9. அண்மையில் காலமான புகழ்பெற்ற நாடக ஆசிரியர் அஜ்மீர் சிங் ஆலுக், எந்த மாநிலத்தை சேர்ந்தவராவார்?

A. அசாம்

B. உத்தரப்பிரதேசம்

C. அரியானா

D. பஞ்சாப்



விடை : D. பஞ்சாப்

புகழ்பெற்ற பஞ்சாபி நாடக ஆசிரியர் மற்றும் சாகித்ய அகாடமி விருதாளரான **Ajmer Singh Aulakh (75)**, பஞ்சாபின் மன்சாவில் காலமானார். முதலாளித்துவத்தின் அழுத்தத்தின் கீழிருந்த பஞ்சாபின் கிராமப்புற வாழ்க்கையை குறிப்பாக மால்வா பகுதியின் உண்மைத்தன்மையை இவர் சித்தரித்துக்காட்டினார். இவரது நாடகங்கள் சமுதாயத்தை பிளவுபடுத்தும் சமூக நோய்களான ஆணவக்கொலை, குடும்ப வன்முறை, பெண்ணடிமைத்தனம், போர்க்கொடுமை ஆகியவற்றிற்கு எதிராக குரலெழுப்பின.

10. எந்த நகரம், வெளிநாடு வாழ் இந்திய இளைஞர்களுக்கான, **Know India Programme (KIP)**-ஐ நடத்தவுள்ளது?

A. போபால்

B. புது டெல்லி

C. கான்பூர்

D. ஜெய்ப்பூர்




விடை : B. புது டெல்லி

**2017** ஜூன் **17** அன்று புது டெல்லியில், வெளிநாடு வாழ் இந்திய இளைஞர்களுக்கான, **Know India Programme (KIP)**-ஐ மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தொடங்கிவைப்பார். கல்வி, பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளில் இந்தியாவின் பன்முக முன்னேற்றத்தை தெரிவிப்பதே இதன் நோக்கமாகும். இது இந்தியாவிலிருந்து

புலம்பெயர்ந்தோருக்காக 3 வாரம் நடைபெறும் நிகழ்வாகும். இது மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் தங்களது கருத்துக்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளவும், சமகால இந்தியாவுடனான நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ளவும் ஒரு தனித்துவமான மன்றமாக விளங்குகிறது.

---

## 2017 June 18 & 19

**1. பிரிட்டிஷ் பேரரசின் உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A. அன்னாபெல் மேத்தா
B. சச்சின் டெண்டுல்கர்
C. முகேசு அம்பானி
D. நிதீசு குமார்



விடை : **A. அன்னாபெல் மேத்தா (Annabel Mehta)**

அரசு சாரா அமைப்பான "Apnalaya" மற்றும் மும்பையில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட சமூக மக்களுக்காற்றிய 40 ஆண்டுகள் சேவையை அங்கீகரித்து, சச்சின் டெண்டுல்கரின் மாமியாரும் மற்றும் சமூக ஆர்வலருமான அன்னாபெல் மேத்தாவுக்கு பிரிட்டிஷ் பேரரசின் உறுப்பினர் (Member of the Order of the British Empire) தகுதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதியில், இலண்டனிலுள்ள பக்கிங்காம் அரண்மனையில் வைத்து இவருக்கு இவ்விருது வழங்கப்படும். சிறந்த சமூக சேவையாற்றுவோரை கௌரவிக்கும் விதமாக, 1917-ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் இவ்விருது உருவாக்கப்பட்டது.

**2. அண்மையில் காலமான புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான John Avildsen, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?**

A. UK
B. US
C. ஜெர்மனி
D. பிரான்ஸ்



விடை : **B. US**

**Rocky** திரைப்படத்திற்காக ஆஸ்கர் விருது வென்றவரும் **The Karate Kid** திரைப்படத்தின் இயக்குநருமான **John Avildsen (81),** அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் காலமானார். இவர் இயக்கிய மற்ற படங்கள் **Joe, Save the Tiger, Fore Play, The Formula, Neighbors, For Keeps, Lean on Me, The Power of One** முதலியவையாகும்.

**3. 2017** ஆண்கள் ஒற்றையர் இந்தோனேசிய ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிட்டன் போட்டியில் வென்றவர் யார்?

**A. Parupalli Kashyap**

**B. Prannoy Kumar**

**C. Kidambi Srikanth**

**D. Chetan Anand**




விடை : **C. Kidambi Srikanth**

ஜகர்தாவில் நடைபெற்ற **2017-ம்** ஆண்டுக்கான ஆண்கள் ஒற்றையர் இந்தோனேசிய ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிட்டன் இறுதிப்போட்டியில், ஜப்பானின் **Kazumasa Sakai-வை 21-11, 21-19** என்ற கணக்கில் தோற்கடித்து இப்போட்டியை வென்ற முதல் இந்தியர் என்கிற பெருமையை **Kidambi Srikanth** பெற்றுள்ளார். இவ்வெற்றியின் மூலம், **2014** சீன ஓபன் மற்றும் **2015** இந்திய ஓபன் போட்டிகளின் வெற்றிக்குப்பிறகு ஸ்ரீகாந்த் தனது மூன்றாவது சூப்பர் சீரிஸ் பட்டத்தை வென்றுள்ளார்.

**4.** எந்த இந்திய நிறுவனம், அடல் ஓய்வூதிய திட்டத்துக்காக **"APY@eNPS"** எனும் டிஜிட்டல் சேர்க்கைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது?

**A. RBI**

**B. NPCI**

**C. IRDA**

**D. PFRDA**

PENSION FUND REGULATORY AND DEVELOPMENT AUTHORITY

விடை : **D. PFRDA**

ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (**Pension Fund Regulatory & Development Authority**) அடல் ஓய்வூதிய திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக டிஜிட்டல் சேர்க்கை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. **APY** என்பது அரசாங்கத்தின் உயர்தரமான சமூகப் பாதுகாப்புத்திட்டமாகும். இது இந்தியாவிலுள்ள **18-40** வயதிற்குட்பட்ட ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். இத்திட்டம் சேர்க்கைப்பதிவிலுள்ள அனைவருக்கும் ஒரு குறைந்தபட்ச உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்குகிறது. தற்போது, இந்தத்திட்டத்தில் **54** இலட்சம் சந்தாதாரர்கள் உள்ளனர். இதன் இலாப சதவிகிதம் **13.91%** ஆகவுள்ளது.

**5.** எந்தத்தேதியில் சர்வதேச பாலியல் வன்கொடுமை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது?

**A.** ஜூன் **18**

**B.** ஜூன் **19**

**C.** ஜூன் **20**

**D.** ஜூன் **21**




விடை : **B. ஜூன் 19**

பாலியல் வன்கொடுமையை ஒழிப்பதற்காக தங்கள் இன்னுயிரை ஈந்தவர்களை நினைவுகூரவும், பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர்தப்பியவர்களை கௌரவிப்பதற்காகவும், பாலியல் வன்கொடுமைக்கெதிரான விழிப்புணர்வை அதிகரிக்கவும், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் **19** அன்று, சர்வதேச பாலியல் வன்கொடுமை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. **2017**-ம் ஆண்டுக்கான மையக்கருத்து **"Preventing Sexual Violence Crimes through Justice and Deterrence"** ஆகும்.

**6.** எந்த பொதுத்துறை வங்கி, பால் பண்ணை விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக திருமலா பால் உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்துள்ளது?

A. விஜயா வங்கி
B. SBI
C. பஞ்சாப் தேசிய வங்கி
D. தேனா வங்கி

விடை : B. SBI

SBI வங்கி, பால் பண்ணை விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக திருமலா பால் உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்துள்ளது. இத்திட்டத்தின் படி, கொட்டகை அமைக்க, பால் மாடுகள் வாங்க, பால் கறவை இயந்திரங்கள் வாங்க, வைக்கோல் வெட்டும் இயந்திரம் ஆகியவை வாங்க SBI கடன் வழங்கும். இதுதவிர பால் பண்ணைகளில் தானியங்கி பால் சேகரிப்பு முறையை அமைத்தல், போக்குவரத்து வாகனங்கள் வாங்குதல் மற்றும் குளிர்விக்கும் அறை அமைத்தல் போன்ற நவீன வசதிகள் செய்யவும் கடன் வழங்கப்படும். தென்னிந்தியத்தைச்சேர்ந்த திருமலா பால் உற்பத்தி நிறுவனத்தை, 2014-ல் பிரான்சின் Groupe Lactalis வாங்கியது.

7. அண்மையில் எந்தெந்த நாடுகளை, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) அதன் உறுப்பினர்களாக அங்கீகரித்துள்ளது?
A. தைவான், உக்ரைன் மற்றும் டோங்கா
B. உக்ரைன், அர்ஜெண்டினா மற்றும் ஜப்பான்
C. ஜப்பான், கொலம்பியா மற்றும் அமெரிக்கா
D. அர்ஜென்டினா, மடகாஸ்கர் மற்றும் டோங்கா

விடை : D. அர்ஜென்டினா, மடகாஸ்கர் மற்றும் டோங்கா

2017 ஜுன் 16 அன்று தென்கொரியாவிலுள்ள ஜெஜூவில் நடைபெற்ற ஆளுநர் குழுவின் 2வது ஆண்டுக்கூட்டத்தில், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB), அர்ஜென்டினா, மடகாஸ்கர் மற்றும் டோங்கா ஆகிய நாடுகளை அதன் உறுப்பினர்களாக அங்கீகரித்துள்ளது. தேவையான உள்நாட்டு செயல்முறைகளை பூர்த்தி செய்து, மூலதனத்தின் முதலாவது தவணையை வங்கியில் வைப்பதன் மூலம், இந்நாடுகள்

அதிகாரப்பூர்வமாக AIIB-ல் இணையும்.

**8. “Sahapedia” எந்த ஐ. நா அமைப்புடன் இணைந்து, இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை ஊக்குவிப்பதற்கான கூட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?**

A. WIPO

B. UNODC

C. UNESCO

D. IFAD

விடை : **C. UNESCO**

இந்தியக்கலைகளின் மரபுவழி இணையதளமான “Sahapedia”, UNESCO-வுடன் இணைந்து, இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை ஊக்குவிப்பதற்கான கூட்டுத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியம் பற்றி இளைஞர்கள் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும். இத்திட்டத்தில் முனைவர்கள், முதுகலை பட்டதாரிகள், இளநிலை பட்டதாரிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். Sahapedia Project Fellowship (SPF) **மற்றும்** Sahapedia Research Fellowship (SRF) என இருவகைப்பட்ட ஆராய்ச்சி உறுப்பினர்கள் இத்திட்டத்தில் பங்குபெறுவார்கள்.

**9. எந்த நாட்டில் Jigme Dorji தேசியப்பூங்கா அமைந்துள்ளது?**

A. இந்தியா

B. பூடான்

C. நேபாளம்

D. மியன்மார்



விடை : **B. பூடான்**

இது பூடானின் 2வது மிகப்பெரிய தேசியப்பூங்காவாகும். இது பனிச்சிறுத்தை, மேகச்சிறுத்தை, வங்கப்புலி, இமாலய நீல செம்மறியாடு

உட்பட 37 வகையான அழிவின் விளிம்பிலிருக்கும் உயிரினங்களுக்கு வாழ்விடமாக விளங்குகிறது. இங்கு இந்திய சிறுத்தை, குரைக்கும் மான், சாம்பார் மான் மற்றும் 300 வகையான பறவையினங்கள் உள்ளன. பூடானிலேயே இப்பூங்காவில் மட்டுந்தான், பூடானின் தேசிய விலங்கான Takin, தேசியப்பூவான நீல பாப்பி (Blue Poppy), தேசிய மரமான சிப்ரஸ், தேசியப்பறவையான Raven ஆகியவை ஒருங்கே அமைந்துள்ளது.


**10. 2017-க்கான Orwell பரிசு யாருக்கு வழங்கப்படவுள்ளது?**

A. Arkady Ostrovsky

B. J D Taylor

C. Fintan O'Toole

D. John Bew




விடை : D. John Bew

NHS-ன் நிறுவனரான Clement Attlee-யைப்பற்றிய சுயசரிதையான "Citizen Clem"-ஐ எழுதியதற்காக, 2017-க்கான Orwell பரிசு John Bew-வுக்கு வழங்கப்படவுள்ளது. £3,000 பவுண்ட் மதிப்புமிக்க இப்பரிசு, ஒவ்வோர் ஆண்டும், சிறந்த அரசியல் எழுத்தாளர்களுக்காக இலண்டனின் Orwell நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இது பிரிட்டனின் மிகுந்த மதிப்புமிக்க அரசியல் எழுத்துக்கான பரிசாகும்.

## 2017 June 20

**1. எந்த நாட்டில் முதல் BRICS விளையாட்டு தொடங்கியுள்ளது?**

A. தென்னாப்பிரிக்கா

B. இரஷ்யா

C. சீனா

D. பிரேசில்




விடை : C. சீனா

2017 ஜூன் 17 அன்று சீனாவின் Guangzhou Baiyun சர்வதேச மாநாட்டு

மையத்தில் முதன்முதலாக BRICS விளையாட்டு தொடங்கப்பட்டுள்ளது. பிரேசில், சீனா, இந்தியா, இரஷ்யா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் கூடைப்பந்து, பெண்கள் கைப்பந்து **மற்றும்** Wushu ஆகிய விளையாட்டுக்களைச்சேர்ந்த 300 விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் இடம்பெற்றுள்ளனர். அண்மையில் நடைபெற்ற முதல் BRICS விளையாட்டின் Wushu போட்டியில் இந்தியா தங்கம், வெள்ளி, வெண்கலம் என ஒவ்வொன்றிலும் இரண்டு பதக்கங்கள் என மொத்தம் 6 பதக்கங்களை வென்றுள்ளது. M. Gyandas மற்றும் Anjul Namdev ஆகியோர் தலா ஒரு தங்கமும் Bidheswari Devi மற்றும் Toshibala தலா ஒரு வெள்ளியும் L. Sanatgombhi Chanu மற்றும் Sajan Lama தலா ஒரு வெண்கலமும் வென்றுள்ளனர்.

2. மத்திய அரசு புதிய வர்த்தக கட்டிடங்களுக்காக "ECBC-2017"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் "ECBC" என்பது என்ன?

A. Energy Control Building Code

B. Energy Conservation Building Code

C. Energy Concatenation Building Code

D. Energy Co-Nation Building Code




விடை : B. Energy Conservation Building Code

மத்திய மின் துறை அமைச்சரான பியுஸ் கோயல், இந்தியா முழுவதும் கட்டப்படவுள்ள புதிய வர்த்தக கட்டிடங்களுக்கான ஆற்றல் செயல்திறன் தரங்களை நிர்ணயிக்க "Energy Conservation Building Code-2017"-ஐ, புது டெல்லியில் அறிமுகப்படுத்தியுள்ளார். மேம்படுத்தப்பட்ட ECBC பதிப்பு, தற்போதைய மற்றும் எதிர்காலத்திற்கான கட்டுமானத் தொழில்நுட்பங்களை முன்னேற்றும். இது மேலும், ஆற்றல் நுகர்வு மற்றும் குறைவான கார்பன் வளர்ச்சியை ஊக்குவிப்பதோடு கட்டுப்படுத்தவும் செய்கிறது. இதனை Advance Clean Energy - Deployment Technical Assistance (PACE-D TA) திட்டத்தின் கீழ், United States Agency for International Development (USAID)-ன் தொழில்நுட்ப ஆதரவுடன் Bureau of Energy Efficiency (BEE) தயாரித்துள்ளது.

**3. அண்மையில் காலமான Baldwin Lonsdale, எந்த நாட்டின் ஜனாதிபதியாவார்?**

A. Vanuatu

B. சாம்பியா

C. உகாண்டா

D. கிரீசு



விடை : A. Vanuatu

2017 ஜூன் 17 அன்று Vanuatu-விலுள்ள Port Vila-வில் Vanuatu-வின் தற்போதைய ஜனாதிபதியான Baldwin Lonsdale காலமானார். முன்னாள் மூத்த குடிமைப்பணியாளரான இவர், Anglican மதகுருவாக ஆவதற்கு முன் Torba மாகாண அரசாங்கத்தின் பொதுச்செயலாளராக பணியாற்றியுள்ளார். Vanuatu-வின் ஜனாதிபதியாக பதவிவகிக்கும் 2வது Anglican மதகுரு இவராவார். 2014 செப்டம்பர் 22 முதல் இறக்கும் வரை இவர் நாட்டிற்கு சேவைசெய்தார்.


**4. மும்பையின் அடையாளச்சின்னமான "தாஜ்மஹால் அரண்மனை உணவகம்", எந்தச்சட்டத்தின் கீழ் "பட வர்த்தக முத்திரை (Image Trademark)" தகுதியைப்பெற்றுள்ளது?**

A. Trade Marks சட்டம், 1989

B. Trade Marks சட்டம், 1978

C. Trade Marks சட்டம், 1958

D. Trade Marks சட்டம், 1999



விடை : D. Trade Marks சட்டம், 1999

மும்பையின் அடையாளச்சின்னமான "தாஜ்மஹால் அரண்மனை உணவகம்", Trade Marks சட்டம், 1999-ன் கீழ் "பட வர்த்தக முத்திரை" தகுதியைப்பெற்றுள்ளது. எனவே, இந்த அரண்மனை உணவகம் அதன் கட்டடக்கலை வடிவமைப்பிற்காக சொத்துரிமை பாதுகாப்பைப்பெற்ற இந்தியாவில் முதல் கட்டடமாக மாறியுள்ளது. இதனால், இந்த

அரண்மனையின் படத்தை, உரிமக்கட்டணம் செலுத்தாமல் யாராலும் பயன்படுத்த முடியாது. இருப்பினும், வணிகரீதியாக விற்காத வரை இக்கட்டடத்தின் படங்களை எடுப்பதிலிருந்து இச்சட்டம், உள்ளூர் மக்களையும் சுற்றுலாப்பயணிகளையும் தடுக்காது. Trade Marks சட்டம், 1999 என்பது பதிவு செய்யப்பட்ட வர்த்தக முத்திரைகளுடன் தொடர்புடைய தற்போதைய சட்டமாகும். இது Trade Marks சட்டம், 1958-க்கு பதிலாக உருவாக்கப்பட்டதாகும்.

5. எந்த தேதியில் உலக அகதிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது?

A. ஜூன் 19
B. ஜூன் 20
C. ஜூன் 21
D. ஜூன் 22




விடை : C. ஜூன் 20

வரம்பு மீறல், மோதல்கள் மற்றும் வன்முறை அச்சுறுத்தலினால் தாயகத்தை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரின் மனதைரியம், வலிமை மற்றும் உறுதிப்பாட்டை போற்றும்விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 20 அன்று உலக அகதிகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. 2017 ஜூன் 20 அன்று, சிரிய அகதியான Muzoon Almellehan-வை சிறுவர் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காக இவ்வாண்டுக்கான, அதன் புதிய மற்றும் இளைய நல்லெண்ண தூதராக UNICEF (United Nations Children's Fund) நியமித்துள்ளது.

6. சரக்கு மற்றும் சேவை வரியை (Goods and Service Tax) ஊக்குவிப்பதற்கான புதிய விளம்பர தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. அமீர்கான்
B. அமிதாப்பச்சன்
C. சச்சின் டெண்டுல்கர்
D. PT. உசா



விடை : B. அமிதாப்பச்சன்

மத்திய சுங்கவரித்துறை, சரக்கு மற்றும் சேவை வரியை (GST) ஊக்குவிப்பதற்கான புதிய விளம்பர தூதுவராக இந்தி நடிகர் அமிதாப்பச்சனை நியமித்துள்ளது. இதற்காக இவரை வைத்து எடுக்கப்பட்ட 40 நொடிகள் ஓடக்கூடிய காணொளியை மத்திய நிதித்துறை ஒளிபரப்பிவருகிறது. இக்காணொளியில், GST-யை மூவர்ணக்கொடியுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளனர். VAT (Value Added Tax) வரி, சேவை வரி உட்பட அனைத்து மாநில மத்திய வரிகளையும் GST ஒன்றிணைத்து ஒரே வரியாக எளிதாக்குகிறது.

7. எந்த மத்திய அமைச்சர், அறிவியல்பூர்வமான ஆரோக்கிய வாழ்க்கைக்கு "Celebrating Yoga" எனும் அலைபேசிச்செயலியை தொடங்கிவைத்துள்ளார்?

A. அருண் ஜெட்லி
B. நரேந்திர மோடி
C. வெங்கையா நாயுடு
D. ஹர்சவர்தன்



விடை : D. ஹர்சவர்தன்

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சரான Dr. ஹர்சவர்தன், யோகா மூலம் மக்களை இணைக்க, புது டெல்லியில் "Celebrating Yoga" எனும் அலைபேசிச்செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த அலைபேசிச்செயலியினை 2017 சர்வதேச யோகா நாளுக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை உருவாக்கியுள்ளது. இதன் நோக்கம் யோகாவை பிரபலப்படுத்துவதோடு, அறிவியல்பூர்வமான ஆரோக்கிய வாழ்க்கைக்கு யோகாவை நடைமுறைப்படுத்த மக்களை ஊக்குவிப்பதாகும்.

8. சர்வதேச நீதிமன்றத்தில் (International Court of Justice) மீண்டும் நீதிபதியாக பணியாற்ற, இந்தியாவால் பரிந்துரைக்கப்பட்டவர் யார்?

A. Dhananjaya Chandrachud

B. Madan Bhimrao Lokur

C. Dalveer Bhandari

D. Harish Salve



விடை : C. Dalveer Bhandari

சர்வதேச நீதிமன்றத்தில் மீண்டும் நீதிபதியாக பணியாற்ற, நீதியரசர் Dalveer Bhandari-யை இந்தியா பரிந்துரைத்துள்ளது. இவரின் தற்போதைய பதவிக்காலம் பிப்ரவரி 2018 வரையாகும். வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள International Court of Justice தேர்தலில் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், 9 ஆண்டுகள் வரை இவர் சேவைசெய்யமுடியும். இவரின் பணிக்காலத்தில், கடல்சார்ந்த மோதல்கள், அண்டார்டிக்காவின் குமுறல், இனப்படுகொலை குற்றம், அணு ஆயுதக்குற்றம், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் இறையாண்மை உரிமைகள் மீறப்படுதல் போன்ற 11 விதமான வழக்குகளில் தனது கருத்தை தெரிவித்துள்ளார். International Court of Justice (ICJ) என்பது நெதர்லாந்திலுள்ள The Hague-ஐ தலைமையாகக்கொண்டு இயங்கும் ஐ.நா. வின் பிரதான நீதி அமைப்பாகும்.

9. UNICEF (United Nations Children's Fund)-ன் புதிய நல்லெண்ண தூதரான Muzoon Almellehan, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. பாகிஸ்தான்

B. சிரியா

C. இஸ்ரேல்

D. வடகொரியா



விடை : B. சிரியா

ஐ. நா சபையின் சிறுவர் நிதியம் (United Nations Children's Fund) 2017 ஜூன் 20 அன்று, உலக அகதிகள் நாளில் தனது புதிய மற்றும் இளைய நல்லெண்ண தூதுவராக, சிரிய அகதி Muzoon Almellehan-வை நியமித்துள்ளது. இதன் மூலம், 19 வயது பெண் கல்வி ஆர்வலரான Muzoon, அதிகாரப்பூர்வ அகதி எனும் தகுதியுடன் UNICEF-ன் முதல் நல்லெண்ண தூதுவராகிறார்.

10. அண்மையில் காலமான, சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிளாசுமா இயற்பியலாளரான PK. Kaw, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. தென் கொரியா

B. சீனா

C. இந்தியா

D. ஜப்பான்



விடை : C. இந்தியா

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிளாசுமா இயற்பியலாளரான பேராசிரியர். Predhiman Krishan Kaw (69), 2017 ஜூன் 18 அன்று குஜராத்திலுள்ள காந்திநகரில் காலமானார். அணுக்கரு இணைவின் மூலம் ஆற்றலை உற்பத்தி செய்யும் துறையில் இவரின் பங்களிப்பிற்காக, 1985-ல் தாமரைத்திரு (பத்ம ஸ்ரீ) விருது பெற்றுள்ளார். இவர் காந்திநகரிலுள்ள Institute of Plasma Research-ன் நிறுவனர் மற்றும் இயக்குநராவார். அதே ஆராய்ச்சி மையத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். அணுக்கரு இணைவுத்துறைக்கான இவரின் பிளாசுமாக்கள் அல்லாத நேர்கோட்டு கூட்டு நிகழ்வுகளின் இயற்பியலுக்கான அவரது சிறந்த பங்களிப்பிற்காக அறியப்படுகிறார்.

---

2017 June 21


1. பிரதமரின் யோகா விருதுக்கு முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிறுவனம் எது?

A. Swami Vivekananda Yoga Anusandhana Samsthana (SVYASA), பெங்களூர்

B. Ramamani Iyengar Memorial Yoga Institute (RIMYI), புனே

C. Lakshmibai National Institute of Physical Education (LNIPE), குவாலியர்

D. Morarji Desai National Institute of Yoga, புது டெல்லி




விடை : B. Ramamani Iyengar Memorial Yoga Institute.

யோகாவின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் சிறந்த பங்களிப்பினை அளித்ததற்காக, புனேவிலுள்ள இரமாமணி ஐயங்கார் நினைவு யோகா

நிறுவனம், பிரதமரின் யோகா விருதுக்கு முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 40 ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச அளவில் யோகாவை பரப்புவதற்காக இந்நிறுவனம் சேவைபுரிந்துள்ளது. மேலும், இந்நிறுவனம் யோகா சம்பந்தமான பல நூல்களை வெளியிட்டுள்ளது, அவை பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. உலகெங்கிலும் யோகாவை பிரபலப்படுத்த மற்றும் விளம்பரப்படுத்த ஆயிரக்கணக்கான ஐயங்கார் யோகா ஆசிரியர்கள் உள்ளனர். அமைச்சரவை செயலாளரை தலைமயாகக்கொண்ட மதிப்பீட்டுக்குழு, இவ்விருதை பரிந்துரை செய்கிறது. பிரதமரின் முதன்மை துணை செயலர், வெளியுறவுத்துறை செயலர், AYUSH-ன் செயலர் மற்றும் Dr. Veerendra Heggade ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

2. 2017 சர்வதேச யோகா நாளின் மையக்கருத்து என்ன?

A. Yoga for Health

B. Yoga for Peace

C. Yoga for Healthy mind

D. Yoga for Healthy living




விடை : A. Yoga for Health

யோகா, மனம் மற்றும் உடலுக்கிடையே சமநிலையை அடைவதற்கான ஒரு முழுமையான வழியை வழங்குகிறது என்ற உண்மையை உணர்த்த ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 21 அன்று சர்வதேச யோகா நாள் கொண்டாடப்படுகிறது. 3வது IYD 2017, புது டெல்லியிலிருந்து நியூயார்க் மற்றும் பாரிஸ் வரை உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. யோகா நாளை சிறப்பிக்கும் வகையில் 180 நாடுகளில் சுமார் 5,000 நிகழ்வுகள் நடைபெறுகின்றன. 2017 சர்வதேச யோகா நாளின் மையக்கருத்து "Yoga for Health" ஆகும். யோகா என்பது பல நோய்கள் மற்றும் உடல்நலக் குறைபாடுகளை குணப்படுத்தும் இந்தியாவின் மிகவும் பழமையான முறையாகும்.

3. மத்தியப்பிரதேசத்திலுள்ள 64 சிறு நகரங்களை மேம்படுத்துவதற்காக

ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (Asian Development Bank) எவ்வளவுக்கான கடன் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?

A. $355 மில்லியன் டாலர்கள்
B. $175 மில்லியன் டாலர்கள்
C. $275 மில்லியன் டாலர்கள்
D. $425 மில்லியன் டாலர்கள்



விடை : C. $275 மில்லியன் டாலர்கள்

மத்தியப்பிரதேசத்திலுள்ள 64 சிறு நகரங்களின் நகர்ப்புற சேவைகளை மேம்படுத்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (Asian Development Bank) $275 மில்லியன் டாலர்களுக்கான கடனொப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் ஒரு பகுதியாக, இந்தத்திட்டம் 64 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் நிலையான மற்றும் காலநிலை ரீதியான நீர் வழங்கல் மற்றும் கஜுராஹோ மற்றும் ராஜ்நகர் ஆகிய இரண்டு பாரம்பரிய நகரங்களில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் கட்டுமானத்தை மேம்படுத்தும். இத்திட்டத்திற்காக ADB வழங்கும் கடனுடன் சேர்த்து, மத்தியப்பிரதேச அரசு $124 மில்லியன் டாலர்களை வழங்கும். இந்தத்திட்டம் 2022-ம் ஆண்டில் நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. ஆவணக்காப்பகத்துறையில் ஒத்துழைப்பை ஊக்கப்படுத்துவதற்காக, எந்த நாட்டுடனான வரலாற்று உடன்படிக்கையில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?

A. தென்னாப்ரிக்கா
B. போர்ச்சுகல்
C. சீனா
D. நேபாளம்



விடை : B. போர்ச்சுகல்

ஆவணக்காப்பகத்துறையில் ஒத்துழைப்பை ஊக்கப்படுத்துவதற்காக,

போர்ச்சுகல் நாட்டுடனான வரலாற்று உடன்படிக்கையில், லிஸ்பனில் இந்தியா கையெழுத்திட்டது. இவ்வொத்துழைப்பின் ஒரு பகுதியாக, Torre do Tombo (போர்ச்சுகலின் தேசிய ஆவணக்காப்பகம்) 'Moncoes do Reino' (பருவகால சம்பந்தமாக) 62 தொகுதிகளின் டிஜிட்டல் நகல்களை இந்திய தேசிய ஆவணக்காப்பகத்திற்கு வழங்கியுள்ளது. இந்தத்தொகுதிகள், ஆசியாவில் போர்த்துகீசியத்தின் விரிவாக்கம் மற்றும் அரேபியாவுடனான அதன் வர்த்தக போட்டிகள், ஐரோப்பியத்தின் சக்திகள் மற்றும் தெற்காசிய மற்றும் கிழக்காசிய நாட்டு மன்னர்களுடனான அதன் உறவுகளைப்பற்றிய மிக முக்கியமான முதன்மை ஆதாரமாக விளங்குகிறது.

5. இந்தியாவின் முதல் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மிதக்கும் கப்பலான (FDN-2) எந்தக்கப்பல் தளத்திலிருந்து உருவாக்கப்பட்டது?

A. கோவா கப்பல்தளம்

B. பாரதி கப்பல்தளம்

C. பாம்பே கப்பல்தளம்

D. காட்டுப்பள்ளி கப்பல்தளம்



விடை : D. காட்டுப்பள்ளி கப்பல்தளம்

இந்திய கடற்படைக்கு சொந்தமான இந்தியாவின் முதல் உள்நாட்டு மிதக்கும் கப்பலான (FDN-2), சென்னைக்கு அருகேயுள்ள காட்டுப்பள்ளியிலுள்ள L&T கப்பல் கட்டுமான தளத்தில் உருவாக்கப்பட்டதாகும். 185 மீட்டர் நீளமும், 40 மீட்டர் அகலமும் கொண்ட இந்த மிதக்கும் கப்பல் 8,000 டன் வரையுள்ள அனைத்து விதமான கப்பல்கள், நீர்மூழ்கிகளை (விமானங்கள், பீரங்கிகள் தவிர) 7 மீ வரை மூழ்கி தாங்கும் திறன்கொண்டது. இது Larsen & Toubro நிறுவனத்தால் ரூ. 468 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

6. 2017 BIO சர்வதேச மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதி யார்?

A. YS சௌத்ரி

B. ஹர்ஷ் வர்தன்

C. வெங்கையா நாயுடு



D. அருண் ஜெட்லி

விடை : A. YS சௌத்ரி

2017 BIO சர்வதேச மாநாடு, கலிபோர்னியாவின் சான் டியாகோவிலுள்ள சான் டியாகோ மாநாட்டு மையத்தில் 2017 ஜூன் 19 முதல் 22 வரை நடைபெறுகிறது. இந்நிகழ்வை Biotechnology Innovation Organization (BIO) நடத்துகிறது. இது உயிரி தொழில்நுட்பத்துறையை பாதிக்கும் முக்கிய போக்குகள் மீது கவனத்தை செலுத்தும் மிகப்பெரிய உலக நிகழ்வாகும். அறிவியல் தொழில்நுட்ப மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சரான YS சௌத்ரி, 2017 மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்துகொள்கிறார். இந்நிகழ்வில் முக்கிய கொள்கை வகுப்பாளர்கள், விஞ்ஞானிகள், தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் பிரபலங்களிடமிருந்து முக்கியக்குறிப்புகள் மற்றும் கருத்தரங்குகள் இடம்பெறும். இந்த மாநாட்டில், BIO-வின் வியாபார மன்றம், உயிரி தொழில்நுட்ப போக்குகள் பற்றிய நூற்றுக்கணக்கான கருத்தரங்குகள், கொள்கை சிக்கல்கள் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் ஆகியவை நடைபெறும்.

7. எந்த மாநில அரசு, அரசுப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொடக்கக்கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி வரை பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்போவதாக அறிவித்துள்ளது?

A. பீகார்

B. கர்நாடகா

C. பஞ்சாப்

D. உத்தரப்பிரதேசம்



விடை : C. பஞ்சாப்

அண்மையில் பஞ்சாப் அரசு, அரசுப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொடக்கக்கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி வரை பெண் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்போவதாக அறிவித்துள்ளது. ஆங்கில அறிவை வளர்க்கும் வகையில், 2017 ஜூலை முதல் அனைத்து அரசுப்பள்ளிகளிலும்

சிறப்புத்திட்டம் கொண்டுவரப்படும். மேலும், 13000 அரசுப்பள்ளிகளிலும் 48 அரசு கல்லூரிகளிலும் இலவச இணைய வசதி செய்யப்படும். இதற்கிடையில், பஞ்சாயத்துகளில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான ஒதுக்கீட்டை 33%-லிருந்து 50% ஆக அதிகரித்துள்ளது.

**8. எந்த இந்திய விவசாய நுண்ணுயிரியலாளருக்கு 2017-க்கான ஜப்பான் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் விருது வழங்கப்பட்டுள்ளது?**



A. Anil Kakodkar

B. Harish Chandra

C. Shrihari Chandraghatgi

D. Jayant Vishnu Narlikar

விடை : C. Shrihari Chandraghatgi

எரிபொருள் சம்பந்தமான சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கான, சிறந்த தொழில்நுட்பங்களை கண்டுவருவதற்காக EcoCycle Corporation-ன் தலைமை அதிகாரியும், இந்திய விவசாய நுண்ணுயிரியலாளருமான Dr. Shrihari Chandraghatgi-க்கு 2017-க்கான ஜப்பான் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் விருது வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த விருதைப்பெற்ற முதல் அயல்நாட்டவர் என்கிற பெருமை இவரைச்சேருகிறது. இந்த சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் விருது என்பது, ஜப்பானின் சுற்றுச்சூழல் அமைச்சகம், ஜப்பானின் National Institute for Environmental Studies (NIES) மற்றும் The Nikkan Kogyo Shinbun (ஊடகக்குழு) ஆகியவை ஒன்றிணைந்து ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் துறைக்காக வழங்கும் மிகவுயரிய விருதாகும்.

**9. இந்தியாவின் புதிய மத்திய உள்துறை செயலாளர் யார்?**



A. Madhusudhan Prasad

B. Anand Kumar

C. Rajiv Gauba

D. Ajay Kumar Bhalla

விடை : **C. Rajiv Gauba**

**1982-ல்** ஜார்க்கண்ட்டில் **IAS** அதிகாரியாக பணியாற்றிய **Rajiv Gauba,** இந்தியாவின் புதிய மத்திய உள்துறை செயலாளராவார். **2017** ஆகஸ்டில் **Rajiv Mehrishi-ன்** ஓய்வுக்குப்பின் இவர் பதவியேற்பார். அதுவரை மத்திய உள்துறையில் **Gauba,** சிறப்புப்பணியிலிருப்பார். இப்பதவிக்குமுன் நகர்ப்புற மேம்பாட்டு செயலாளராக சிறப்புப்பணியிலிருந்தார்.

**10. எந்த நாட்டில் Lahugala Kitulana தேசியப்பூங்கா அமைந்துள்ளது?**



A. இந்தியா
B. பூடான்
C. வங்காளதேசம்
D. இலங்கை

விடை : **D. இலங்கை**

இலங்கையிலுள்ள சிறிய தேசியப்பூங்காக்களில் **Lahugala Kitulana** தேசியப்பூங்காவும் ஒன்றாகும். இங்கு இலங்கை யானை, பறவைகள், பஞ்சவர்ணக்கிளிகள், இலங்கை சிறுத்தை, இந்திய மான், இலங்கை சாம்பார் மான், இந்திய எறும்புத்தின்னி, முயல், காட்டுப்பூனை ஆகியவை உள்ளன.

---

2017 June 22

**1. AYUSH அமைச்சகத்தின் புதிய சிறப்புச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A. ரவி காந்த்
B. ராஜேஷ் கோடெச்சா
C. சஜல் சக்ரவர்த்தி
D. பரமேசுவரன் ஐயர்

விடை : **B. ராஜேஷ் கோடெச்சா (Rajesh Kotecha)**

புகழ்பெற்ற ஆயுர்வேத மருத்துவர் “வைத்திய” ராஜேஷ் கோடெச்சா

மூன்றாண்டு காலத்திற்கு AYUSH அமைச்சகத்தின் புதிய சிறப்புச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஜெய்ப்பூரிலுள்ள சக்ரபாணி ஆயுர்வேத மருத்துவமனையின் தலைமை ஆலோசகராவார். தனியார் துறைகளிலுள்ள சிறப்பு வல்லுநர்களை அரசுக்கு கொண்டுவருவதற்கான மத்திய அரசின் முயற்சியின் அடிப்படையில் இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**2. Mercer-ன் 2017 Cost of Living கருத்துக்கணிப்பின்படி, வெளிநாட்டவர்களுக்கான அதிக செலவின நகரங்களுக்கான பட்டியலில் முதலிடத்தை பிடித்திருக்கும் நகரம் எது?**

A. Luanda

B. சிங்கப்பூர்

C. Zurich

D. டோக்கியோ

Mercer cost of living survey – worldwide rankings 2017

| Rank as of March 2017 | 2016 | City | Country |
|---|---|---|---|
| 1 | 2 | Luanda | Angola |
| 2 | 1 | Hong Kong | Hong Kong |
| 3 | 5 | Tokyo | Japan |
| 4 | 3 | Zurich | Switzerland |
| **5** | **4** | **Singapore** | **Singapore** |
| 6 | 15 | Seoul | South Korea |
| 7 | 8 | Geneva | Switzerland |
| 8 | 7 | Shanghai | China |
| 9 | 11 | New York City | United States |
| 10 | 13 | Bern | Switzerland |

Source: MERCER'S 2017 COST OF LIVING SURVEY
STRAITS TIMES GRAPHIC

விடை : **A. Luanda**

அங்கோலாவின் தலைநகரான லுவாண்டா, Mercer-ன் 23வது ஆண்டுக்கான 2017 Cost of Living கருத்துக்கணிப்பின்படி, வெளிநாட்டவர்களுக்கான அதிக செலவின நகரங்களுக்கான பட்டியலில் முதலிடம் வகிக்கிறது. ஹாங்காங் 2வது இடத்தைப்பிடித்துள்ளது. அதைத்தொடர்ந்து டோக்கியோ, ஜூரிச், சிங்கப்பூர், சியோல் மற்றும் ஜெனீவா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப்பிடித்துள்ளன. இந்தியாவிலிருந்து இப்பட்டியலில் மும்பை 57வது இடத்தைப்பிடித்துள்ளது. அதைத்தொடர்ந்து, புதுடெல்லி (99), சென்னை (135), பெங்களூர் (166), கொல்கத்தா (184) ஆகிய நகரங்கள் உள்ளன. இந்தக்கணக்கெடுப்பில் ஐந்து கண்டங்களிலிருந்து 209 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. Mercer-ன் கருத்துக்கணிப்பின்படி, வெளிநாடு வாழ் மக்களுக்கான மிகக்குறைந்த செலவின நகரங்களாக Tunis (209), Bishkek (208) மற்றும் Skopje (206) ஆகிய நகரங்கள் உள்ளன. Mercer-ன் இந்த அதிகாரப்பூர்வ ஆய்வு, பன்னாட்டு நிறுவனங்களுக்கும் அரசாங்கங்களுக்கும் அவர்களின் வெளிநாடு வாழ் ஊழியர்களுக்கான செலவினத்தொகையை நிர்ணயிக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**3. தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகத்தின் புதிய செயலாளர் யார்?**



A. ஜக்திஷ் பிரசாத் மீனா
B. பி.கே. புஜாரி
C. அருணா சுந்தரராஜன்
D. நரேந்திர குமார் சின்ஹா

விடை : D. நரேந்திர குமார் சின்ஹா

1980-ல் பீகாரில் IAS அலுவலராக பணிபுரிந்த நரேந்திர குமார் சின்ஹா, தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகத்தின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்குமுன் இப்பதவியிலிருந்த Ajay Mittal, Personnel and Training துறைக்கு புதிய செயலராக நியமிக்கப்பட்டுள்ளதால், சின்ஹா இப்பதவிக்கு வந்துள்ளார். Personnel and Training துறையின் தற்போதைய செயலரான B P Sharma, 2017 ஜூன் 30 அன்று ஓய்வுபெறுவார்.

**4. உலகின் முதல் தரவுத்தூதரகம் (data embassy) எந்த நாட்டில் நிறுவப்படுகிறது?**




A. ஜப்பான்
B. இந்தியா
C. எஸ்டோனியா
D. சீனா

விடை : C. எஸ்டோனியா

உலகின் முதல் தரவுத்தூதரகம் (data embassy) எஸ்டோனிய அரசாங்கத்தால் 2018-ல் லக்சம்பர்க்கில் நிறுவப்படுகிறது. இதற்காக எஸ்டோனியாவின் பிரதமர் Jüri Ratas மற்றும் லக்சம்பர்க்கின் பிரதமர் Xavier Bettel ஆகிய இருவரும் வீட்டுத்தரவு மற்றும் தகவல் அமைப்புகள் பற்றிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். இது லக்சம்பர்க்கில் தரவுத்தூதரகம் (data embassy) அமைக்க வழிசெய்யும். இது தரவு மேலாண்மைக்கான எஸ்டோனியாவின் பொது உத்தியாகும், மேலும் தரவு மற்றும் சேவைகளுக்கு இது ஓர்

இரட்டை உத்தரவாதமாகும். எஸ்டோனியாவின் வேறு எந்த தூதரகங்களுக்கு உள்ள உரிமைகள் போலவே தரவுத்தூதரகத்திற்கும் அதே உரிமைகள் உண்டு.

**5. புதிதாக உருவாக்கப்பட்ட United Nations Counter-Terrorism Office (UNCTO)-க்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A. Vladimir Voronkov

B. Sergey Lavrov

C. Vladimir Kolokoltsev

D. Dmitry Medvedev

விடை : A. Vladimir Voronkov

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள United Nations Counter-Terrorism Office (UNCTO)-க்கு தலைவராக இரஷ்ய தூதர் Vladimir Ivanovich Voronkov நியமிக்கப்பட்டுள்ளார். இவர் Under-Secretary-General என்ற பட்டத்துடன் செயல்படுவார். ஐ. நா-வின் பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிரான முயற்சிகளுக்கு தலைமை தாங்குவது, முடிவெடுக்கும் பணியில் பங்கேற்பது ஆகியவை Under-Secretary-General-ன் பணியாகும். UNCTO-வின் நோக்கம், 36 ஐ.நா. நிதியுதவித் திட்டங்கள், 12 ஒருங்கிணைந்த நிறுவன குழுக்கள், இண்டர்போல் மற்றும் உலக சுங்க அமைப்பு (World Customs Organization) ஆகியவற்றில் பயங்கரவாதத்திற்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்துவதாகும். தற்போது, Vladimir Voronkov சர்வதேச வியன்னா அமைப்பின் இரஷ்ய கூட்டமைப்பின் தூதர் மற்றும் நிரந்தர பிரதிநிதியாக உள்ளார்.

**6. மத்திய நிதி அமைச்சகத்தின் புதிய பொருளாதார விவகாரச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A. என்.கே. சின்ஹா

B. அஜய் குமார் ஷாலா

C. சுபாஷ் சி கார்க்

D. கீர்த்தி சிங்



விடை : C. சுபாஷ் சி கார்க்

1983-ல் இராஜஸ்தானில் IAS அலுவலராக பணிபுரிந்த சுபாஷ் சி கார்க், மத்திய நிதி அமைச்சகத்தின் புதிய பொருளாதார விவகாரச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். 2017 மே 31 அன்று Shaktikanta Das-ன் ஓய்வுக்குப்பின் இப்பதவி காலியாகவே இருந்தது. தற்போது பெருநிறுவன விவகார செயலாளராக பணிபுரிந்துவரும் Tapan Ray, பொருளாதார விவகாரத்துறையில் கூடுதல் பொறுப்பிலுள்ளார். இப்பதவிக்கு வருவதற்கு முன் சுபாஷ் வங்காளதேசம், பூடான், இந்தியா மற்றும் இலங்கை ஆகியவற்றிற்கான உலக வங்கியின் செயல் இயக்குநராக பணியிலிருந்தார்.

7. அண்மையில் காலமான நவநாகரிக உடை வடிவமைப்பாளர் Carla Fendi, எந்த நாட்டைச்சேர்ந்தவராவார்?

A. ஜெர்மனி
B. இத்தாலி
C. UK
D. பிரான்ஸ்




விடை : B. இத்தாலி

இத்தாலிய நவநாகரிக உடை வடிவமைப்பாளரான Carla Fendi (79), இத்தாலியிலுள்ள ரோமில் காலமானார். இவர் தனது பெற்றோரின் சிறிய தோல் பட்டறையின் வளர்ச்சிக்காக தனது 4 சகோதரிகளுடன் சேர்ந்து பணியாற்றி, அதனை ஓர் உலகளாவிய ஆடம்பர வர்த்தக நிறுவனமாக மாற்றினார்.

8. எந்த நாட்டில் Bhawal தேசியப்பூங்கா அமைந்துள்ளது?

A. வங்கதேசம்
B. இந்தியா
C. மியன்மார்
D. இலங்கை



விடை : A. வங்கதேசம்

Bhawal தேசியப்பூங்கா வங்கதேசத்தின் டாக்கா பிரிவிலுள்ள காசிபூரில் அமைந்துள்ளது. பூங்காவின் முக்கியப்பகுதி 940 ஹெக்டேர் பரப்பளவிலும், மொத்த வனப்பகுதி 5022 ஹெக்டேர் பரப்பளவிலும் உள்ளது. இதன் முக்கிய நோக்கம், வாழ்விடங்களை பாதுகாப்பதும் பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகளை வழங்குவதுமாகும். இப்பூங்காவில் 152 வகையான பல்வேறு மர இனங்கள், 53 புதர்கள், 106 மூலிகைச்செடிகள் மற்றும் 34 கொடி வகைகள் உட்பட 345 வகையான தாவர இனங்கள் உள்ளன.


9. “Hope in a challenged democracy; An Indian narrative” எனும் நூலின் ஆசிரியர் யார்?

A. M. ஹமீத் அன்சாரி

B. KK மேனன்

C. அஷ்வானி குமார்

D. MN வெங்கடாசலையா





விடை : C. அஷ்வானி குமார்

புகழ்பெற்ற வழக்குரைஞரும், நூலாசிரியரும், மூத்த பாராளுமன்ற உறுப்பினருமான Dr. அஸ்வினி குமார், “Hope in a challenged democracy; An Indian narrative” எனும் நூலின் ஆசிரியராவார். இந்நூலின் முதல் கருப்பொருள், செல்வத்துக்கும் அதிகாரத்திற்கும் இடையேயுள்ள உறவும், அரசாங்கத்தின் நம்பகத்தன்மையும் தார்மீக அதிகாரத்தின் மீதான அதன் தாக்கமும் ஆகும். இரண்டாவதாக, ஒரு சகிப்புத்தன்மையற்ற சூழலின் தாக்கமாகும். இந்நூல் 2017 ஏப்ரல் 10 அன்று புது டெல்லியில், முன்னாள் பிரதமரான Dr.மன்மோகன் சிங் அவர்களால் வெளியிடப்பட்டது.

10. எந்தத்தேதியில், 2017 உலக நீரளவியல் நாள் (World Hydrography Day) கடைபிடிக்கப்படுகிறது?

A. ஜூன் 21

B. ஜூன் 22




C. ஜூன் 23

D. ஜூன் 24

விடை : A. ஜூன் 21

நீரளவியலாளர்களின் (Hydrographers) பணியை உலகறியச்செய்வதற்காகவும், கடலில் எந்தவொரு செயலில் ஈடுபடுவதற்கு துணைபுரியும் இன்றியமையாத அறிவியலான நீரளவியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 21 அன்று உலக நீரளவியல் நாள் (World Hydrography Day) கடைபிடிக்கப்படுகிறது. 2017-க்கான மையக்கருத்து, "Mapping our seas, oceans and waterways - more important than ever" ஆகும்.

---

2017 June 23

1. கட்டுப்பாடற்ற போக்குவரத்துகளை கட்டுப்படுத்த ரோபோவைப் பயன்படுத்தவுள்ள இந்தியாவின் முதல் நகரம் எது?



A. இண்டூர்

B. புனே

C. கொச்சி

D. ராய்பூர்

விடை : A. இண்டூர்

வளர்ந்துவரும் அதன் கட்டுப்பாடற்ற போக்குவரத்துகளை கட்டுப்படுத்த, சோதனை அடிப்படையில் ரோபோவைப்பயன்படுத்தவுள்ள இந்தியாவின் முதல் நகரம் இண்டூர் ஆகும். போக்குவரத்துக்காவல் துறை இண்டூரிலுள்ள ஒரு தனியார் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து, நகரத்திலுள்ள குழப்பமான போக்குவரத்தை கட்டுப்படுத்த ஒரு சோதனை அடிப்படையில் MR 9 எனும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடத்தில் ஓர் உலோக ரோபோவை நிறுவியுள்ளது. இந்த போக்குவரத்து கட்டுப்பாட்டு ரோபோவை தனியார் பொறியியல் கல்லூரியின் பேராசியர்கள் Rahul Tiwari மற்றும் Anirudh Sharma ஆகியோர் உருவாக்கியுள்ளனர்.

2. எந்த இந்திய வங்கி, இந்தியாவின் முதல் திறந்த EMV தொடர்பற்ற மெட்ரோ அட்டையான "கொச்சி 1"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது?

A. SBI
B. ஆக்சிஸ் வங்கி
C. ICICI வங்கி
D. HDFC வங்கி




விடை : B. ஆக்சிஸ் வங்கி

Kochi Metro Rail Corporation (KMRL) மற்றும் ஆக்சிஸ் வங்கி இணைந்து கொச்சி நகர பயணிகளுக்கு ஒரு வசதியான மற்றும் தொந்தரவற்ற பயண அனுபவத்தை வழங்குவதற்காக, இந்தியாவின் முதல் திறந்த EMV தொடர்பற்ற மெட்ரோ அட்டையான "KMRL Axis Bank 'Kochi1' Card"-ஐ அறிமுகப்படுத்தியுள்ளன. இதற்காக ஆக்சிஸ் வங்கி, National Payments Corporation of India (NPCI) உடனிணைந்து இதனை தயாரித்துள்ளது. தனிப்பட்ட அட்டைகளை உடனடியாக வழங்குதல், ரீசார்ஜ் வசதி, தொந்தரவற்ற பொருள் வாங்கும் அனுபவம் முதலிய ஒருங்கிணைந்த வசதிகளை இவ்வட்டையின் மூலம் பெறலாம்.

3. இலண்டனில் நடைபெற்ற 7வது ஆசிய விருதுகள் வழங்கும் விழாவில், "Social Entrepreneur of the Year" விருதினைப்பெற்ற இந்தியர் யார்?

A. ப்ரிதி படேல் (Priti Patel)
B. ஜெய்ன் மாலிக் (Zayn Malik)
C. நிஷா தத் (Nisha Dutt)
D. ஆஷா போஸ்லே (Asha Bhosle)



விடை : C. நிஷா தத் (Nisha Dutt)

இலண்டனில் நடைபெற்ற 7வது ஆசிய விருதுகள் வழங்கும் விழாவில், சமூக மூலதனத்தில் கவனம் செலுத்துகின்ற ஓர் உலகளாவிய நிறுவனமாக Intellecap-ஐ உருவாக்கியதற்காக, Intellecap-ன் முதன்மை செயல் இயக்குநரான நிஷா தத்துக்கு "Social Entrepreneur of the Year" விருது வழங்கி

கௌரவிக்கப்பட்டது. இவ்விருதினைப்பெறும் முதல் இந்தியர் இவர்தான். சுகாதாரம், நிதி சேவைகள், கண்டுபிடிப்பு ஆய்வகங்கள், **"Credit-Tree"** போன்றவைகளில் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்ததில் இவரின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

**4. எந்த சமூக வலைத்தளம், UK-வில் இணைய தீவிரவாதங்களை ஒழிக்க Online Civil Courage Initiative (OCCI) எனும் முயற்சியை தொடங்கியுள்ளது?**

A. டிவிட்டர்

B. கூகுள்

C. Snapchat

D. ஃபேஸ்புக்



விடை : D. ஃபேஸ்புக்

ஃபேஸ்புக் தனது சமூக வலைத்தளத்தில் தீவிரவாத சம்பந்தமான பதிவுகளை ஒழிக்கும் பொருட்டு, UK-வில் **Online Civil Courage Initiative (OCCI)** எனும் முயற்சியை தொடங்கியுள்ளது. இந்தப்புதிய முயற்சியின் மூலம் அரசு சாரா நிறுவனங்களுக்கு (NGO) பயிற்சியளித்து, அவர்களை தீவிரவாத சம்பந்தமான பதிவுகளை கண்காணிக்கவும் அவற்றுக்கு பதிலளிக்கவும் பயன்படுத்த ஃபேஸ்புக் முடிவுசெய்துள்ளது. இதனால் நேரடியாக ஃபேஸ்புக்கின் உதவி மையத்தை தொடர்புகொள்ள முடியும்.

**5. (2017 Carnegie Medal of Philanthropy) - 2017 அறப்பணிக்கான Carnegie பதக்கத்தைப்பெறும் இந்தியர் யார்?**

A. அசிம் பிரேம்ஜி

B. நீத்தா அம்பானி

C. ராகுல் பஜாஜ்

D. இந்து ஜெயின்




விடை : A. அசிம் பிரேம்ஜி

இந்தியாவில் பொதுப்பள்ளி **(Public School)** அமைப்புகளுக்கான

சீர்திருத்தங்களை மேற்கொண்டதற்காக, WIPRO-வின் தலைவரான அசிம் பிரேம்ஜி-க்கு 2017 அறப்பணிக்கான Carnegie பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பொதுமக்களின் நலனுக்காக நீண்டகால பங்களிப்பிற்காக, இவருடன் சேர்த்து 10 பேர் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். 2017 அக்டோபரில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில், Carnegie நிறுவனம் இவ்விருதினை வழங்கும். ஒரு குறிப்பிட்ட துறை, நாடு அல்லது மக்களுடைய சமூகத்தில் குறிப்பிடத்தக்க மற்றும் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் அறப்பணியாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

**6. அயல்நாடுவாழ் இந்திய விஞ்ஞானிகளை ஈர்ப்பதற்காக, மத்திய அரசு "VAJRA" திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் "VAJRA" என்பது என்ன?**

**A. Viable Advanced Joint Research Faculty**

**B. Visiting Advanced Joint Research Faculty**

**C. Visage Advanced Joint Research Faculty**

**D. Viral Advanced Joint Research Faculty**




விடை : **B. Visiting Advanced Joint Research Faculty**

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சரான Dr. ஹர்ஷ் வர்தன், இந்திய ஆராய்ச்சியாளர்களும் அயல்நாடு வாழ் இந்திய ஆராய்ச்சியாளர்களும் ஒன்றிணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக Visiting Advanced Joint Research Faculty (VAJRA) எனும் திட்டத்தை புது டெல்லியில் அறிமுகப்படுத்தியுள்ளார். இந்த திட்டத்தின் கீழ், அயல்நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி ஆராய்ச்சியாளர்களும் இந்திய ஆராய்ச்சியாளர்களும் ஒன்றிணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்தின் மூலம், ஆராய்ச்சியாளர்களுக்கு முதல் மாதம் $15000 டாலர்களும், அடுத்துவரும் மாதங்களுக்கு $10000 டாலர்களும் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, ஆற்றல், சுகாதாரம் போன்ற துறைகள் ஊக்கப்படுத்தப்படும்.

**7. வீட்டிற்கே சென்று டீசல் விநியோகம் செய்யவுள்ள இந்தியாவின் முதல்**


நகரம் எது?

A. கவுகாத்தி

B. ஷில்லாங்

C. பெங்களூரு

D. புனே




விடை : C. பெங்களூரு

பால், செய்தித்தாள் போன்று வீட்டிற்கே சென்று டீசல் எரிபொருள் விநியோகம் செய்யவுள்ள இந்தியாவின் முதல் நகரம் பெங்களூரு ஆகும். ஓராண்டுக்கு முன், 3 விநியோக வண்டிகளுடன் (கொள்ளளவு: 950 ltr) ஆரம்பிக்கப்பட்ட "Mypetrolpump" எனும் இந்த சேவை, இதுவரை 5000 லிட்டருக்கும் மேலான எரிபொருளை வழங்கியுள்ளது. ஒரு நிலையான விநியோகக்கட்டணத்துடன் அன்றைய விற்கும் விலையில் டீசல் வழங்கப்படுகிறது. 100 லிட்டர் வரை, ஒரு முறை விநியோகக்கட்டணம் ரூ.99 ஆகும். 100 லிட்டருக்கு மேல், ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் கூடுதலாக செலுத்த வேண்டும். தொடக்கத்தில் 20 தனி வாடிக்கையாளர்களைக்கொண்டிருந்தது, இதில் 16 பள்ளிகள் (250-300 பஸ்கள் கொண்டவை) மற்றும் ஒரு சில குடியிருப்புகளும் அடக்கம். ஒருவர் தொலைபேசி அழைப்பு மூலம் அல்லது இலவச அலைபேசிச்செயலியை பதிவிறக்குவதன் மூலம் ஆன்லைனில் ஆர்டர் செய்யலாம்.

8. எந்தத்தேதியில் 2017 ஐ. நா பொதுச்சேவை நாள் (United Nations Public Service Day) அனுசரிக்கப்படுகிறது?

A. ஜூன் 21

B. ஜூன் 22

C. ஜூன் 23

D. ஜூன் 24




விடை : C. ஜூன் 23

பொது ஊழியர்களின் பணிகளை அங்கீகரிப்பதற்காகவும், இளைஞர்களை

பொதுத்துறையில் பணியாற்ற ஊக்குவிப்பதற்காகவும், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 23 அன்று ஐ. நா பொதுச்சேவை நாள் அனுசரிக்கப்படுகிறது. சமுதாயத்தில் பொதுச்சேவையின் மதிப்பை போற்றுவதற்கும், சமூகத்தின் வளர்ச்சியில் பொதுச்சேவையின் பங்களிப்புப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், பொது ஊழியர்களின் பணியை கௌரவிப்பதற்கும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

9. எந்த இந்திய பசி ஒழிப்புப்போராளிக்கு, **"2017 Queen's Young Leaders"** விருது வழங்கப்படவுள்ளது?

A. **Sachin Bansal**

B. **Ankit Kawatra**

C. **Anil Agarwal**

D. **Kunal Bahl**




விடை : **B. Ankit Kawatra**

அடுத்தவர்களின் மறுவாழ்வுக்காக இவர் செய்யும் பணியை போற்றும் விதமாக, பசி ஒழிப்புப்போராளி **Ankit Kawatra**-க்கு **"2017 Queen's Young Leaders"** விருது வழங்கப்படவுள்ளது. 2017 ஜூன் 29 அன்று இலண்டனிலுள்ள பக்கிங்காம் அரண்மனையில் நடைபெறவுள்ள விழாவில், இவரோடு சேர்ந்து 53 காமன்வெல்த் நாடுகளைச்சேர்ந்த 60 பேருக்கு "எலிசபெத் இராணி" விருது வழங்கப்படவுள்ளது. இவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடத்தும் தலைமைப்பண்பு திறன்கள், சமூக பொறுப்புகள் போன்ற வகுப்புகளில் கலந்துகொள்வார்கள். இவர் உணவகங்கள், வீடுகளில் வீணாகும் உணவுகளை சேகரித்து தேவையுள்ளவர்களுக்கு வழங்கும், ஊட்டச்சத்து குறைபாட்டை ஒழிக்கும், பசி போன்ற உணவு ரீதியான பிரச்சனைகளை தீர்க்கும், ஓர் இலாப நோக்கற்ற நிறுவனமான **"Feeding India"**-வின் நிறுவனராவார்.

10. எந்த மாநிலத்தில் **Kishtwar** தேசியப்பூங்கா அமைந்துள்ளது?

A. ஜம்மு காஷ்மீர் (J&K)

B. இமாச்சலப்பிரதேசம்



C. பஞ்சாப்
D. சிக்கிம்

விடை : A. ஜம்மு காஷ்மீர் (J&K)


Kishtwar தேசியப்பூங்கா ஜம்மு & காஷ்மீர் மாநிலத்திலுள்ள Kishtwar மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பூங்கா வடக்கில் Rinnay ஆற்றாலும், தெற்கில் Kibar Nala பனிக்கட்டிகளாலும், கிழக்கில் இமயமலையாலும், மேற்கில் Marwa ஆற்றாலும் சூழப்பட்டுள்ளது. இப்பூங்கா 1,700 மீ உயரத்திலிருந்து 4,800 மீ வரையான உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு பழுப்புக்கரடி, பனிச்சிறுத்தை, இமாலய கஸ்தூரி மான், Hangul, Ibex, போன்ற விலங்கினங்கள் உள்ளன.

---

2017 June 24

1. இந்தியாவின் எந்த மாநில அரசு, 2017-ம் ஆண்டுக்கான ஐ. நா-வின் பொதுச்சேவைக்கான விருதினை வென்றுள்ளது?

A. மேற்கு வங்கம்
B. ஒடிசா
C. சிக்கிம்
D. கர்நாடகம்




விடை : A. மேற்கு வங்கம்

பெண் குழந்தைக்கல்விக்கான உத்தரவாதத்தினை உறுதி செய்ததற்காகவும், குழந்தைத்திருமண எதிர்ப்பிற்காக செயல்பட்டதற்காகவும், 2017-ம் ஆண்டுக்கான ஐ. நா-வின் பொதுச்சேவைக்கான விருதினை மேற்கு வங்க மாநில அரசு வென்றுள்ளது. 'Kanyashree Prakalpa' எனும் திட்டத்தின் மூலம், குழந்தைத்திருமண விகிதம் குறைந்தும் பெண் குழந்தைக்கல்வி விகிதம் அதிகரித்துமுள்ளது. நெதர்லாந்திலுள்ள The Hague-ல் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், ஒவ்வொரு பெண்குழந்தைகளின் சார்பிலும் வங்கிக்கணக்கில் அவர்களின் திருமணமாகும் காலம்வரை

வைப்புநிதி பேணப்படும். உலகெங்குமுள்ள பொதுச்சேவை நிறுவனங்களின் சேவைகளை சிறப்பிக்கும் விதமாக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. இது நிலையான அபிவிருத்தி இலக்குகளை **(Sustainable Development Goals)** செயல்படுத்துவதில் பொது சேவைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.


**2. எந்த மாநில அரசு, மரக்கன்றுகளின் எண்ணிக்கை தரவுக்காக 'My Plant' எனும் அலைபேசிச்செயலியினை அறிமுகப்படுத்தவுள்ளது?**

A. தமிழ்நாடு

B. கேரளா

C. கோவா

D. மகாராஷ்டிரா




விடை : D. மகாராஷ்டிரா

**2017 ஜூலை 1** அன்று மகாராஷ்டிர மாநில அரசாங்கம், **'My Plant'** எனும் அலைபேசிச்செயலியினை அறிமுகப்படுத்தவுள்ளது. இது மாநிலத்திலுள்ள மரங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை பதிவு செய்வதற்கு உதவும். தனி நபரோ அல்லது அமைப்புகளோ, வனத்துறையுடன் சேர்ந்து தாங்கள் நட்ட மரக்கன்றுகளின் விவரங்களை இச்செயலியின் மூலம் பதிவுசெய்யலாம். இது மரங்களுக்கான ஒரு தரவுத்தளத்தை **(Database)** உருவாக்க உதவும். ஜூலை 1 முதல் 7-க்குள் பொதுமக்களின் பங்களிப்புடன் 4 கோடி மரக்கன்றுகள் வரை நட வனத்துறை முடிவுசெய்துள்ளது. இந்த செயலியில் பதிவுசெய்யப்படும் அனைத்து விவரங்களும், வனத்துறையின் வலைத்தளத்தில் தானாகவே பதிவிடப்படும்.

**3. சர்வதேச கிரிக்கெட் மன்றக்குழுவின் (International Cricket Council-ICC) புதிய துணைத்தலைவர் யார்?**

A. Nizamuddin Chowdhury

B. David Richardson

C. Imran Khawaja

D. James Sutherland



விடை : C. Imran Khawaja

Associates counties-ன் தலைவரும், சிங்கப்பூரைச்சேர்ந்த நிர்வாகியுமான Imran Khawaja, சர்வதேச கிரிக்கெட் மன்றக்குழுவின் (International Cricket Council-ICC) புதிய துணைத்தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ICC-ன் தலைவர் Shashank Manohar வருகைபுரியாத நிலையில், ICC-ன் கூட்டங்களை இவர் தலைமையேற்பார். மூத்த வழக்குரைஞரான இவர், ICC வாரியத்தில் ஏழு ஆண்டுகளாக பணிபுரிந்துள்ளார். 2017 ஜூன் 22 அன்று ஏற்பட்ட அரசியலமைப்பு மாற்றத்திற்குப்பின்னர், ICC குழுவால் துணைத்தலைவர் பதவி உருவாக்கப்பட்டது.

4. 2017 சர்வதேச விதவைகள் நாளின் (International Widows Day) மையக்கருத்து என்ன?

A. Be Bold for Change

B. Never Alone

C. Fight against injustice

D. Empowering women for greater achievements





விடை : D. Empowering women for greater achievements

நீண்டகாலமாக மறுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட விதவைகளுக்கான முழு உரிமை மற்றும் அங்கீகாரத்தை பெறும்விதமாக, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 23 அன்று சர்வதேச விதவைகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. பல நாடுகளிலுள்ள உரிமைகள் மறுக்கப்பட்ட, ஏழ்மையாக்கப்பட்ட விதவைகள் மற்றும் அவர்களைச்சார்ந்தவர்கள் பற்றி இந்நாள் எடுத்துரைக்கிறது. 2017-ம் ஆண்டில் வரும் இந்நாளுக்கான மையக்கருத்து "Empowering women for greater achievements" ஆகும்.

5. World Wrestling Entertainment (WWE) போட்டியில் பங்கேற்கும் முதல் இந்திய பெண் மல்யுத்த வீரர் யார்?

A. Pinki Rani (பிங்கி இராணி)

B. Kavita Devi (கவிதா தேவி)



C. Sakshi Malik (சாக்ஷி மாலிக்)

D. Geeta Phogat (கீதா போகத்)

விடை : B. Kavita Devi (கவிதா தேவி)

இந்தியாவைச்சேர்ந்த முன்னாள் பளுதூக்கும் வீராங்கனையும், தெற்காசிய விளையாட்டுகளில் தங்கப்பதக்கம் வென்ற வெற்றியாளருமான கவிதா தேவி, World Wrestling Entertainment (WWE) போட்டியில் பங்கேற்கும் முதல் இந்திய பெண் மல்யுத்த வீரராகிறார். 2017 ஜூலை அன்று நடைபெறவுள்ள Mae Young Classic போட்டியில், இவர் முதன்முதலாக கலந்துகொள்கிறார். போட்டியில் பங்கேற்கும் 32 போட்டியாளர்களில் இவரும் ஒருவராவார். புளோரிடாவின் Orlando-விலுள்ள Full Sail Live-ல், ஜூலை 13-14 அன்று இப்போட்டி நடைபெறவுள்ளது.

6. உலகின் மிகச்சிறிய செயற்கைக்கோளான "Kalamsat"-ஐ, NASA வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது. இந்த செயற்கைக்கோளை வடிவமைத்த இந்திய இளைஞர் யார்?



A. Shawna Pandya

B. Raja Chari

C. Rifath Sharook

D. Ashish Yadav

விடை : C. Rifath Sharook

இந்திய இளைஞரான Rifath Sharook-கால் வடிவமைக்கப்பட்ட உலகின் மிகச்சிறிய மற்றும் இலேசான எடைகொண்ட செயற்கைக்கோளான "Kalamsat"-ஐ National Aeronautics and Space Administration (NASA), 2017 ஜூன் 23 அன்று, Wallops தீவிலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. முன்னாள் குடியரசுத்தலைவரான APJ அப்துல் கலாம் ஐயாவின் நினைவாக, இச்செயற்கைக்கோளுக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. தமிழக மாணவரான Rifath Sharook, தனது ஆறு குழு உறுப்பினர்களுடன் இணைந்து இச்செயற்கைக்கோளை கண்டுபிடித்துள்ளார். சுமார் 64 கிராம் எடையுள்ள

இந்த சின்னஞ்சிறு செயற்கைக்கோள், கார்பன் இழை பாலிமரைக்கொண்டு முழுக்க முழுக்க 3D-அச்சுப்பொறியில் (3D-Printer) செய்யப்பட்டுள்ளது. இது விண்வெளியில் கதிர்வீச்சை அளவிடக்கூடிய ஒரு நானோ Geiger Muller கருவியை கொண்டிருக்கும். விண்வெளியில் 240 (4 மணிநேரம்) நிமிடங்கள் பணிமேற்கொள்ளும் வகையிலும் விண்வெளியில் ஒரு நுண்ணிய ஈர்ப்பு சூழலில் (Micro-gravity) 12 நிமிடங்கள் வரை செயல்படும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், NASA-வால் தனது பரிசோதனையை செய்த முதல் இந்தியர் என்ற பெருமையை Rifath Sharook பெறுகிறார்.

**7. 2017 International Federation of Sport Climbing (IFSC) உலகக்கோப்பை போட்டியை நடத்திய இந்திய மாநிலம் எது?**

A. அசாம்

B. மகாராஷ்டிரா

C. குஜராத்

D. உத்தரப்பிரதேசம்




விடை : B. மகாராஷ்டிரா

2017 ஜூன் 23-25 வரை மகாராஷ்டிராவின் நவி மும்பையிலுள்ள CIDCO கண்காட்சி மையத்தில், 6வது International Federation of Sport Climbing (IFSC)-ன் உலகக்கோப்பை போட்டி நடைபெற்றது. இந்தியாவின் திறமையான வீரர்களுட்பட உலகெங்கிலுமிருந்து 150-க்கும் மேற்பட்ட தடகள வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொண்டார்கள். இப்போட்டியை மகாராஷ்டிராவின் City Industrial Development Corporation (CIDCO) நடத்தியது. இத்தாலியைச்சார்ந்த IFSC-ல் ஐந்து கண்டங்களைச்சேர்ந்த 86 உறுப்பினர்கள் உள்ளனர்.

**8. மோசமான கடன்களுக்கு விரைவான தீர்வுகளை வழங்கும், ரிசர்வ் வங்கியின் மறுசீரமைக்கப்பட்ட மேற்பார்வைக்குழுவின் (Oversight Committee) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A. Pradeep Kumar

B. Janki Ballabh

C. M.B.N. Rao

**D. Y.M. Deosthalee**

விடை : **A. Pradeep Kumar**

இந்திய ரிசர்வ் வங்கி **(Reserve Bank of India)** சமீபத்தில் வங்கித்துறையில் மோசமான கடன்களுக்கு விரைவான தீர்வுகளை வழங்க, மேற்பார்வைக்குழுவின் **(Oversight Committee)** உறுப்பினர்களை 2-லிருந்து 5 ஆக விரிவுபடுத்தியுள்ளது. **M.B.N. Rao, Y.M. Deosthalee** மற்றும் **S. Raman** ஆகியோர் இக்குழுவின் மூன்று புதிய உறுப்பினர்களாவார்கள். மறுசீரமைக்கப்பட்ட கட்டமைப்பின் படி, இந்த ஐந்து உறுப்பினர்களும் குழுத்தலைவரின் வழிகாட்டுதல் மூலம், வங்கிகளால் தாக்கல் செய்யப்பட்ட மறுசீரமைப்பு வழக்குகளை, பல்வேறு அமர்வுகளின் மூலம் தீர்வுகாணுவார்கள். **OC**-ன் தலைவராக பிரதீப் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய வங்கியின் **S4A (Scheme for Sustainable Structuring of Stressed Assets)**-ன் படி, மறுசீரமைப்பு வழக்குகளுக்கு தீர்வுகாண்பதும், **500** கோடிக்கும் மேல் கடன்கள் வழங்கப்பட்ட அழுத்தம் நிறைந்த வழக்குகளுக்கு தீர்வுகாண்பதும், விரிவுபடுத்தப்பட்ட இக்குழுவின் பொறுப்பாகும்.

**9. Assam State Public Finance Institutional Reforms (ASPIRe)** திட்டத்திற்காக எவ்வளவுக்கான கடனுதவியை உலக வங்கி வழங்கியுள்ளது?

**A. $54** மில்லியன் டாலர்கள்
**B. $44** மில்லியன் டாலர்கள்
**C. $64** மில்லியன் டாலர்கள்
**D. $84** மில்லியன் டாலர்கள்




விடை : **B. $44 மில்லியன் டாலர்கள்**

**Assam State Public Finance Institutional Reforms (ASPIRe)** திட்டத்திற்காக உலக வங்கி **$44** மில்லியன் டாலருக்கான கடனுதவியை வழங்கியுள்ளது. **ASPIRe** திட்டம், நிறுவன ரீதியான சீர்திருத்தங்களான பொது நிதி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்துவது, செலவினங்கள் மற்றும் வருவாய் தகவல் அமைப்புகளை வலுப்படுத்துவது, திட்ட மேலாண்மை, கண்காணிப்பு மற்றும்

மதிப்பீடு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகிய மூன்று முக்கியக்கூறுகளை அடிப்படையாகக்கொண்டது. இத்திட்டத்தின் நோக்கம் அசாம் மாநிலத்தின் வரி நிர்வாகம், வரவு செலவுத்திட்டம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை முன்கூட்டியே கணிப்பது மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதாகும். இந்தத்திட்டம் அடுத்த 5 ஆண்டுகளில் அதாவது, 2022 மார்ச் 31-ல் நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**10. 2017 சாகித்திய அகாடமி யுவ புரஸ்கார் விருதினை ஆங்கில மொழிக்காக வென்றவர் யார்?**

**A. Ram Mori**

**B. Pratim Baruah**

**C. Manu S Pillai**

**D. Shamik Ghosh**



**விடை : C. Manu S Pillai**

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கடைசி அரசியின் சுயசரிதையைக்கூறும் **"The Ivory Throne - Chronicles of the House of Travancore"** நூலின் ஆசிரியரான **Manu S Pillai, 2017**-க்கான ஆங்கில மொழிக்கான சாகித்திய அகாடமி யுவ புரஸ்கார் விருதினை வென்றுள்ளார். இந்நூல் 1924 முதல் 1931 வரை திருவிதாங்கூரை ஆட்சிசெய்த மகாராணி சேது லட்சுமி பாயின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியை கூறுகிறது. இந்நூல், அரச குடும்பத்தின் அறிந்திராத வாழ்க்கைமுறை மற்றும் அரிய பழக்கவழக்கங்களை விவாதிக்கிறது. மற்ற இந்திய அரச குடும்பங்களில் அல்லாத, அரசரின் சகோதரிகளின் மகனே அடுத்த அரசராக இருக்கும் இந்த வினோதப்பழக்கம் பற்றியும் இந்நூல் தெரிவிக்கிறது. மேலும், அரசியாக அரசரின் மனைவி அல்லாமல், அரசரின் தாயோ, உடன்பிறந்தாளோ, அல்லது அரச குடும்பத்து மருமகளோ அரசியாக இருக்கும் பழக்கம் பற்றியும் இந்நூல் கூறுகிறது. 35 வயதிற்கும் குறைவான எழுத்தாளரின் முதல் நூல் அல்லது சிறந்த நூலுக்காக, ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது, ரூ.50,000 ரொக்கப்பரிசையும் ஒரு செப்புப் பாராட்டுப்பட்டயத்தையும் உள்ளடக்கியது.

## 2017 June 25 & 26

**1. உடற்கட்டழகு (Body Building) சாம்பியன்ஷிப் போட்டியில், 2017-க்கான உலக அழகிப்பட்டத்தை வென்றவர் யார்?**



**A. Niharika Gupta**

**B. Bhumika Sharma**

**C. Pinki More**

**D. Teena Kumari**

விடை : **B. Bhumika Sharma**

இத்தாலியின் வெனிசில் நடைபெற்ற, **2017-க்கான** உடற்கட்டழகு **(Body Building)** சாம்பியன்ஷிப் போட்டியில் உலக அழகிப்பட்டத்தை, தனிப்பட்ட தோற்றம் **(Individual posing)**, உடல் தோற்றம் **(Body posing)** ஆகிய பிரிவுகளில் அதிக புள்ளிகளைப்பெற்று உத்தரகாண்ட்டைச்சேர்ந்த **Bhumika Sharma** வென்றுள்ளார். இப்போட்டியில் பல்வேறு நாடுகளைச்சேர்ந்த **50** போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். தற்சமயம் இவர், **UK-வின் National Amateur Body-Builders' Association (NABBA)-னால் 2017** டிசம்பரில் நடத்தப்படும், பிரபஞ்ச அழகிப்பட்டத்துக்கான போட்டிக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்நிகழ்வில், **60** நாடுகளைச்சேர்ந்த உடற்கட்டழகு போட்டியாளர்கள் **(Body builders) Miss** மற்றும் **Mr Universe** பட்டத்திற்காக போட்டியிடுவார்கள்.

**2. அண்மையில் காலமான Desh Bandhu Gupta, எந்த மருந்து நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவராவார்?**



**A. Lupin**

**B. Cipla**

**C. Sun Pharma**

**D. Glenmark**

விடை : **A. Lupin**

**2017** ஜூன் **25** அன்று, மருந்து நிறுவனமான **Lupin Ltd-ன்** தலைவரும்

நிறுவனருமான Desh Bandhu Gupta, மும்பையில் காலமானார். இவர் இந்நிறுவனத்தை 1968-ல் உருவாக்கினார். தற்சமயம் இந்நிறுவனத்தின் கிளைகள் 100-க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் உள்ளது. இன்று, உலக மருந்து சந்தையில் இந்நிறுவனம் 4வது இடத்திலுள்ளது.

**3. 2017 Femina Miss India World பட்டத்தை வென்ற Manushi Chhillar, எந்த மாநிலத்தைச்சேர்ந்தவராவார்?**



A. கோவா

B. ஜம்மு மற்றும் காஷ்மீர் (J&K)

C. அரியானா

D. பீகார்

விடை : C. அரியானா

2017 ஜூன் 25 அன்று மகாராஷ்ட்ராவின் மும்பையிலுள்ள Yash Raj Studios-ல் நடைபெற்ற 54வது Femina Miss India World-2017 போட்டியில், அரியானா மாநிலத்தைச்சேர்ந்த Manushi Chhillar வென்றுள்ளார். ஜம்மு மற்றும் காஷ்மீரைச்சேர்ந்த Sana Dua, “Femina Miss India Earth 2017” பட்டத்தையும், பீகாரைச்சேர்ந்த Priyanka Kumari, “Femina Miss India Grand 2017” பட்டத்தையும் வென்றுள்ளனர். இதுதவிர Vinali Bhatnagar, “Miss Active” கிரீடத்தையும், Vamika Nidhi, சிறந்த உடற்கட்டழகுக்காக வழங்கப்படும் சிறப்பு விருதான “Body Beautiful” விருதையும் பெற்றுள்ளனர்.

**4. தேசிய கல்விக்கொள்கை (National Education Policy (NEP)) ஆவண வரைவை முழுமையாக கட்டமைக்க எந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது?**



A. TV Kattimani (கட்டிமணி) குழு

B. T S R Subramanian (சுப்பிரமணியன்) குழு

C. KJ Alphonse (அல்போன்ஸ்) குழு

D. K Kasturirangan (கஸ்தூரி இரங்கன்) குழு

விடை : D. K Kasturirangan (கஸ்தூரி இரங்கன்) குழு

புதிய தேசிய கல்விக்கொள்கையை உருவாக்குவதற்காக மத்திய மனித

வள மேம்பாட்டு அமைச்சகம், ISRO-வின் முன்னாள் தலைவரான K.Kasturirangan தலைமையாக ஒன்பது உறுப்பினர்களைக்கொண்ட குழுவொன்றை அமைத்துள்ளது. விவசாய அறிவியல் மற்றும் மேலாண்மை துறைகளில் பரந்த அனுபவங்கொண்ட Ram Shanker Kureel மற்றும் முன்னாள் IAS அதிகாரியான KJ Alphonse ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள். பல்வேறு மாநிலங்களைச்சேர்ந்த கல்வித் துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களே இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**5. 2017 சர்வதேச மாலுமிகள் நாளுக்கான (International Day of Seafarer) மையக்கருத்து என்ன?**




A. Seafarers: Faces of the Sea

B. Seafarers save me

C. Seafarers brought me

D. Seafarers Matter

விடை : D. Seafarers Matter

உலகிலுள்ள 90% அதிகமான சரக்குகளை உலகம் முழுமைக்கும் கொண்டுசெல்லும் பணியை செய்யும் மாலுமி சமுதாயத்திற்கு நன்றிகூறும் விதமாகவும், உலகப்பொருளாதாரத்தில் அவர்களின் அளப்பரிய பங்களிப்பை போற்றும் விதமாகவும் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 25 அன்று சர்வதேச மாலுமிகள் நாள் கொண்டாடப்படுகிறது. 2017 சர்வதேச மாலுமிகள் நாளுக்கான (International Day of Seafarer) மையக்கருத்து "Seafarers Matter" ஆகும்.

**6. சர்வதேச ஷாங்காய் திரைப்பட விழாவில் (Shanghai International Film Festival (SIFF)), சிறந்த அதிரடி திரைப்படத்திற்கான (Best Action Movie) விருதை வென்ற இந்தியத்திரைப்படம் எது?**

A. Sultan

B. Dangal

C. Rustom

D. Bahubali: The Conclusion



விடை : **A. Sultan (சுல்தான்)**

சர்வதேச ஷாங்காய் திரைப்பட விழாவில் **(Shanghai International Film Festival (SIFF))**, சிறந்த அதிரடி திரைப்படத்திற்கான **(Best Action Movie)** விருதை இந்தியத்திரைப்படம் **"Sultan"** வென்றுள்ளது. **Ali Aabbas Zafar** இயக்கிய இத்திரைப்படம், இந்திய மல்யுத்தத்தின் சக்தியைப்பற்றி கூறுகிறது. இதன் மூலம், **Jackie Chan Action Movie** பிரிவில் விருது பெற்ற முதல் இந்திப்படமாக **"Sultan"** உள்ளது. இது சீனா, ஆசியா பசிபிக் நாடுகளிலிருக்கும் சிறந்த திரை நட்சத்திரங்களின் சிறந்த அதிரடிப்படங்களை தேர்ந்தெடுத்து, அவற்றுக்கு வழங்கும் விருதாகும்.

**7. 2017 (International Day against Drug Abuse and Illicit Trafficking) சர்வதேச போதைப்பொருள் மோசடி மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான நாளின் மையக்கருத்து என்ன?**

**A. Listen Peace**

**B. Listen First**

**C. Listen Yourself**

**D. Listen Nature**




விடை : **B. Listen First**

போதைப்பொருள் இல்லாத வலுவான சர்வதேச சமுதாயத்தை உருவாக்குவதை இலட்சியமாகக்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 26 அன்று சர்வதேச போதைப்பொருள் மோசடி மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கெதிரான நாள், ஐ. நா-வால் அனுசரிக்கப்படுகிறது. சட்டவிரோதமான போதைப்பொருள்களால் இச்சமூகத்திற்கு ஏற்படும் முக்கியப்பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். 2017-ம் ஆண்டில் வரும் இந்நாளுக்கான மையக்கருத்து, **"Listen First - Listening to children and youth is the first step to help them grow healthy and safe"** ஆகும். இது அறிவியல் ரீதியான போதைப்பொருளை தடுக்கும் ஆதரவினை அதிகரிப்பதற்கான ஒரு முயற்சியாகும். மேலும் இது குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும்

அவர்கள் சார்ந்துள்ள சமூகங்களில் ஒரு நல்வாழ்வினை ஏற்படுத்த வழிவகுக்கும்.

**8. Australian Open Super Series Badminton கோப்பையை வென்ற இந்திய வீரர் யார்?**



**A. Chetan Anand**

**B. HS Prannoy**


**C. Kidambi Srikanth**

**D. Mulyo Handayo**

விடை : **C. Kidambi Srikanth**

2017 ஜூன் 25 அன்று சிட்னியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், முன்னாள் உலக சாம்பியனும், ரியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவருமான **Chen Long**-ஐ 22-20, 21-16 என்ற கணக்கில் தோற்கடித்து இந்திய வீரரான **Kidambi Srikanth, Australian Open Super Series Badminton** கோப்பையை வென்றுள்ளார். இதன்மூலம் சிங்கப்பூர், இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற மூன்று சூப்பர் சீரிஸ் இறுதிப்போட்டிகளிலும் வெற்றிபெற்ற உலகில் ஐந்தாவது வீரர் இவராகிறார்.

**9. கனடாவின் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் சீக்கிய பெண் யார்?**



**A. Palbinder Kaur Shergill**

**B. Gulab Kaur**

**C. Harita Kaur Shergill**

**D. Sukhpreet Kaur**

விடை : **A. Palbinder Kaur Shergill**

இந்திய வம்சாவளியைச்சேர்ந்த சீக்கிய மனித உரிமைகள் வழக்குரைஞரான **Palbinder Kaur Shergill**, **New Westminster**-ல் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவின் உச்ச நீதிமன்றத்திற்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம், கனடாவின் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் சீக்கியப்பெண் எனும் பெருமை இவரைச்சேர்ந்துள்ளது. இதற்குமுன், மே 31 வரை நீதிபதி EA Arnold-Bailey அவர்கள் இப்பதவியிலிருந்தார். பள்ளிகளில் சீக்கிய மாணவர்கள் டர்பன் அணிவது குறித்த வழக்கு முதல் பல வழக்குகளை Shergill அவர்கள் கனடாவின் உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்.

**10. ISSF Junior World Rifle/Pistol சாம்பியன்ஷிப் போட்டியில், மகளிருக்கான 10m Air Pistol பிரிவில் தங்கம் வென்ற இந்திய வீராங்கனை யார்?**



A. Nandini SIngh

B. Yashaswini Singh Deswal

C. Anjali Bhagwat

D. Apurvi Chandela

விடை : **B. Yashaswini Singh Deswal**

ஜெர்மனியின் Suhl-லிலுள்ள International Shooting Sport Federation (ISSF)-ல் நடைபெற்ற Junior World Rifle/Pistol சாம்பியன்ஷிப் போட்டியில், மகளிருக்கான 10m Air Pistol பிரிவில், சண்டிகாரைச்சேர்ந்த Yashaswini Singh Deswal தங்கம் வென்றுள்ளார். இதைத்தவிர, ஆடவருக்கான 25m Standard Pistol சாம்பியன்ஷிப் போட்டியில், Anish Bhanwala தங்கம் வென்றுள்ளார்.

---

## 2017 June 27

**1. ருமேனியாவின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A. Liviu Dragnea

B. Klaus Iohannis

C. Sorin Grindeanu

D. Mihai Tudose

விடை : **D. Mihai Tudose**

முன்னாள் பொருளாதார அமைச்சரான Mihai Tudose, ருமேனியாவின் புதிய

பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். 2017 ஜூன் 29 அன்று இவர் பதவி ஏற்றுக்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது. இவருக்கு முன், Sorin Grindeanu இப்பதவியிலிருந்தார்.


2. 4,900 கி.மீ., நீளமுடைய Race Across America (RAAM) பந்தயத்தை, ஒற்றையர் பிரிவில் முடித்த முதல் இந்தியர் யார்?

A. K K Sengar

B. Nishant Sharma

C. Srinivas Gokulnath

D. Amit Samarth



விடை : C. Srinivas Gokulnath

4,900 கி.மீ., நீளமுடைய Race Across America (RAAM) என்பது உலகின் மிகக்கடுமையான மிதிவண்டிப் பந்தயமாகும். இதில் 18-59 வயதுக்குட்பட்டோர் பிரிவில் மகாராஷ்டிராவின் Srinivas Gokulnath, ஒற்றையர் பிரிவில் கலந்துகொண்டு வெற்றிகரமாக முடித்துள்ளார். இதன் மூலம் 11 நாட்கள், 18 மணிநேரம் 45 நிமிடங்களில் இந்தப்பந்தயத்தை முடித்த முதல் இந்தியர் என்ற வரலாற்றுச்சாதனையை இவர் புரிந்துள்ளார். இவர் மட்டுமல்லாமல், நாக்பூரைச்சேர்ந்த Dr.Amit Samarth அவர்கள் அமெரிக்க கிழக்குக்கடற்கரையின் Annapolis-லிலுள்ள எல்லைக்கோட்டை தாண்டினார். பந்தயத்தை முடித்த 9 மிதிவண்டிப்பந்தய வீரர்களில் Gokulnath 7வது இடத்தையும், Samarth 8வது இடத்தையும் பிடித்துள்ளனர். இப்போட்டியின் வெற்றியாளர், Christoph Strasser ஆவார். இது தொடர்ச்சியாக கடந்து முடிக்கப்பட வேண்டிய ஒரு பந்தயமாகும். ஒரு நாளுக்கு குறைந்தது 2 மணிநேர ஓய்வெடுத்துக்கொள்ள அனுமதியுண்டு. மேலும், 12 நாட்களுக்குள் இந்தப்பந்தயம் முடிக்கப்படவேண்டும். எனில், ஒரு நாளைக்கு 400 கி.மீ., பயணத்தை முடிப்பது அவசியமாகும்.

3. “Skill India” திட்டத்துக்காக, உலக வங்கி எவ்வளவுக்கான கடனை வழங்க சம்மதித்துள்ளது?

A. $350 மில்லியன் டாலர்கள்

B. $250 மில்லியன் டாலர்கள்

C. $450 மில்லியன் டாலர்கள்

D. $150 மில்லியன் டாலர்கள்

விடை : B. $250 மில்லியன் டாலர்கள்

உலக வங்கியானது "Skill India" திட்டத்துக்காக $250 மில்லியன் டாலர்கள் கடனாக வழங்க சம்மதித்துள்ளது. இந்திய இளைஞர்களை மீள் திறனுருவாக்கம் (Reskilling) செய்வதற்கு இக்கடன் தொகை பயன்படுத்தப்படும். இத்திறன் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், 15-59 வயதிற்குட்பட்ட, குறைந்த வேலைவாய்ப்பற்ற அல்லது வேலை இல்லாதவர்களுக்கு திறன்பயிற்சி வழங்கப்படும். இது ஒவ்வோர் ஆண்டும், புதிதாய் தொழிலாளர்களாக வரும், 15-29 வயதுக்குட்பட்ட 1.2 கோடி இளைஞர்களை உள்ளடக்கியதாகும். இந்தத்திட்டம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்குவதோடு அவர்களின் திறனையும் அதிகரிக்கிறது.


4. இந்திய சர்வதேச மையத்தின் (India International Centre) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A. NN Vohra

B. Soli Sorabjee

C. Joseph Stein

D. S K Sinha



விடை : A. NN Vohra

ஜம்மு மற்றும் காஷ்மீரின் ஆளுநரான Narinder Nath Vohra, இந்திய சர்வதேச மையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது நாட்டின் முக்கிய கலாச்சார நிறுவனங்களில் ஒன்றாகும். இவருக்குமுன் Soli Sorabjee, இப்பதவியிலிருந்தார். இந்திய சர்வதேச மையம் என்பது புது டெல்லியிலுள்ள நன்கறியப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற அமைப்பாகும்.

5. "The Emergency-Indian Democracy's Darkest Hour" எனும் நூலின் ஆசிரியர் யார்?

A. சூர்ய பிரகாஷ்
B. உமா வாசுதேவ்
C. ஜனார்தன் தாக்கூர்
D. உமா ஸ்ரீவத்சன்



விடை : A. சூர்ய பிரகாஷ்

**"The Emergency-Indian Democracy's Darkest Hour"** எனும் நூலின் ஆசிரியர், **Prasar Bharati**-ன் தலைவரான சூர்ய பிரகாஷ் ஆவார். அண்மையில், குஜராத்தின் அகமதாபாத்தில் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சரான வெங்கையா நாயுடுவால் இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நூலின் நோக்கம், 1970-களில் நாட்டில் ஜனநாயகத்தை மறுசீரமைப்பதற்காக போராடிய அனைவரையும் கௌரவிப்பதாகும்.

6. 2017 Ulaanbaatar கோப்பைக்கான குத்துச்சண்டை போட்டியில், 60 கிலோ பிரிவில் தங்கம் வென்றவர் யார்?

A. Nikhil Vasudev
B. Ankush Dahiya
C. L Devendro Singh
D. J J Chauhan



விடை : B. Ankush Dahiya

இந்தியாவைச்சேர்ந்த **Ankush Dahiya (60 Kg)**, மங்கோலியாவில் நடைபெற்ற போட்டியில், தனது பிரிவில் கொரியாவின் **Man Choe Chol**-ஐ தோற்கடித்ததன் மூலம், **2017 Ulaanbaatar** கோப்பைக்கான குத்துச்சண்டை போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இதனிடையே, மங்கோலியாவில் நடந்த குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Devendro Singh (52kg)**, வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார்.

7. எந்த நகரம், 2017 Whatashort Independent சர்வதேச திரைப்பட விழாவை (Whatashort Independent International Film Festival) நடத்தவுள்ளது?

A. புனே
B. கொல்கத்தா
C. புது டெல்லி
D. கொச்சி




விடை : C. புது டெல்லி

உலகளாவிய குறும்படங்களை ஊக்குவிக்கும் விதமாக, **2017** ஜூலை **8-9** அன்று, புது டெல்லியிலுள்ள **Instituto Cervantes**-ல், **2017**-க்கான **Whatashort Independent** சர்வதேச திரைப்பட விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் **34**-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து **400**-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் பங்கேற்பதுடன் **45**-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படுகிறது. இவ்விழாவின் நோக்கம், குறும்பட தயாரிப்பாளர்களையும் அவர்களது படைப்புகளையும் மேம்படுத்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதாகும்.

**8. 2017 Gerry Weber ஓபன் டென்னிஸ் போட்டியை வென்றவர் யார்?**

**A. Alexander Zverev**
**B. Novak Djokovic**
**C. Andy Murray**
**D. Roger Federer**




விடை : **D. Roger Federer (ரோஜர் பெடரர்)**

ஜெர்மனியின் **Halle**-யிலுள்ள **Gerry Weber** அரங்கில் நடைபெற்ற **Gerry Weber** ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில், **Alexander Zverev**-ஐ **6-1 6-3** என்ற செட் கணக்கில் சுவிசின் தொழில்முறை டென்னிஸ் விளையாட்டு வீரரான **Roger Federer** தோற்கடித்தார். இவ்வெற்றியின் மூலம், **Federer** தனது **92**வது பட்டத்தை வென்றுள்ளார்.

**9. எந்த நாட்டில், உலக டேக்வாண்டோ கூட்டமைப்பின் (World Taekwondo Federation) தலைமையகம் அமைந்துள்ளது?**

A. சீனா

B. தென் கொரியா

C. ஜப்பான்

D. ஜெர்மனி

விடை : B. தென் கொரியா

சுருக்கமாக “WTF” என்று அழைக்கும்போது வந்த "எதிர்மறை உச்சரிப்புகள்" காரணமாக அண்மையில், World Taekwondo Federation (WTF) அதன் பெயரை World Taekwondo (WT) என மாற்றிக்கொண்டுள்ளது. இப்பெயர் மாற்றம் 2017 World Taekwondo சாம்பியன்ஷிப் போட்டி தொடங்கும் முன் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 23வது World Taekwondo சாம்பியன்ஷிப் போட்டி 2017 ஜூன் 24 முதல் ஜூன் 30 வரை தென் கொரியாவின் Muju-வில் தொடங்கியது. World Taekwondo Federation (WTF)-ன் தலைமையகம் தென் கொரியாவின் Seoul-ல் அமைந்துள்ளது.

10. எந்த இந்திய விளையாட்டு வீராங்கனைக்கு, Sports Journalists Federation of India (SJFI) வழங்கும் “Best Sportsperson of the Year” விருது வழங்கப்படவுள்ளது?

A. Jitu Rai (ஜீது ராய்)

B. சானியா மிர்சா

C. விராட் கோலி

D. P V சிந்து



விடை : D. P V சிந்து

பூப்பந்தாட்ட (Badminton) வீராங்கனையும், ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவருமான P V சிந்துவுக்கு, Sports Journalists Federation of India (SJFI) வழங்கும் “Best Sportsperson of the Year” விருது வழங்கப்படவுள்ளது. 2016 டிசம்பரில் லக்னோவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், பெல்ஜியத்தை 2-1 என்ற செட் கணக்கில் வென்றதன் மூலம் ஜூனியர் உலகக்கோப்பையை வென்ற இந்திய ஜூனியர் ஹாக்கி அணிக்கு, “The Best Team of the Year” விருது கிடைத்துள்ளது. இவ்விரு விருதுகளும் 2017 செப்டம்பரில் நடைபெறும் SJFI-ன் 40வது மாநாட்டில் வழங்கப்படும்.

2017 June 28

1. எந்த இந்திய விளையாட்டு வீரருக்கு, East Bengal கால்பந்து கழகத்தின் மிகவுயரிய விருதான "Bharat Gaurav" வழங்கப்படவுள்ளது?

A. தன்ராஜ் பிள்ளை

B. மேரி கோம்

C. Pusarla வெங்கட சிந்து

D. சச்சின் டெண்டுல்கர்



விடை : A. தன்ராஜ் பிள்ளை

East Bengal கால்பந்து கழகம் நிறுவப்பட்ட நாளான ஆகஸ்ட் 1 அன்று தங்கள் கழகத்தின் மிகவுயரிய விருதான "Bharat Gaurav"-ஐ, இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் அணித்தலைவரான தன்ராஜ் பிள்ளைக்கு வழங்கவுள்ளது. தன்ராஜ் தனது 15 ஆண்டுகால அணித்தலைவர் வாழ்வில், 4 ஒலிம்பிக் போட்டி, உலகக்கோப்பை, சாம்பியன் கோப்பைகள் மற்றும் ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் இந்திய அணிகளில் திறம்பட விளையாடியுள்ளார். இவர் இந்தியாவுக்காக மொத்தம் 339 போட்டிகளில் விளையாடி 170 கோல்களை அடித்துள்ளார். 1998-ல் இந்தியாவை ஆசிய விளையாட்டுப்போட்டிகளுக்கு இட்டுச்சென்று பெருமைசேர்த்த இவர், 2003-ல் ஆசிய கோப்பையையும் வென்று கொடுத்தார். 1999-2000 ஆண்டுகளில் அவரது சிறந்த விளையாட்டிற்காக ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது பெற்றார். பின்னர் 2000-ம் ஆண்டில் தாமரைத்திரு (பத்மஸ்ரீ) மற்றும் சிறந்த குடிமகனுக்கான விருதையும் பெற்றுள்ளார்.

2. 2017-ம் ஆண்டுக்கான சமூக முன்னேற்ற குறியீட்டில் (Social Progress Index), இந்தியாவின் தரநிலை என்ன?

A. 65வது

B. 88வது

C. 93வது

D. 103வது




விடை : C. 93வது

2017-ம் ஆண்டுக்கான சமூக முன்னேற்ற குறியீட்டில் (Social Progress Index), 128 நாடுகளில் இந்தியா 93வது இடத்திலுள்ளது. டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே மற்றும் சுவிச்சர்லாந்து ஆகிய நாடுகள் இப்பட்டியலில் முதலிடத்திலுள்ளன. SPI என்பது சமூக முன்னேற்றத்தின் மூன்று பரிமாணங்களான (1) அடிப்படை மனிதத்தேவைகள், (2) நல்வாழ்வை நிறுவுதல் மற்றும் (3) வாய்ப்புகள் ஆகியவற்றுக்கான சமூக மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் ஒட்டுமொத்த குறியீடாகும். 2017-ன் SPI ஆனது 128 நாடுகளிலிருந்து 50 காரணிகளின் தரவுகளைக்கொண்டுள்ளது. இந்தக் குறியீடானது இலாப நோக்கற்ற Social Progress Imperative-ஆல் வெளியிடப்படுகிறது. மேலும் இது அமர்தியா சென், Douglass North மற்றும் Joseph Stiglitz ஆகியோரின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டது.


3. எந்தத்தேதியில், முதல் சர்வதேச 2017-MSME நாள் கொண்டாடப்பட்டது?

A. ஜூன் 25

B. ஜூன் 26

C. ஜூன் 27

D. ஜூன் 28




விடை : C. ஜூன் 27

2017 ஜூன் 27 அன்று “Small business - big impact” எனும் மையக்கருத்துடன், சர்வதேச வர்த்தக மையம் (International Trade Centre), முதல் சர்வதேச 2017-MSME நாளை கொண்டாடியது. இந்நாளின் நோக்கம் பொருளாதார வளர்ச்சி மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கு MSME-களின் முக்கியத்துவத்தைப்பற்றிய பொதுவான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். Micro, Small and Medium Enterprises (MSME) நாள், நிறுவனங்களின் வாழ்வாதாரங்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்கள் ஆகியவற்றிற்கு உலகளாவிய MSME-களின் வலுவான பங்களிப்பு மற்றும் அவர்களின் வெற்றிக்காக MSME-க்களை ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகிறது. ITC, ஐ. நா மற்றும் WTO-வின் கூட்டு நிறுவனமாகும். இது வளரும் நாடுகளில் MSME-க்களை ஆதரிப்பதோடு, நிலையான மற்றும் உள்ளடக்கிய வர்த்தகத்திற்கான மாற்றீட்டுப் பொருளாதாரத்தையும் ஆதரிக்கிறது.

4. மாநிலத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக, உத்தரப்பிரதேச அரசு ADB வங்கியுடன் எவ்வளவுக்கான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

A. ₹2550 கோடி

B. ₹2750 கோடி

C. ₹1150 கோடி

D. ₹1950 கோடி



விடை : D. ₹1950 கோடி

மாநிலத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக, உத்தரப்பிரதேச அரசு Asian Development Bank (ADB) உடன் ₹1950 கோடிக்கான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ₹1950 கோடியில், 70% தொகையை ADB கடனாகவும் மீதமுள்ள 30% தொகையான ₹832 கோடியை உத்தரப்பிரதேச அரசும் வழங்கும். இத்திட்டம் 2017-2024 வரை நடைபெறும். இது 12 மாவட்டங்களிலுள்ள 430 கி.மீ., சாலையை மேம்படுத்தும்.

5. லோதா குழுவில் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் உள்ள சர்ச்சைக்குரிய சிக்கல்களை ஆய்வுசெய்ய, BCCI எந்தக்குழுவை அமைத்துள்ளது?

A. அமிதாப் சௌத்ரி குழு

B. T.C. மேத்யூ குழு

C. ராஜீவ் சுக்லா குழு

D. C.K. கண்ணா (Khanna) குழு



விடை : C. ராஜீவ் சுக்லா குழு

மாநில அளவில் எதிர்க்கப்படும் லோதா குழுவில் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் உள்ள சர்ச்சைக்குரிய சிக்கல்களை ஆய்வு செய்ய 7 உறுப்பினர்களைக்கொண்ட சிறப்புக்குழுவை Board of Control for Cricket in India (BCCI) அமைத்துள்ளது. BCCI-ன் பொதுச்சபைக்கு வழங்கிய தீர்ப்பை உச்சநீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்கும் முன் சில முக்கியமான சிக்கல்களை

அடையாளம் காண்பதுதான் இக்குழுமத்தின் முக்கியப்பணியாகும். இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் சவுரவ் கங்குலி, T.C. மேத்யூ (கேரள கிரிக்கெட்), Naba Bhattacharjee (வட கிழக்கின் பிரதிநிதி), Jay Shah (குஜராத் கிரிக்கெட் சங்கம்), BCCI-ன் பொருளாளர் அனிருத் சௌத்ரி மற்றும் BCCI-ன் செயலாளர் அமிதாப் சௌத்ரி ஆகியோர் இக்குழுவின் மற்ற உறுப்பினர்களாவார்கள்.

6. சர்வதேச பொருளாதார சங்கத்தின் (International Economic Association) புதிய தலைவர் யார்?



A. Kaushik Basu

B. Alaka Malwade


C. H R Khan

D. Raghuram Rajan

விடை : A. Kaushik Basu

இந்திய பொருளாதார நிபுணரான Kaushik Basu, 2017 ஜூன் 23 அன்று, 3 ஆண்டுகளுக்கு சர்வதேச பொருளாதார சங்கத்தின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். IEA என்பது 1950-ல் நிறுவப்பட்ட தொழில்சார் பொருளாதார அறிஞர்களுக்கான உலகப்பொருளாதார கொள்கை மற்றும் ஆராய்ச்சியை வடிவமைக்கும் ஒரு முக்கிய நிறுவனமாகும். இவர் 2012 முதல் 2016 வரை உலக வங்கியின் மூத்த துணைத்தலைவராகவும், 2009 முதல் 2012 வரை இந்திய அரசாங்கத்திற்கு தலைமைப்பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது இவர் Cornell பல்கலைக்கழகத்தில் சர்வதேச கல்விக்கான பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

7. முன்னாள் வீரரும், அதிகாரியுமான O.N Dhar, எந்த நகரத்தில் காலமானார்?



A. புது டெல்லி

B. லக்னோ

C. கொச்சி

D. கவுகாத்தி

விடை : A. புது டெல்லி

முன்னாள் வீரரும், அதிகாரியுமான O.N Dhar, புது டெல்லியில் காலமானார். காஷ்மீர் அமைதி இயக்கத்தின்போது, 1946-47-ல் ஷேக் முகமது அப்துல்லாவின் கைதுக்குப்பின் இவர் 13 மாதங்களுக்கு காவலில் வைக்கப்பட்டார். 1965 வரை ஜம்மு-காஷ்மீரில் பிரதமர்களாக இருந்த Sheikh Abdullah, Bakshi Ghulam Mohammed மற்றும் Mir Sadiq ஆகியோருடன் இவர் பணிபுரிந்துள்ளார். 1967 வரை ஜம்மு-காஷ்மீரின் முதலமைச்சர்கள், பிரதமர்களென்றே அழைக்கப்பட்டனர். இவர் தொடர்ச்சியாக மாநிலத்தின் முக்கிய செயலக நிலை பதவிகளை வகித்து வந்தார்.

8. எந்த நகரம், UNESCO-வின் 2019-உலக நூல்களின் தலைநகரமாக நியமிக்கப்பட்டுள்ளது?

A. வார்சா
B. புனே
C. சார்ஜா
D. ஏதென்ஸ்



விடை : C. சார்ஜா

La Haye-விலுள்ள International Federation of Library Associations (IFLA)-ன் தலைமையகத்தில், UNESCO-வின் பொது இயக்குநரான Irina Bokova அவர்களால், United Arab Emirates (UAE)-லிலுள்ள சார்ஜா நகரம் UNESCO-வின் 19வது உலக நூல்களின் தலைநகரமாக நியமிக்கப்பட்டது. உள்ளூர் மற்றும் பிராந்திய வெளியீடுகளுக்கு ஆதரவளிப்பது மற்றும் விரிவுபடுத்துவதில் முன்னோடியாக இருக்கும் எமிரேட்டை அங்கீகரிப்பதற்காகவும், கலாச்சார நடைமுறையாக படிப்பதை ஊக்கப்படுத்தியதற்காகவும், இந்த கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது. UAE-ல் ஒரு முறையான பள்ளியையும் நூலகத்தையும் நிறுவிய முதல் அமீரகம் சார்ஜாவாகும். மேலும், அமீரக எழுத்தாளர்கள் சங்கம், அமீரக வெளியீட்டாளர்கள் சங்கம் ஆகியவற்றை கொண்ட முதல் அமீரகமும் இதுவே. 2017-ல் Conakry-யும் 2018-ல் ஏதென்சும் நூல்களின் தலைநகரமாக இருந்தன.

9. 2018 தாமரை (பத்ம) விருதுகளுக்கான பரிந்துரைகளை மேற்கொள்ள, மகாராஷ்டிர அரசு எந்தக்குழுவை அமைத்துள்ளது?

A. Chandrakant Patil குழு

B. Ram Shinde குழு

C. Sudhir Mungantiwar குழு

D. Vinod Tawde குழு



விடை : B. Ram Shinde குழு

2018 தாமரை (பத்ம) விருதுகளுக்காக, மகாராஷ்டிரா மாநிலத்தின் சார்பாக இந்திய அரசுக்கு பெயர்களை பரிந்துரைக்க 11 பேர் கொண்ட குழுவை மகாராஷ்டிர அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் தலைவர், நீர் பாதுகாப்பு அமைச்சரான Ram Shinde ஆவார். கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல் மற்றும் பொறியியல், பொது விவகாரங்கள், பொதுத்துறை, வணிகம் மற்றும் தொழில் போன்ற பல்வேறு துறைகளின் சாதனையாளர்களை அங்கீகரிக்கும் விதமாக தாமரை (பத்ம) விருதுகள் வழங்கப்படுகின்றன.

10. எந்த மாநிலத்தில் Dudhwa தேசியப்பூங்கா அமைந்துள்ளது?

A. உத்தரப்பிரதேசம்

B. மத்தியப்பிரதேசம்

C. குஜராத்

D. இராஜஸ்தான்




விடை : A. உத்தரப்பிரதேசம்

இத்தேசியப்பூங்கா உத்தரப்பிரதேசத்தின் Terai-ல், 490 சதுர கி.மீ., பரப்பளவில் 190 சதுர கி.மீ., (73 சதுர மைல்)-ல் ஓர் இடைநிலை மண்டலத்துடன் (Buffer Zone) அமைந்துள்ளது. இங்கு சதுப்பு நில மான், சாம்பார் மான், குரைக்கும் மான், புள்ளிமான், புலி, இந்திய காண்டாமிருகம், சோம்பல் கரடி, தேன்வளைக்கரடி, குள்ளநரி, பூனை வகைகளும் 150 ஆண்டுகள் பழமைவாய்ந்த 70 அடி உயர மரங்கள் நிறைந்த காடுகளும் உள்ளன.

## 2017 June 29

**1. National Institute of Fashion Technology (NIFT)-ன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**A. Rajesh Shah**

**B. Poonam Mahajan**

**C. Jatinder V Sehgal**

**D. Sunil Sethi**

விடை : **A. Rajesh Shah**

**National Institute of Fashion Technology (NIFT)-ன்** ஆளுநர் குழுவின் புதிய தலைவராக **Rajesh V Shah** நியமிக்கப்பட்டுள்ளார். இவர் **2019** மார்ச் **31** வரை இப்பதவியிலிருப்பார். ஏற்கனவே இப்பதவியிலிருந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் **Chetan Chauhan,** உத்திரப்பிரதேச மாநிலத்தின் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவியேற்றதால் **Rajesh** இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

**2. இந்திய தேர்தல் ஆணையம் (Election Commission of India), எந்த சமூக ஊடகத்துடன் இணைந்து நாடு முழுவதும், "Voter Registration Reminder"- வாக்காளர் பதிவு நினைவூட்டலை தொடங்கவுள்ளது?**

**A. Twitter (டிவிட்டர்)**

**B. Facebook (ஃபேஸ்புக்)**

**C. Instagram (இன்ஸ்டாகிராம்)**

**D. YouTube (யூ டியூப்)**




விடை : **B. Facebook (ஃபேஸ்புக்)**

வாக்காளர் பட்டியலில் தங்களை பதிவுசெய்துகொள்வதை ஊக்கப்படுத்தும் விதமாக, இந்திய தேர்தல் ஆணையம் **(Election Commission of India)**, சமூக ஊடகமான **Facebook-**குடன் இணைந்து நாடு முழுவதும், **"Voter Registration Reminder"-** வாக்காளர் பதிவு நினைவூட்டலை **2017** ஜூலை **1** முதல் தொடங்கவுள்ளது. இப்பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, **2017** ஜூலை **1** முதல் **4** வரை இந்தியாவிலுள்ள அனைத்து **Facebook** பயனர்களுக்கும், அவரவர்

தாய்மொழியிலேயே ஒரு வாக்காளர் பதிவு நினைவூட்டல் காண்பிக்கப்படும். இதற்காக **Facebook** ஒரு தனிப்பட்ட **'Register Now'** பொத்தானை அதில் இணைத்துள்ளது. இந்த பொத்தானை தட்டும்போது **(Click),** பயனர்கள் நேராக தேசிய வாக்காளர் சேவைகளின் இணையபக்கத்திற்கு இட்டுச்செல்லப்படுவார்கள். அங்கே அவர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக்கொள்ள முடியும். தமிழ், ஆங்கிலம், மலையாளம், பஞ்சாபி, பெங்காலி, உருது, அசாமி, மராத்தி, ஒரியா, குஜராத்தி, கன்னடம், தெலுங்கு மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் இந்த நினைவூட்டல் காண்பிக்கப்படும்.

**3.** எந்த இந்திய மாநிலம், **2017 (Asian Athletics Championships)** ஆசிய தடகள சாம்பியன்சிப் போட்டிகளை நடத்தவுள்ளது?

**A.** தமிழ்நாடு

**B.** ஒடிசா

**C.** ஜார்க்கண்ட்

**D.** மகாராஷ்டிரா

விடை : **B.** ஒடிசா

**22**வது ஆசிய தடகள சாம்பியன்சிப் போட்டிகள் **(AAC-2017)** ஒடிசா மாநிலத்தின் புவனேசுவரிலுள்ள கலிங்கா அரங்கத்தில் **2017** ஜூலை **6** முதல் **9** வரை நடைபெறவுள்ளது. **45** நாடுகளிலிருந்து சுமார் **800** விளையாட்டு வீரர்கள் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். **AAC-2017-ன்** அதிகாரப்பூர்வச்சின்னம் **"Olly"** ஆகும். இது ஒடிசாவிலுள்ள அழிந்துவரும் இனமான **Olive Ridley** கடலாமைகளை குறிக்கிறது. இதில் வெற்றிபெறுபவர்கள், **2017** ஆகஸ்ட் **4-13** வரை இலண்டனில் நடைபெறும் உலக சாம்பியன்சிப் போட்டிகளில், நேரடியாக பங்குபெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். பொதுவாக ஒரு துறைக்கு இருவர் மட்டுமே பங்குபெறும் நிலையில், நிகழ்ச்சியை வழங்கும் காரணத்தால் இந்தியாவுக்கு மட்டும் ஒரு துறைக்கு மூன்று பேரை பங்குகொள்ளச்செய்ய சிறப்பு அனுமதியுண்டு.

**4. எந்த நாடு அதிகாரப்பூர்வமாக உலகின் முதல் வன நகரத்தை (World's First Forest City) கட்டியெழுப்பவுள்ளது?**

A. ஜப்பான்
B. சிங்கப்பூர்
C. பூடான்
D. சீனா



விடை : D. சீனா

மாசு மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராட சீனாவின் Liuzhou, Guangxi மாகாணத்தின் வடக்கில், உலகின் முதல் வன நகரத்தை அதிகாரப்பூர்வமாக கட்டியெழுப்ப சீனா தொடங்கியுள்ளது. இது 2020-ல் கட்டிமுடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகம் முழுவதும் பல பசுமைத்திட்டங்களை உருவாக்கிய Stefano Boeri Architetti குழு, இதனை வடிவமைத்துள்ளது. Liuzhou வன நகரம் ஆண்டுதோறும் சுமார் 10,000 டன் கரியமிலவாயுவை உறிஞ்சி 900 டன் உயிர்வளியை (Oxygen) உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சுய ஆற்றல் நிறைந்த நகரம் 30,000 மக்கள், 40,000 மரங்கள் மற்றும் கிட்டத்தட்ட 1 மில்லியன் தாவரங்களைக்கொண்டிருக்கும். இவ்வன நகரம் காற்றின் சராசரி வெப்பநிலையை குறைக்க உதவும், உள்ளூரில் காற்றின் தரத்தை மேம்படுத்தும், ஒலித்தடைகளை உருவாக்கும், வாழ்விடங்களை உருவாக்கும் மற்றும் பிராந்தியத்தில் பல்லுயிர்த்தன்மையை மேம்படுத்தும்.

**5. எந்த நாடு, 12வது G20 உச்சிமாநாட்டை நடத்தவுள்ளது?**

A. ஜெர்மனி
B. பிரான்சு
C. இத்தாலி
D. ஜப்பான்




விடை : A. ஜெர்மனி

12வது G20 உச்சிமாநாடு 2017 ஜூலை 7-8 அன்று, ஜெர்மனியின் Hamburg-ல்

நடைபெறவுள்ளது. G20 என்பது சர்வதேச நிதியின் நிரந்தரத்தன்மையை ஊக்குவிப்பதிலுள்ள கொள்கை சிக்கல்களின் உயர்மட்ட விவாதங்களை கற்றல், ஆய்வு செய்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களைக்கொண்ட 20 முக்கிய பொருளாதாரங்களுக்கான மத்திய வங்கி ஆளுநர்களின் ஒரு சர்வதேச மன்றமாகும்.

6. பெருவின் புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய-அமெரிக்கர் யார்?

A. Vinai Thummalapally

B. Krishna R Urs

C. Geeta Passi

D. Atul Keshap



விடை : B. Krishna R Urs

இந்திய வம்சாவளியைச்சேர்ந்த Krishna R Urs-ஐ, பெருவின் புதிய அமெரிக்க தூதராக Donald Trump நிர்வாகம் நியமித்துள்ளது. தற்போது, ஸ்பெயினின் Madrid-ல் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பொறுப்புகளை இவர் கவனித்து வருகிறார். பொருளாதார சிக்கல்களில் நிபுணத்துவம் வாய்ந்த இவர் தென் அமெரிக்காவின் Andean பகுதியின் நிபுணராகக்கருதப்படுகிறார்.

7. Union Public Service Commission (UPSC)-ன் புதிய உறுப்பினர் யார்?

A. K. R. Damle

B. V. S. Hejmadi

C. Manoj Soni

D. R. N. Banerjee



விடை : C. Manoj Soni

Dr.பாபாசாகேப் அம்பேத்கர் திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான Dr. Manoj Soni, அண்மையில் ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் புதிய உறுப்பினராக, UPSC-ன் தலைவர் பேராசிரியர்.

**David R. Syiemlieh** முன்பு இரகசியக்காப்புப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் அடுத்து வரும் ஆறு ஆண்டுகளுக்கு அல்லது தனது 65 வயது வரை பதவியிலிருப்பார். அமெரிக்காவின் Baton Rouge-ன் தலைவராகவும், தொலைதூரக்கல்விக்கான தலைவராகவும் இருந்ததற்காக இவருக்கு, "Honorary Mayor-President of the City of Baton Rouge" விருதினை World Education Congress Global Award வழங்கியது. தலைவருடன் சேர்த்து 10 உறுப்பினர்களைக்கொண்ட UPSC IAS, IFS மற்றும் IPS போன்ற போட்டித்தேர்வுகளை நடத்துகிறது.


8. அரசின் "Skill India" திட்டத்தின் பிரச்சாரத்துக்கான புதிய விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்தி நடிகை யார்?

A. ஐஸ்வர்யா ராய்

B. சோனம் கபூர்

C. தீபிகா படுகோனே

D. பிரியங்கா சோப்ரா




விடை : D. பிரியங்கா சோப்ரா

இந்தி நடிகை பிரியங்கா சோப்ரா, தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனத்தால் (National Skill Development Corporation), அரசின் "Skill India" திட்டத்தின் பிரச்சாரத்துக்கான புதிய விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரியங்கா தனது பிரபல்யத்தை பயன்படுத்தி ஓர் ஊடக பிரச்சாரத்தின் மூலம் இளைஞர்களை தமது திறன்களை வளர்த்துக்கொள்ள ஊக்கப்படுத்துவார். 2015 ஜூலையில் பிரதமர் மோடியால் இந்த "Skill India" திட்டத்தின் பிரச்சாரம் தொடங்கப்பட்டது. 2022-ம் ஆண்டில் 40 கோடி மக்களுக்கு திறன் பயிற்சியளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முன்னதாக, இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோலி, சச்சின் டெண்டுல்கர், இந்தி நடிகர்கள் Sidharth Malhotra மற்றும் Shabana Azmi மற்றும் பாடகி Mohit Chauhan ஆகியோரும் "Skill India" திட்டத்தின் நல்லெண்ண தூதர்களாக இருந்துள்ளனர்.

9. 2017 (Indian Film Festival of Melbourne) மெல்போர்ன் இந்திய திரைப்பட

விழாவின் தூதுவர் யார்?



A. நவாசுதீன் சித்திக்
B. வித்யா பாலன்
C. அமிதாப்பச்சன்
D. கங்கனா ரனாவத்

விடை : B. வித்யா பாலன்

விக்டோரியன் அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் 2017 மெல்போர்ன் இந்திய திரைப்பட விழாவின் தூதுவர், புகழ்பெற்ற இந்தி நடிகை வித்யா பாலன் ஆவார். 2017 ஆகஸ்ட் 10-22 வரை நடைபெறும் இந்த விழாவுக்கான மையக்கருத்து "Diversity" ஆகும். இது பெண் இயக்குநர்களின் படைப்புகளில் சிறப்பு கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது. இதில் 20 வெவ்வேறு மொழிகளைச்சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் மற்றும் குறும்படங்கள் திரையிடப்படும்.

10. எந்த மாநிலத்தில், கால்நடைகளுக்கான இந்தியாவின் முதல் இரத்த வங்கி அமைக்கப்படவுள்ளது?




A. ஒடிசா
B. பஞ்சாப்
C. அரியானா
D. இமாச்சலப்பிரதேசம்

விடை : A. ஒடிசா

கால்நடைகளுக்கான இந்தியாவின் முதல் இரத்த வங்கி, Odisha University of Agriculture and Technology (OUAT) வளாகத்தில் ₹3.25 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது. இந்நிதி மத்திய, மாநில அரசுகளுக்கிடையே 60:40 என்ற பகிர்விலிருக்கும். கால்நடை விவசாயிகள் தாமாக முன்வந்து இரத்தம் வழங்கலாம். இரத்த வங்கிகளும் மையங்களிலிருந்து குருதியை சேமிக்கும். குருதியேற்றும் வசதியும் இவ்வங்கியில் உள்ளது. இது கால்நடைகளின் பிரசவ காலத்தில் ஏற்படும் மரணத்தைத்தடுக்கும்.

## 2017 June 30

**1. எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் பிரம்மாண்ட ஜவுளி வர்த்தக நிகழ்வான "Textiles India 2017" தொடங்கியுள்ளது?**

A. சூரத்
B. அகமதாபாத்
C. காந்திநகர்
D. ராஜ்கோட்

விடை : C. காந்திநகர்

இந்தியாவின் முதல் பிரம்மாண்ட ஜவுளி வர்த்தக நிகழ்வான "Textiles India 2017", குஜராத்தின் காந்திநகரிலுள்ள மகாத்மா மந்திரில் 2017 ஜூன் 30 அன்று பிரதமர் மோடியால் தொடங்கிவைக்கப்பட்டது. உலகளாவிய ஆதார வள மையமாகவும், முதலீட்டு இலக்காகவும் இந்தியா உள்ளதென்பதை உலகுக்குக்காட்ட, மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தால் இந்த "Textiles India 2017" நடத்தப்பட்டுள்ளது. இந்த 3 நாள் மாநாட்டில் 2,500 சர்வதேச பொருள் வாங்குவோரும் 1,000 சர்வதேச மற்றும் உள்நாட்டு கண்காட்சியாளர்களும் பல சிறந்த ஆடை வடிவமைப்பாளர்களும் பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. 12வது G20-2017 உச்சி மாநாட்டில், இந்தியாவின் சார்பாக கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் தலைவர் யார்?**

A. அஜித் தோவாள்
B. ஜிதேந்திர சிங்
C. சுஷ்மா சுவராஜ்
D. நரேந்திர மோடி



விடை : D. நரேந்திர மோடி

ஜூலை 7-8 அன்று ஜெர்மனியின் Hamburg-ல் நடைபெறவுள்ள 12வது G20-2017 உச்சி மாநாட்டில், இந்தியாவின் சார்பாக கலந்துகொள்ளும் பிரதிநிதிகளின் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி ஆவார். 2017-க்கான மையக்கருத்து

**"Shaping an interconnected world"** ஆகும். இவ்வுச்சிமாநாடு நிரந்தரத்தன்மை **(Stability)**, நிலைத்தன்மை **(Sustainability)** மற்றும் பொறுப்புத்தன்மை **(Responsibility)** ஆகிய மூன்றினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. தன்னிச்சையான வர்த்தகம், சுற்றுச்சூழல், பயங்கரவாதம், நிலையான அபிவிருத்தி, ஆப்பிரிக்காவின் வளர்ச்சி, டிஜிட்டல் மயமாக்கம், குடியேற்றங்கள், உறுதியற்ற தன்மை போன்ற தலைப்புகள் இவ்வுச்சிமாநாட்டின் போது விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3. உத்தரபிரதேசத்தின் புதிய முதன்மைச்செயலாளராக (Chief Secretary) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A. Debashish Panda**

**B. Rajiv Kumar**

**C. Prashant Trivedi**

**D. Anurag Srivastava**



விடை : **B. Rajiv Kumar**

உத்தரபிரதேச மாநிலத்தில் **1981**-ம் ஆண்டு **IAS** அதிகாரியாக பணியாற்றிய **Rajiv Kumar,** உத்தரபிரதேசத்தின் புதிய முதன்மைச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்குமுன் இப்பதவியிலிருந்த **Rahul Prasad Bhatnagar,** நொய்டாவின் தலைவர் மற்றும் முதலீட்டு ஆணையராக பணியமர்த்தப்பட்டுள்ளார். இப்பதவிக்கு வருவதற்கு முன் **Rajiv Kumar,** இந்திய அரசின் கப்பல் அமைச்சகத்தில் செயலாளராக பணியிலிருந்தார்.

**4. எந்த இந்திய மாநிலத்திற்கு, 2வது உலகளாவிய திறன் மேம்பாட்டு உச்சி மாநாட்டில் (Global Skill Development Summit-2017) சிறப்பு விருது வழங்கப்பட்டது?**

**A.** உத்தரப்பிரதேசம்

**B.** உத்தரகாண்ட்

**C.** அசாம்

**D.** மணிப்பூர்



விடை : B. உத்தரகாண்ட்

2017 ஜூன் 23 அன்று பிரான்சின் பாரிசில் நடைபெற்ற 2வது Global Skill Development Summit-2017-ல், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியதற்காகவும் பயனுள்ள வகையில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதற்காகவும் உத்தரகாண்ட் மாநிலத்திற்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. பாரிசிலுள்ள இந்திய தூதரகம் மற்றும் Europe India Foundation for Excellence (EIFE) ஆகியவை Organization for Economic Co-operation and Development (OECD) மற்றும் National Skill Development Corporation (NSDC) ஆகியவற்றுடன் இணைந்து GSDM-2017-ஐ நடத்தியது. இதன் மையக்கருத்து "Making India a Global Hub of Skilled Manpower -The Next Step" ஆகும். இந்நிகழ்வின் நோக்கம், இந்தியாவில் திறன் மேம்பாடு பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதும் குறிப்பிட்ட துறைகளின் தேவைகளை மதிப்பிடுவதுமாகும்.

5. எந்த மத்திய அமைச்சர், மாநில அரசு அலுவலர்களுக்கான "COMMIT" எனும் புதிய பயிற்சித்திட்டத்தை தொடங்கிவைத்தார்?

A. ஜிதேந்திர சிங்
B. இரவிசங்கர் பிரசாத்
C. அருண் ஜெட்லி
D. பிரகாஷ் ஜவடேகர்



விடை : A. ஜிதேந்திர சிங்

(Ministry of Personnel, Public Grievances and Pensions Personnel) மத்திய பணியாளர், பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதியர்கள் துறைகளின் அமைச்சரான Dr. ஜிதேந்திர சிங், மாநில அரசு அலுவலர்களுக்கான Online Modified Modules on Induction Training (COMMIT) எனும் புதிய பயிற்சித்திட்டத்தை தொடங்கிவைத்துள்ளார். இதன் முக்கிய நோக்கம், பொதுச்சேவைகளை மேம்படுத்துவதும், அவற்றை வழங்கும் அலுவலர்களின் திறனை மேம்படுத்துவதுமாகும். ஏற்கனவே நடப்பிலிருக்கும் 12 நாள் Induction Training Programme (ITP)-ல் 10000 பேர் மட்டுமே கலந்துகொள்ள இயலும். ஆனால், COMMIT-ல் ஆண்டுக்கு 3.3 இலட்சம் அலுவலர்கள் கலந்துகொள்ள முடியும்.

**6. எந்த இந்திய நிறுவனம், எ்கு மெட்ரோ இரயில் பெட்டிகளை உருவாக்க ஜப்பானிய நிறுவனமான Kawasaki Heavy Industries Ltd (KHI) உடன் ஒப்பந்தம் செய்துள்ளது?**

A. BHEL

B. ONGC

C. SAIL

D. Tata Steel

விடை : **A. BHEL**

துருவுறா எ்கிரும்பு (Stainless Steel) மெட்ரோ இரயில் பெட்டிகளை உருவாக்க ஜப்பானிய நிறுவனமான Kawasaki Heavy Industries Ltd (KHI) உடன் BHEL (The Bharat Heavy Electricals Limited) நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. கலை வடிவமைப்பு, பொறியியல் மற்றும் உற்பத்தி வசதிகளை BHEL-ல் ஜப்பானிய தொழில்நுட்பத்தைக்கொண்டு நிறுவுதல் ஆகியவை இவ்வொப்பந்தத்தில் அடங்கும். இந்தியாவில் மும்பை-அகமதாபாத் அதிவிரைவு இரயில் திட்டத்தில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள Shinkansen அதிவிரைவு புல்லட் இரயில்களின் தயாரிப்பாளரும் வழங்குநரும் KHI தான்.

**7. 2017 தேசிய புள்ளியியல் நாளின் (National Statistics Day) மையக்கருத்து என்ன?**

A. Human empowerment

B. Agriculture and Farmers' Welfare

C. Administrative Statistics

D. Trees and their calculative lives




விடை : **C. Administrative Statistics**

இந்தியாவில் தேசிய புள்ளியியல் நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 29 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நாள் சமூகப்பொருளாதார திட்டமிடல் மற்றும் கொள்கை உருவாக்கங்களில் புள்ளிவிவரங்களின் முக்கியத்துவம்

பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், "இந்திய புள்ளியியலின் தந்தை" மறைந்த பேராசிரியர்.Prasanta Chandra Mahalanobis அவர்களின் பிறந்தநாளில், புள்ளியியல் மற்றும் பொருளாதாரத்திட்டமிடல் துறைகளில் அவரின் போற்றத்தக்க பங்களிப்பை அங்கீகரிப்பதற்காகவும் கொண்டாடப்படுகிறது. 2017-ல் வரும் இந்நாளுக்கான மையக்கருத்து "Administrative Statistics" ஆகும்.

**8. எந்த மாநிலத்தில், இந்தியாவின் மிகப்பெரிய நன்னீர் மீன் காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது?**



A. தமிழ்நாடு
B. மேற்கு வங்கம்
C. குஜராத்
D. ஜார்கண்ட்

விடை : D. ஜார்கண்ட்

ஜார்கண்ட் மாநிலத்தின் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக, இராஞ்சியிலுள்ள Bhagwan Birsa Munda பல்லுயிர் பூங்காவில் "Ranchi Machchli Ghar" எனும் இந்தியாவின் மிகப்பெரிய (36,000 சதுர அடி) நன்னீர் மீன் காட்சியகத்தை ஜார்கண்ட் மாநில முதல்வர் Raghubar Das திறந்துவைத்தார். இங்கு 58 மீன் தொட்டிகளில் 120 இனங்களைச்சேர்ந்த 1500 மீன்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்திய மீனினங்கள் தவிர, அரிய மற்றும் பிரபலமான மீனினங்களை பாங்காக், மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து கொண்டுவந்துள்ளனர்.

**9. ஐ. நா-வின் வரி நிதியத்திற்கு இந்தியா எவ்வளவு நிதியை அளித்துள்ளது?**



A. $2 இலட்சம் டாலர்கள்
B. $1 இலட்சம் டாலர்கள்
C. $1.5 இலட்சம் டாலர்கள்
D. $2.75 இலட்சம் டாலர்கள்

விடை : B. $1 இலட்சம் டாலர்கள்

வரி சிக்கல்களால் நடைபெறும் விவாதங்களில், வளரும் நாடுகள் தீவிரமாக பங்கேற்க உதவும் (UN Trust Fund for International Cooperation in Tax Matters (the UN Tax Fund)) ஐ. நா-வின் வரி நிதியத்திற்கு இந்தியா $1 இலட்சம் டாலர்களை (₹64.49 இலட்சம்) அளித்துள்ளது. இதன் மூலம், ஐ.நா. வரி நிதியத்திற்கு தானாக முன்வந்து பங்களிப்பை வழங்கிய முதல் நாடு எனும் பெருமை இந்தியாவைச்சேர்ந்துள்ளது. (UN Tax Committee - ஐ.நா. வரிக்குழுவானது) UN Economic and Social Council (ESOSOC)-ன் துணை நிறுவனமாகும், இது இரட்டை வரி ஒப்பந்தங்கள் (double taxation treaties), (transfer pricing-பரிமாற்ற விலையிடல் (இலாபத்தை மாற்றுவதற்காக)), சேவைகளின் வரிவிதிப்பு போன்றவற்றிற்கு வழிகாட்டுதல்களை வழங்குகிறது. ஐ.நா வரி நிதியத்தின் நோக்கம், International Cooperation in Tax Matters (ஐ.நா. வரிக்குழு) வல்லுனர்கள் குழுவின் பணியை ஆதரிப்பதாகும்.

10. இந்தியாவின் புதிய தலைமை தேர்தல் ஆணையர் யார்?

A. SK Khurana

B. OP Rawat

C. Nasim Zaidi

D. Achal Kumar Jyoti



விடை : D. Achal Kumar Jyoti

1975-ல் குஜராத்தில் IAS அதிகாரியாக பணிபுரிந்த Achal Kumar Jyoti, இந்தியாவின் புதிய தலைமை தேர்தல் ஆணையராக ஓராண்டுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்குமுன் இப்பதவியிலிருந்த Nasim Zaidi, 2017 ஜூலை 6 அன்று ஓய்வுபெறவுள்ளார். தற்சமயம் Achal Kumar Jyoti, O P Rawat உடன் இந்தியாவின் தேர்தல் ஆணையராக பணியிலுள்ளார். தேர்தல் ஆணையர் மற்றும் தலைமை தேர்தல் ஆணையரின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது அவர்கள் 65 வயதை எட்டும்வரையாகும்.

FOR MORE CURRENT AFFAIRS VISIT WWW.WINMEEN.COM